# தூரன்

# எழுத்தோவியங்கள்

# தூரன் எழுத்தோவியங்கள்

*

பெ. தூரன்

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்
தேனாம்பேட்டை சென்னை-18

அமுதம்—177
உரிமை பதிவு
முதற் பதிப்பு, மார்ச்—1959
இரண்டாம் பதிப்பு, ஆகஸ்ட்—1960

விலை ரூ. 2-25

நேஷனல் ஆர்ட் பிரஸ், சென்னை-18

# பொருளடக்கம்


| எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1. | அன்னை தந்த ஒளி | 1 |
| 2. | விதியின் பிழை | 18 |
| 3. | பஞ்சக் காலன் | 30 |
| 4. | பட்டணம் கை | 42 |
| 5. | உறக்கம் தந்த ஓவியம் | 52 |
| 6. | பூவின் சிரிப்பு | 63 |
| 7. | முன்னேற்றம் | 67 |
| 8. | காற்றாடி | 72 |
| 9. | கரிக் குருவி | 75 |
| 10. | குறட்டை | 79 |
| 11. | யார் விளையாட்டு ! | 86 |
| 12. | கணவன் | 112 |
| 13. | கங்கணம் | 130 |

# தூரன் எழுத்தோவியங்கள்

## அன்னை தந்த ஒளி

"சொங்கப்பா, ஒரு நல்ல அழகான பெண்ணிருக்கிறாள், கலியாணம் பண்ணிக்கிறாயா?" என்று அவனைக் கேட்காதவர்கள் காட்டுப்பாளையத்தில் இருக்க மாட்டார்கள். ஆண்கள் மட்டுமல்ல; பெண்களும் கேட்பார்கள். சிறுவர் சிறுமிகளுக்கும் இந்தக் கேள்வியைக் கேட்டு அவனிடம் விடை பெறுவதில் ஒரு தனி மகிழ்ச்சி இருந்தது.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லச் சொங்கப்பனுக்குக் கொஞ்ச நேரம் ஆகும். இரண்டு மூன்று தடவை வற்புறுத்திய பிறகுதான், "எனக்குச் சோறு போடப் பெரிய பண்ணைக்காரர் இருக்கிறாங்கோ. எனக்கு எதுக்குக் கலியாணம்?" என்று ஆழ்ந்து யோசனை செய்து முடிவுகட்டியவன் போலப் பதில் சொல்லுவான். அதே பதிலைத்தான் அவன் ஒவ்வொரு தடவையும் சொல்லுவானென்றாலும் அது பழக்கத்தால்கூட விரைவிலே வந்துவிடாது. ஆழ்ந்த சிந்தனையின் முடிவு வெளியாவதுபோல வெகுநேரம்

கழித்துத்தான் அது சொங்கப்பன் வாயை விட்டுக் கிளம்பும்.

சொங்கப்பன் பதில் சொல்லும்போது அவன் முகம் ஒரு தனிக் காட்சியாக இருக்கும். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா? அப்படி அவன் முகத்தில் ஒன்றுமே தெரியாது. அவன் முகம் எப்பொழுதும் குப்பையண்டின இருட்டறையைப் போல் ஒரே மாதிரியாக இருக்கும். மனத்தில் உள்ள உணர்ச்சிகளையெல்லாம் கண்களாகிய சாளரங்களின் வழியே பார்த்துவிடலாம் என்று நினைப்பவர்கள் அவனிடம் வந்தால் ஏமாந்து போவார்கள். அப்படி அவன் கண்களில் ஒருவித ஒளியையும் காண முடியாது.

அதிகம் சொல்லுவானேன்? சொங்கப்பன் ஓர் அதிமந்தன். அவனுக்கு மூளையின் சக்தி மிகக் குறைவு. அவனுடைய பிறவிக்கூறு அப்படி. அவனுக்குத் தாய் தந்தையர் யார் என்று ஒருவருக்கும் தெரியாது; அவனுக்கும் தெரியாது. எப்படியோ இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒருநாள் காட்டுப் பாளையத்துக்கு அவன் வந்து சேர்ந்தான். அப்பொழுது அவனுக்கு வயது பத்திருக்கலாம். வந்தவன் அங்கேயே நிலைத்துவிட்டான். காட்டுப்பாளையம் கொங்கு நாட்டிலே ஒரு சிறிய ஊர்.

சொங்கப்பனுக்கு மூளைத் திறமை இல்லையென்றாலும் நல்ல உடற் கட்டு இருந்தது; பண்ணையிலே வேலை செய்வதற்குக் கொஞ்சமும் சளைக்கமாட்டான். அவனுக்கு வேண்டியதெல்லாம் வயிறார உணவுதான்.

சோற்றுக்கு வேலை செய்ய ஓர் ஆள் கிடைத்ததென்று மகிழ்ச்சியோடு காட்டுப்பாளையம் பெரிய பண்ணைக்காரர் அவனைத் தம் வசத்திலே வைத்துக்

கொண்டார். மற்றவர்களுக்கு இதுபற்றிக் கொஞ்சம் பொறுமைகூட உண்டு.

இரவிலே வேலையெல்லாம் தீர்ந்த பிறகு காட்டுப் பாளையத்து மக்கள் கிராமச் சாவடியில் உட்கார்ந்து பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். சொங்கப்பன் சில சமயங்களில் அங்கே வந்து சேரு வான். அப்பொழுது பேச்சும் கேலியும் எல்லாம் அவன் மேலே திரும்பிவிடும். அவனுக்குப் பெண் தயார் செய்ய எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். அவனுடைய கலியாணப் பேச்சில்தான் அரட்டை தொடங்கும். அது சலித்துப் போனால்தான் வேறு பேச்சு.

ஒவ்வொரு சமயத்திலே அவனுடைய தாய் தகப் பன் யாரென்ற ஆராய்ச்சியும் கிளம்பும். ஒரே மூச்சில் பலபேர் அவனை, "உனக்கு அம்மா யாரடா?" என்று கேட்பார்கள். "அம்மா இருக்கட்டும், அப்பன் யாரு?" என்று இன்னும் சில பேர் கேட்பார்கள். ஏதாவது ஒரு கேள்வியைப் புரிந்துகொண்டு அதற்குப் பதில் கொடுக்கவே சொங்கப்பனுக்கு வெகு நேரம் பிடிக்கும். காதில் விழுந்த விஷயம் இருட்டு நேரத்திலே காட்டு வழியிலே அகப்பட்டதுபோல அது மூளைக்குப் போவ தற்குத் திண்டாடுமோ என்னவோ? அப்படியிருக்க அத்தனை பேரும் ஒரே மூச்சில் கேட்ட கேள்விகளுக்கு அவன் எப்படிப் பதில் கொடுக்கப் போகிறான்?

ஒரு நாள் அவன் இப்படித் தத்தளித்துக் கொண் டிருக்கும்போது ஒருவன், "இல்லையடா, சொங்கப் பனைச் சங்கம் புதரிலிருந்து எடுத்து வந்திருப்பார்கள்" என்று தானாகவே கண்டுபிடித்த பதிலைச் சொல்லி வைத்தான். வெறும் கேலி என்ற நினைப்பில்தான்

அவன் சொன்னான். ஆனால் அவன் கூறியது எல்லோருக்கும் பிடித்துவிட்டது. சொங்கப்பனுக்கும் நாளடைவில் அது உண்மையாகவே எப்படியோ அவன் மனத்தில் பதிந்து போயிற்று.

கிராமங்களிலே எத்தனையோ வேண்டாத நாய்களும், பூனைகளும் யாருக்கும் தேவையில்லாத குட்டிகளைப் போட்டு விடும். அந்தக் குட்டிகளைத் தூக்கி முள் நிறைந்த சங்கம் புதரிலே எறிந்து விடுவார்கள். பெரிய பண்ணைக்காரரின் ஏவலின்படி சொங்கப்பனே இப்படித் தூக்கி வீசியிருக்கிறான். அந்தக் குட்டிகளைப் போலத் தானும் சங்கம் புதரிலிருந்து வந்ததாகச் சொல்லுவது அவன் மூளைக்குச் சரியென்று தோன்றியது.

அதுமுதல் அவனை யாராவது, "நீ எப்படிப் பிறந்தாய்?" என்றால், மெதுவாக நினைத்துப் பார்த்து, "சங்கம் புதரில் பிறந்தேன்" என்பான். காட்டுப்பாளையத்து மக்களுக்கு இந்தப் பதிலும் மாறாத சிரிப்பைக் கொடுக்கும்.

சொங்கப்பன் பார்ப்பதற்கு மனித வடிவத்திலே இருந்தாலும் எருமை மூளை படைத்தவன் என்பது காட்டுப்பாளையத்திலே பொதுவான எண்ணம்.

ஆனால் இப்பொழுது அது மாறிவிட்டது. சொங்கப்பனிடத்திலே எல்லோரும் மரியாதை காட்டத் தொடங்கி விட்டார்கள். யாரும் அவனை இப்பொழுது கேலி செய்வதில்லை.

இந்த விதமான மாறுதல் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் உண்டு.

ஆப்பக்காரி ராமாத்தாள் என்றால் அந்த வட்டாரத்தில் எல்லோருக்கும் தெரியும். அவள் தயாரிக்

கும் ஆப்பம் அத்தனை பெருமை வாய்ந்தது. அதை ஒரு தடவை வாங்கி உண்டவன் அவளை மறப்பதில்லை.

ராமாத்தாள் அரைத்த அரிசிமாவைக் கொண்ட சட்டியும் கூடையுமாகக் காலை ஏழு மணிக்கெல்லாம் சந்தைப் பேட்டை முக்கிற்குப் புறப்பட்டு விடுவாள். காட்டுப்பாளையத்தி லிருந்து அந்த இடம் சுமார் அரை மைல் இருக்கும். அங்குதான் அவள் வியாபாரமெல்லாம். சுமார் பத்து மணி வரையிலும் அந்த வழியிலே வருகிறவர்களில் பலர் அவள் உட்கார்ந்திருக்கிற வேப்ப மரத்தடியில் ஆப்பம் வாங்கிச் சாப்பிடுவதற்காகத் தங்குவார்கள். சுறுசுறுப்பாக வியாபாரம் நடக்கும்.

ராமாத்தாளுக்குப் பகலெல்லாம் வேலை. பத்து மணிக்கு ஆப்பக் கடையை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்ததும் சமையல் செய்யத் தொடங்குவாள். சமைத்துச் சாப்பிட்டதும் வெற்றிலை போட்டுக்கொண்டு கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்பாள். பிறகு அடுத்த நாள் வியாபாரத்துக்காக மாவரைக்கத் தொடங்கி விடுவாள். வீட்டிலே அவளுக்கு உதவி செய்ய யாரும் கிடையாது. கலியாணம் ஆகி இரண்டு ஆண்டுகளுக்குள்ளே அவள் விதவையானாள். குழந்தைகளும் இல்லை. அவளைக் கவனிப்பதற்கு வேறு சுற்றத்தாரும் இல்லை.

இப்படி நாள் முழுதும் வேலை செய்தாலும் அவளுக்குச் சலிப்புக் கிடையாது. அவளுடைய இருண்ட வாழ்வை மறக்க வேலைதான் ஒரே வழியாக இருந்தது.

ஆண்டுக் கணக்காக அவள் இப்படி வாழ்க்கை நடத்தி வந்தாள். தள்ளாத வயது வந்த காலத்திலும்

அவள் ஆப்பக் கடையை நிறுத்தவில்லை. ஆனால் காட்டுப்பாளையத்திலிருந்து சந்தைப்பேட்டைக்கு அரிசி மாச் சட்டி, அடுப்பு முதலிய சாமான்களை எடுத்துக் கொண்டு போவதுதான் பெரிய பிரச்சினையாகி விட்டது.

ஒருநாள் காலையில் ராமாத்தாள் சட்டியிலுள்ள அரிசி மாவைக் கூடையில் வைத்துத் தூக்கிக்கொண்டு தடுமாறித் தடுமாறிச் சந்தைப்பேட்டைக்குப் போவதைச் சொங்கப்பன் தற்செயலாகப் பார்த்து விட்டான். அவள் கொஞ்ச தூரம் சென்று பாதை வளைவிலே மறையும் வரையில் அவன் அவளைப் பார்த்துக் கொண்டு மௌனமாக நின்றுகொண்டிருந்தான். அவன் மனத்திலே என்ன சிந்தனை உதயமாயிற்றோ தெரியாது. திடீரென்று அவளை நோக்கி வேகமாக நடக்கலானான்.

"சொங்கப்பா, ஆப்பம் இழுக்குதா?" என்று யாரோ கேட்டார்கள். அது அவன் காதில் விழவில்லை. ஆனால் ஆப்பம் அவனை இழுக்கவில்லை என்பது மட்டும் நிச்சயம். ஏனென்றால் அவன் அந்த ஆப்பத்தை ஒருநாள் கூடத் தின்றதில்லை.

சொங்கப்பன் வேகமாக நடந்து சென்று ராமாத்தாளுக்கு முன்னாலே நின்றான். அவள் தலையிலே வைத்திருந்த கூடையை எடுத்துத் தன் தலையிலே வைத்துக்கொண்டான். "நான் கொண்டு வாரேன்" என்று சொல்லிவிட்டுச் சந்தைப்பேட்டையை நோக்கி நடக்கலானான்.

ராமாத்தாளுக்கு ஒரே மலைப்பாகப் போய்விட்டது. அவளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பேசாமல் அவனைப் பின் தொடர்ந்து நடந்தாள். 'எதற்காக

இந்த அரைப் பைத்தியம் இப்படித் தூக்கிக்கொண்டு வருகிறது? தூக்கின கூலிக்கு ஆப்பம் கேட்குமோ? இவன் வயிற்றுக்கு ஆப்பங் கொடுத்தால் ஒரு சட்டி மாவும் காணாதே' என்று இப்படி என்ன என்னவோ எண்ணங்கள் அவள் உள்ளத்தில் எழுந்து குழம்பிக் கொண்டிருந்தன.

சொங்கப்பன் அவளுக்கு உதவி புரிய வந்த காரணத்தை அவளால் அன்று கண்டுபிடிக்க முடியவில்லை. அடுத்த இரண்டு ஆண்டுகளிலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அன்று அவன் சந்தைப்பேட்டை மூக்கில் கூடையை இறக்கி வைத்துவிட்டு ஒரு கணங்கூட அங்கு நிற்காமல் குடுகுடுவென்று ஓடிப் போய்விட்டான். அன்று தொடங்கியவன் அடுத்த இரண்டு ஆண்டுகளிலும், அதாவது ராமாத்தாள் உயிரோடிருந்த வரையிலும், அவன் இந்த உதவியை நாள்தோறும் அவளுக்குச் செய்து வந்தான். ராமாத்தாள் சந்தைப் பேட்டைக்குப் புறப்படுகிற நேரம் பார்த்து அவள் வீட்டுத் திண்ணையிலே வந்து நிற்பான். அவளிடம் பேச அவன் விரும்புவதில்லை. கூடையைத் தூக்கித் தலைமேல் வைத்துக் கொண்டு சந்தைப்பேட்டைக்கு மௌனமாகப் புறப்படுவான். அப்படிச் செய்வதிலே அவனுக்கு ஒரு தனி இன்பம் உண்டாயிற்றென்று தோன்றியது.

ராமாத்தாளுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. அவன் மூளையைப் போலவே அவன் செய்கையும் புதிராக இருந்தது. "ஒன்றிரண்டு ஆப்பமாவது தின்று விட்டுப் போ" என்று சொங்கப்பனிடம் அவள் பல நாட்கள் சொல்லிப் பார்த்தாள். அவன் ஆப்பத்தைக்

கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. ஆப்பத்தைவிட வேறு என்னவோ அவனுக்கு இன்பம் கொடுத்தது.

"சொங்கப்பா, தினமும் இப்படி எனக்காக வேலை செய்கிறாயே, இந்தா ஆப்பம்—இன்றைக்காவது ஒன்று சாப்பிடு" என்பாள் ராமாத்தாள்.

சொங்கப்பன் முகத்திலே ஓர் அசட்டுச் சிரிப்பு வழியும். அவ்வளவுதான், அடுத்த நொடியிலே அவனைக் காண முடியாது.

"டேய், நீ ஆப்பம் சாப்பிடாவிட்டால் இனிமேல் என் கூடையைத் தொடப்படாது" என்றுகூடக் கிழவி மிரட்டிப் பார்த்தாள். பலிக்கவில்லை. ஆப்பத்துக்காக அவன் வேலை செய்யவில்லை என்று தெளிவாகத் தெரிந்து போய்விட்டது.

கிழவி காசூ கொடுத்துப் பார்த்தாள். "வெற்றிலை பாக்காவது போட்டுக்கோ" என்று சொல்லிப் பார்த்தாள். ஒன்றையும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. அவள் பொக்கை வாயிலிருந்து இப்படி வரும் வார்த்தைகளே அவனுக்கு எல்லா இன்பத்தையும் கொடுத்து விட்டனவோ என்னவோ? அந்த வார்த்தைகளை மட்டும் கேட்டுக்கொண்டு வழக்கம்போல் பொருளில்லாத ஓர் அசட்டுச் சிரிப்பைச் சிரித்துவிட்டு அவன் போய் விடுவான்.

அந்தச் சிரிப்பு நாளாக நாளாக ராமாத்தாளுக்கு ஒரு தனிப்பட்ட இன்பத்தைக் கொடுக்கத் தொடங்கியது; அவளுடைய உள்ளத்துக்குள்ளே எங்கோ ஒரு மூலையில் மங்கிக் கிடந்த தாய்மை உணர்ச்சியைக் கிளுகிளுக்கச் செய்தது.

ஒன்றிரண்டு நாட்களில் இது ஏற்படவில்லை. இரண்டு ஆண்டுகளாக நாள் தவறினாலும் சொங்கப்பன்

தவருது செய்துவந்த உதவி அந்த உணர்ச்சியை உறக்கத்தினின்றும் தட்டி யெழுப்பியது.

ராமாத்தாள் சொங்கப்பனை ஆப்பந் தின்னும்படி கூப்பிடுவதைக்கூட மறந்து விட்டாள். அப்படி அழைப்பது வீண் என்றும் அவளுக்குத் தெரிந்து விட்டது. ஆனால் அவன் அவளுடைய உள்ளத்திலே ஒட்டிக்கொண்டு விட்டான். சங்கம் புதரிலே பிறந்தவன் என்று அவனை யாராவது கேலியாகப் பேசுவதைக் கேட்டால் அவள் நெஞ்சம் சங்கம்புதர் முள்ளாகக் குத்தத் தொடங்கியது.

“நாய்க் குட்டியைச் சங்கம்புதரிலே போடுகிறவன் மனிதனா? அவன் மிருகத்துக்கும் கீழானவன்” என்று அவள் அடிக்கடி முணுமுணுப்பாள். அதைக் கேட்டவர்கள் அவள் ஏன் இப்படிப் பிதற்றுகிருள் என்று ஆச்சரியப்படுவார்கள்.

முன்பெல்லாம் ராமாத்தாள் இயந்திரம் போல வேலை செய்து வந்தாள். ஆப்பம் சுடுவதையும் வேறு வேலை செய்வதையும் அவளால் நிறுத்த முடியாது. நிறுத்தினுல் உயிர் பாரமாக இருந்தது. ஆனால் இந்தப் புதிய உணர்ச்சி எழுந்த பிறகு அவளுடைய வேலைகளுக்கு ஒரு புதிய பொருளும், அவசியமும் ஏற்பட்டு விட்டன; அதனால் அவள் வாழ்க்கையிலே இன்பம் காணத் தொடங்கினாள்.

ஆனால் அந்த இன்பம் வெகுநாள் நீடிக்கவில்லை. ராமாத்தாள் திடீரென்று ஒரு நாளிரவு காய்ச்சல் வந்து சோர்ந்து படுத்து விட்டாள். மறுநாட் காலையில் வழக்கம் போலச் சொங்கப்பன் வாசலில் வந்து வெகு நேரம் காத்திருந்தான். அவன் வீட்டுக்குள் நுழைகிற பழக்கம் இல்லை.

"வீட்டுக்குள்ளே வா" என்று ராமாத்தாள் பல முறை அழைத்ததுண்டு.

"இங்கேயே நிக்கிறேன். வீட்டுக்குள்ளே இருட்டாக இருக்குது" என்பான் சொங்கப்பன்.

இருண்ட அறையைக் கண்டால் அவனுக்குப் பயம். ஊர் பேர் அறியாத ஒரு கருப்பைக்குள்ளே அவன் பட்ட துன்பத்தின் விளைவோ என்னவோ, இந்தப் பயம் அவனுக்கு எப்பொழுதும் உண்டு.

சொங்கப்பன் காத்திருந்தான். கிழவி கட்டிலை விட்டு எழுந்திருக்கவே யில்லை. அவன் போய் விட்டான்.

நான்கு நாட்கள் ராமாத்தாள் எழுந்திருக்க வில்லை; படுத்த படுக்கையாகக் கிடந்தாள். பக்கத்து வீட்டுப் பெண்ணொருத்தி கஞ்சி வைத்துக் கொடுத்தாள். அதைக்கூட அவள் சாப்பிடவில்லை.

அந்த நான்கு நாட்களும் காலையிலே சொங்கப்பன் அவள் வீட்டுத் திண்ணைக்கு வருவதிலே தவறவில்லை. நான்காவது நாள்தான் அவளுக்கு உடம்பு சரியில்லை என்று அவனுக்குப் புலப்பட்டது.

ஐந்தாம் நாட் காலையிலே ராமாத்தாள் அடிக்கடி, "சொங்கப்பா, சொங்கப்பா" என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தாள். அவன் திண்ணைக்கு வந்ததை அறிந்ததும், மெதுவாகக் கட்டிலை விட்டு இறங்கி வெளியே வந்தாள். கஞ்சி கூடக் குடிக்காமல் கிடந்ததால் கால்கள் தள்ளாடின; தலை சுற்றியது. அவள் அப்படியே மயக்கம் போட்டுக் கதவின் மேல் சாய்ந்தாள்.

சொங்கப்பன் அவளைத் தூக்கிக்கொண்டு போய்க் கட்டிலில் படுக்க வைத்தான். கொதிக்கும் அவளுடைய உடம்பின் பரிசம் அவனுக்குச் சொல்ல முடி

யாத ஏதோ ஓர் உணர்ச்சியைக் கொடுத்தது. தான் அவளைத் தூக்கிச் செல்வதாக அவன் உணரவில்லை; எட்டு மாதக் குழந்தையாகத் தன்னை அவள் தூக்கிப் போவதாக அவனுடைய அதிமந்த மூளையில் பட்டது.

அன்று அவன் ராமாத்தாளை விட்டுப் பிரியவில்லை. பெரிய பண்ணைக்காரரையும் தன் வயிற்றையும் மறந்தான்.

ராமாத்தாள் கண் விழித்துப் பார்க்கிற போது அவன் அவளுடைய காலருகே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"சொங்கப்பா, அதோ அந்தப் பானையிலே அரிசி இருக்குது. ஒரு படி எடுத்துத் தண்ணீரிலே ஊறப் போடு" என்று மெதுவாகச் சொன்னாள் ராமாத்தாள்.

மறுநாள் கூடை சுமக்கலாம் என்ற நினைப்போடு சொங்கப்பன் அரிசியை ஊற வைத்தான். மாலையிலே அதை ஆட்டுக் கல்லில் போட்டு ராமாத்தாள் சொல்லியவாறு பக்குவமாக அரைத்தான். அரிசி மாவின் பக்குவத்தைப்பற்றி அன்று ராமாத்தாள் தனிக் கவனம் செலுத்தினாள். நாலைந்து முறை ஆட்டுக் கல்லிலிருந்து கொஞ்சம் மாவை எடுத்துவரச் சொல்லி விரல்களிலே தொட்டுப் பார்த்துக் கொண்டாள்.

மறுநாட் காலையில் ஐந்து மணிக்கே ராமாத்தாள் சொங்கப்பனை எழுப்பினாள்.

"அந்த அடுப்பையும் சட்டியையும் இப்படிக் கட்டிலுக்குப் பக்கத்திலே கொண்டுவா—என்றால் அங்கே நடக்க முடியாது" என்றாள் அவள்.

சொங்கப்பன் கட்டிலுக்குப் பக்கத்தில் அடுப்பு மூட்டினான். அவள் சொல்லுகிறபடியெல்லாம் குழந்

தையைப் போல ஓடியாடி வேலை செய்தான். "நானே ஆப்பம் சுட்டுமா?" என்று அவன் கேட்டான்.

"வேண்டாம் சொங்கப்பா, இன்று ஒரு நாளைக் காவது என் கையாலே சுட்ட ஆப்பத்தை நீ சாப்பிட வேணும். அது ஒண்ணுதான் எனக்கு இப்போ ஆசை" என்று அவள் கொஞ்சிய குரலிலே சொன்னாள்.

"சரியம்மா" என்றான் சொங்கப்பன்.

அம்மா என்று எதிர்பாராது வந்த அந்தச் சொல் இரண்டு பேரையும் அமிழ்தக் கடலிலே முழுக்கி விட்டது.

சொங்கப்பன் ஆப்பத்தைத் தனது இயல்பான பசிக்கேற்றவாறு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ராமாத்தாள் அவன் முகத்தையும் தலையையும் கையாலே தடவிக் கொண்டிருந்தாள்.

சொங்கப்பன் சாப்பிட்டு முடிந்ததும், அவனைத் தன் அருகிலே கட்டிலின் மேலேயே உட்காரும்படி ராமாத்தாள் சொன்னாள், அவனும் உட்கார்ந்தான்.

"சொங்கப்பா, அதோ அந்த மூலையிலே பெரிய மிடா இருக்குது பார்த்தாயா? அதுக்குக் கீழே இரண்டாயிரம் ரூபாய் புதைச்சு வச்சிருக்கிறேன். நீ அதை எடுத்துக்கோ. யாருக்கும் கொடுத்து விடாதே" என்றாள் அவள்.

"ரண்டாயிரமா?" என்று சொங்கப்பன் ஒன்றும் புரியாமல் கேட்டான்.

"ஆமாம். இந்த நாப்பது வருசமா ஆப்பஞ் சுட்டுச் சம்பாதிச்ச மிச்சம்—எல்லாம் உனக்குத்தான். அதை வைத்து ஒரு கலியாணம் பண்ணிக்கிட்டு நீ சொகமா, பிள்ளை குட்டிகளோடு வாழவேணும்" என்றாள்.

தையைப் போல ஓடியாடி வேலை செய்தான். "நானே ஆப்பம் சுடட்டுமா?" என்று அவன் கேட்டான்.

"வேண்டாம் சொங்கப்பா, இன்று ஒரு நாளைக் காவது என் கையாலே சுட்ட ஆப்பத்தை நீ சாப்பிட வேணும். அது ஒண்ணுதான் எனக்கு இப்போ ஆசை" என்று அவள் கொஞ்சிய குரலிலே சொன்னுள்.

"சரியம்மா" என்ருன் சொங்கப்பன்.

அம்மா என்று எதிர்பாராது வந்த அந்தச் சொல் இரண்டு பேரையும் அமிழ்தக் கடலிலே முழுக்கி விட்டது.

சொங்கப்பன் ஆப்பத்தைத் தனது இயல்பான பசிக்கேற்றவாறு சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ராமாத்தாள் அவன் முகத்தையும் தலையையும் கையாலே தடவிக் கொண்டிருந்தாள்.

சொங்கப்பன் சாப்பிட்டு முடிந்ததும், அவனைத் தன் அருகிலே கட்டிலின் மேலேயே உட்காரும்படி ராமாத்தாள் சொன்னுள். அவனும் உட்கார்ந்தான்.

"சொங்கப்பா, அதோ அந்த மூலையிலே பெரிய மிடா இருக்குது பார்த்தாயா? அதுக்குக் கீழே இரண் டாயிரம் ரூபாய் புதைச்சு வச்சிருக்கிறேன். நீ அதை எடுத்துக்கோ. யாருக்கும் கொடுத்து விடாதே" என்ருள் அவள்.

"ரண்டாயிரமா?" என்று சொங்கப்பன் ஒன்றும் புரியாமல் கேட்டான்.

"ஆமாம். இந்த நாப்பது வருசமா ஆப்பஞ் சுட்டுச் சம்பாதிச்ச மிச்சம்—எல்லாம் உனக்குத்தான். அதை வைத்து ஒரு கலியாணம் பண்ணிக்கிட்டு நீ சொகமா, பிள்ளை குட்டிகளோடு வாழவேணும்" என்ருள்.

சொங்கப்பனுக்கு விஷயம் நன்றாக விளங்கவில்லை. இருந்தாலும் தன் நன்மைக்காக ஏதேதோ சொல்லுகிறாள் என்று உணர்ந்துகொண்டிருந்தான்.

"அம்மா, எனக்கு என்னத்துக்கு இப்போ ஆப்பம் சுட்டுப் போட்டாய்?" என்று சொங்கப்பன் குழந்தையைப் போலக் கேட்டான்.

"என் கையாலே உனக்கு ஒருநாள்கூட சாப்பாடு போடாது போனால் எனக்கு மோட்சங் கிடைக்குமா? நீ தானே எனக்கு மோட்சங் கொடுக்க வந்திருக்கிறாய்?" என்று அவள் பூரிப்போடு கூறினாள். அவள் முகத்திலே என்றுமில்லாத ஆனந்தம் தாண்டவமாடியது. சொங்கப்பன் அவள் முகத்தை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டே இருந்தான். ராமாத்தாள் அப்படியே உறங்கிவிட்டாள். நிறைவும் அமைதியும் அவள் முகத்தில் தோன்றின.

அவள் மறுபடியும் எழுந்திருக்கவே இல்லை. சொங்கப்பன் அன்றுதான் துக்கம் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டான். சந்தம் புதரிலே கிடக்கும் தந்தை தாயற்ற பூனைக்குட்டியைப் போல 'அம்மா, அம்மா' என்று அலறினான்.

ராமாத்தாள் விரும்பியவாறு சொங்கப்பன் அந்த வீட்டிலேயே ரொம்ப நாள் வசிக்கவில்லை. அவள் இறந்த ஒரு வாரம் வரையில்தான் அவன் அங்கிருந்தான். ராமாத்தாள் அவனுக்கு நிறையப் பணம் சேர்த்து வைத்துவிட்டுப் போயிருக்கிறாள் என்கிற விஷயம் அதற்குள் ஊரெல்லாம் எப்படியோ பரவிவிட்டது.

அந்த விஷயம் வெளியானதற்குச் சொங்கப்பனே தான் காரணம். அவன் தனக்கு ஆறுதல் கூற வந்தவர்களில் ஒன்றிரண்டு பேரிடம் அந்தப் பணத்தைக்

கொண்டு ராமாத்தாளுக்கு மோட்சம் கிடைப்பதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டுக் கொண்டிருந்தான். அதிலிருந்து விஷயம் வெளியாகிவிட்டது.

அவனிடம் பணம் நிறைய இருப்பதாக எங்கும் பேச்சு. சில பேர் இப்பொழுது உண்மையாகவே பெண் கொடுக்கவும் முன் வந்தார்கள். "சொங்கப்பா, என் பெண்ணைக் கட்டிக்கொள். நீ தனியாக இருந்தால் உனக்கு யார் சமையல் செய்து போடுவார்கள்?" என்றார்கள்.

சொங்கப்பனுக்குத் தன்னைப் பற்றிய நினைப்பே இல்லை. கிராமத்திலே யாராவது இறந்துபோனால் அந்த வீட்டில் பல நாட்களுக்குச் சமையல் நடக்காது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அந்த வீட்டாருக்கு உணவு தயாரித்துக் கொண்டுவந்து கொடுப்பார்கள். அந்த மாதிரி யாராவது கொண்டுவரும் உணவை ஒரு வேளை உண்டும் உண்ணாமலும் சொங்கப்பன் ஆழ்ந்த யோசனையிலிருந்தான். ராமாத்தாளுக்குப் புண்ணியம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரே ஆசை அவனைப் பிடித்துக்கொண்டது.

மோட்சம் எப்படிக் கிடைக்கும் என்று பல பேரிடம் கேட்டுப் பார்த்தான். ஒருவருக்கும் பதில் கூறத் தெரியவில்லை. யாரோ ஒருவர், "மோட்சம் எப்படிக் கிடைக்கும்? சாமி கொடுத்துத்தான் கிடைக்கும். சாமி மனசு வச்சா நடக்கும்" என்று சொன்னார். அவரிடம் திருப்பித் திருப்பி அவன் என்ன என்னவோ கேட்டான். அதற்கு மேலே விளக்கம் சொல்ல அவருக்குத் தெரியவில்லை.

ஆனால் சொங்கப்பனுக்கு அதுவரையில் தோன்றாத ஒரு வழி கிடைத்தது. ராமாத்தாள் இறந்த

ஏழாவது நாள் அவன் சந்தைப்பேட்டைக்குச் சற்றுத் தள்ளியிருந்த கோயிலுக்குப் போனான்.

கோயில் அர்ச்சகரிடம், "பணங் கொடுத்தா சாமி மோட்சங் கொடுப்பாரா?" என்று கேட்டான்.

"கோயிலுக்குத் தர்மம் பண்ணினால் புண்ணியம் உண்டு" என்றார் அர்ச்சகர்.

"மோட்சம் கிடைக்குமா சொல்லுங்கோ?" என்று அந்தக் கேள்வியையே திரும்பக் கேட்டான்.

சொங்கப்பனைப் பற்றி முன்பே அர்ச்சகர் கேள்விப் பட்டிருக்கிறார். அவனிடத்தில் அவருக்குப் பரிவு தோன்றியது. மெதுவாக அவனைப் பல கேள்விகள் கேட்டு அவனுடைய ஆசையை அறிந்து கொண்டார்.

"சொங்கப்பா, இந்தச் சிவன் கோயிலிலே அம்பாள் சந்நிதியிலே திருப்பணி செய்யவேண்டியிருக்கிறது. அதற்குத்தான் அதோ அந்த உண்டி வைத்திருக்கிறார்கள். அது நல்ல காரியம். அதற்குத் தருமம் பண்ணினால் மோட்சம் உண்டு" என்று விளக்கிச் சொன்னார்.

"யாருக்கு மோட்சம் வரும்? பணத்தைச் சம்பாதிச்சவங்களுக்கா? எனக்கா?" என்று கேட்டான் சொங்கப்பன்.

"கஷ்டப்பட்டுச் சம்பாதித்துக் கொடுக்கிறவர்களுக்குப் புண்ணியம் உண்டு. உனக்கும் புண்ணியந்தான்."

"எனக்கு வேண்டாம்; எல்லாத்தையும் அம்மாளுக்கே சாமி கொடுக்கட்டும்" என்று சொல்லிக் கொண்டே அவன் வேகமாக வீட்டை நோக்கி நடந்தான். தனக்கென்று ராமாத்தாள் கொடுத்த இரண்

டாயிரம் ரூபாயையும் கொண்டுவந்து கோயில் உண்டியில் போட்டுவிட்டு நிம்மதியாக வீடு திரும்பினான்.

அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு ஓர் எதிர்பாராத சம்பவம் நடந்தது. யாரோ நான்கு தடியர்கள் சொங்கப்பன் இருந்த வீட்டுக்குள் நுழைந்தார்கள். வீட்டைச் சோதனை போட்டார்கள். "பணம் எங்கே?" என்று அவனை அதட்டினார்கள்.

"பணம் சாமிக்குப் போயிட்டுது" என்றான் சொங்கப்பன்.

"டேய், பொய்யா பேசறாய்? பேசாமல் எல்லாத்தையும் கொடுத்துவிடு—இல்லாவிட்டால் பார்த்துக்கோ" என்று கைத்தடியை ஓங்கினார்கள்.

"ராமாத்தாளுக்கு மோட்சம் வேண்டாமா? எனக்கு எதுக்குப் பணம்?" என்று அவன் அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தான்.

திருடர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. அவனைக் கட்டிலோடு சேர்த்துக் கட்டி வைத்து அடி அடியென்று அடித்து நொறுக்கிவிட்டார்கள்.

மறுநாள் காலையில் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் நிலையில் சொங்கப்பனை ஊரார் கண்டார்கள். அவன் விலாவெலும்பு இரண்டு முறிந்திருந்தன. மேலெல்லாம் வீங்கியிருந்தது. பெரிய பண்ணைக்காரர் அவனுக்கு வேண்டிய சிகிச்சைகளையெல்லாம் செய்ய ஏற்பாடு செய்ததோடு அவனைப் பாதுகாக்கவும் முன் வந்தார்.

சொங்கப்பன் குணமாகி எழுந்தான். ஆனால் அவனால் நிமிர்ந்து நடக்க முடியவில்லை. முதுகு எலும்பில் ஏதோ பழுது ஏற்பட்டு அவன் கூனனாகிவிட்டான். ஓடியாடி வேலை செய்யும் சக்தியும் போய்

விட்டது. ஆனால் அதற்காக அவன் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அவனிடத்தில் ஏதோ ஒரு புது மாறுதல் காணப்பட்டது. அவன் வாழ்வின் வேலைகளை யெல்லாம் முடித்துவிட்டவனாகத் தோன்றினான். மனித இயல்புக்கு எட்டாத ஓர் அமைதி அவனிடம் குடிகொள்ளலாயிற்று. மாலை வேளையிலே அம்பாள் சந்நிதியில் மணி ஓசை கேட்கும்போது அவன் கண்களில் ஒரு பரவச ஒளி நிறைந்திருக்கும்.

அதைக் கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். கொஞ்சங் கொஞ்சமாக அவனிடமிருந்து நடந்த விஷயங்களைத் தெரிந்து கொண்டார்கள். மாலை வேளையில் அவன் கண்களைப் பார்ப்பதற்கென்றே பல பேர் அவனுடன் பேச்சுக் கொடுக்க வருவார்கள்.

# விதியின் பிழை

முத்துசாமி மறுபடியும் கைதியாகச் சிறைக்குள்ளே புகுந்தபோது அங்கிருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியத்தில் முழுகி விட்டார்கள். அவன் விடுதலையாகி ஒரு மாதந்தானுயிற்று. அதற்குள்ளே எதற்காக அவன் மீண்டும் சிறைக்குள்ளே வரவேண்டும்? அவன் திருடனல்ல; குடிகாரனல்ல. உண்மையில் அவனைப் போல நல்ல நடத்தையுடையவர்கள் அந்தச் சிறைக்குள்ளே யாரும் இருந்ததில்லை. அவன் தோற்றத்திலே கண்ணியமிருந்தது. அப்படியிருக்க அவன் எதனுல் மறுபடியும் சிறை புக நேர்ந்தது? இந்தக் கேள்வி எல்லோருடைய உள்ளத்திலும் அவனைப் பார்த்தவுடன் எழுந்தது. ஆனுல் அவனிடம் இதைக் கேட்க ஒருவருக்காவது துணிச்சல் வரவில்லை.

முத்துசாமி ஒரு மாதத்திற்கு முன்புவரை அந்தச் சிறைக்குள்ளே இருந்தபோது யாரிடமும் அதிகமாகப் பேச மாட்டான். தனக்கு விதிக்கப்பட்டிருந்த வேலை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அதைப்பற்றி முணுமுணுக்காமல் மௌனமாகச் செய்துகொண்டிருப்பான். இரவு பகல் எந்த நேரமானுலும் அவன் வேலை செய்வதற்குப் பின் வாங்கியதில்லை. "இந்த வேலைகளை யெல்லாம் இன்றைக்கே முடித்தாக வேண்டும்" என்று சிறைக் காவலாளியோ, மற்ற அதிகாரிகளோ அவனிடம் சொல்ல வேண்டியதுதான் தாமதம், அவன் உடனே செய்யத் தொடங்கிவிடுவான். மின்சார யந்திரம் உயிரற்றதுபோலக் கிடக்கிறது; ஆனுல்

ஒரு பித்தானை அழுத்தியதும் அது மடமடவென்று சுழலத் தொடங்கி விடுகிறது. மறுபடியும் பித்தானை மேலே தட்டும் வரையில் அது ஓய்வதில்லை. அந்த யந்திரத்திற்கும் முத்துசாமிக்கும் அதிக வேறுபாடு இருக்காது; அப்படி யந்திரம் போல அவன் வேலை செய்வான்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் அவன்மேல் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்துகொண்டிருந்த நாட்களில் அவன் பதற்றமும் ஆத்திரமும் கொண்டிருந்தது மெய்தான். ஆனால் அவன் குற்றவாளிதான் என்று தீர்மானிக்கப்பட்டுத் தண்டனையடைந்ததும் அவனுடைய போக்கே முற்றிலும் மாறுதலடைய லாயிற்று. அவன் உள்ளம் முறிந்து போய், சோர்வும் நம்பிக்கையற்ற நிலையும் சூழ்ந்தவன் போல் காணப்பட்டான். அந்த நிலையிலே அவன் அதிகாரிகளின் ஏவலின்படி யந்திரம்போல நாட்களைக் கழிக்கப் பழகிக்கொண்டதில் வியப்பில்லை. வாழ்க்கை என்னும் பாரத்தை உணராமல் பொழுதைக் கழிப்பதற்கு அவ்வாறு வேலை செய்யச் சொல்லும் தூண்டுகோல் ஒன்று அவனுக்குத் தேவையாயிற்று.

முத்துசாமி முன்னால் சிறைப்பட்டது ஒரு கொலை சம்பந்தமாக. கொலை செய்தவன் அவனே என்று முடிவாகி அவனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது. அப்பொழுது அவனுக்கு வயது இருபதுதானாகையால் அவனிடம் பரிவு காட்டிய நீதிபதிகள் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கவில்லை.

சிறைச்சாலையில் அவன் நடந்துகொண்ட விதத்தைக் கவனித்தவர்கள் அவன் கொலை செய்திருக்க முடியுமா என்று சந்தேகப்பட்டார்கள். அவனிடத்

திலே கோபம் முதலிய வெறிக் கிளர்ச்சிகள் கட்டுக்கு மீறி எழுந்ததை யாருமே கண்டதில்லை. ஈ, எறும்பு களுக்குக் கூட அவன் துன்பம் செய்யக்கூடியவனாகத் தோன்றவில்லை. அதனால் அவன் கொலைக் குற்றத் திற்காகத் தண்டனையடைந்தது அனைவருக்கும் ஒரு புதிராகவே இருந்தது. எந்தப் புற்றிலே எந்தப் பாம் பிருக்குமோ என்று அவனைப் பொறுத்தமட்டில் எண் ணக்கூட யாருக்கும் மனம் ஒப்பவில்லை.

முத்துசாமி சிறைச் சாலையிலே யாருக்கும் வெறுப்பு ஏற்படும் வகையில் ஒருநாளும் தவறி நடந்த தில்லை. இயந்திரம் போல் பிறர் ஏவல்களைச் செய்து வந்த அவன் என்ன தவறு செய்ய முடியும்? ஆதலால் அவ்வாறு ஒழுங்காகவும் தவறில்லாமலும் நடந்து கொண்டதால் அவனுக்குக் கிடைத்திருந்த இருபத் தைந்து ஆண்டு ஆயுள் தண்டனை கொஞ்சங் கொஞ்ச மாகப் பதினைந்து ஆண்டுகளாகக் குறைந்தது. அந்தக் காலத்தைச் சிறையில் கழித்துவிட்டு அவன் ஒரு புதிய ஆவலோடு வெளியே சென்றான்.

தண்டனை முடியும் காலம் நெருங்க நெருங்க அவன் என்றுமில்லாத ஓர் உற்சாகங் காட்டினான். அவனுடைய இயல்பான அடக்கத்தையும் மீறிக் கொண்டு அந்த உற்சாகம் வெளிப்பட்டது.

ஆயுள் தண்டனை யடைந்துள்ள வேறு சிலரும் அந்தச் சிறையிலே இருந்தார்கள். அவர்களில் மாரி யப்பன் ஒருவன். வாழ்க்கையிலே கசப்பேறிப்போன முதியவன் அவன். ஆனால் நல்ல அரட்டைக்காரன். ஏதாவது வம்பளக்காமல் அவனால் சும்மா இருக்க முடியாது. அவன் பேச்சிலே அவனுடைய உள்ளத்தில் நிறைந்துள்ள கசப்பு தாராளமாக வெளியாகும்.

யாரிடத்திலும் நெருங்கிப் பழகாமல் அடக்கமாக ஒதுங்கி யிருந்த முத்துசாமியுடனும் அவன் நான்கு வார்த்தை பேசிப் பதில் வாங்காமல் விடமாட்டான்.

தண்டனை முடிந்து விடுதலையாகி வெளியே புறப் படும் முத்துசாமியிடம் மாரியப்பன் பேச்சுக் கொடுத் தான் : "முத்துசாமி, வெளியே போய் என்ன செய்யப் போகிறாய்?"

"என்னுடைய நிலம் எனக்காகக் காத்துக்கொண் டிருக்கும்; அதை நான் உழப்போகிறேன்" என்று உள்ளக் கிளர்ச்சியோடு முத்துசாமி பதில் சொன்னான்.

"அட போப்பா, நிலம் உனக்காகக் காத்திருக் குமா? அப்படி யெல்லாம் எதிர்பார்த்து ஏமாந்து போகாதே. ஆனால் நீ என்ன வேணுமானாலும் செய்; கலியாணம் மட்டும் பண்ணிக்காதே" என்றான் மாரி யப்பன்.

இதைக் கேட்டதும் முத்துசாமி திடுக்கிட்டான். பதினைந்து ஆண்டுகளாக அடிமனத்தில் அழுந்திக் கிடந்த ஏதோ ஒரு ஆசையால் கட்டுண்டு அவன் பதில் கூறாமல் நின்றிருந்தான்.

"புத்தியுள்ளவனாக இருந்தால் கலியாணத்திலே மாட்டிக்காதே. பின்னால் என் கதிதான் உனக்கும் வரும். அப்புறம் இந்த இடமே நல்லதென்று தோணும்" என்று சொல்லிவிட்டு மாரியப்பன் போய் விட்டான்.

இவ்வாறு சொல்லி வழியனுப்பிய மாரியப்பன்கூட முத்துசாமியை மறுபடியும் சிறைக்குள் பார்த்தபோது திகைத்துப் போனான். முத்துசாமியிடம் தனித்துப் பேசி விஷயத்தை அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் அவனைப் பிடிக்கத் தொடங்கியது.

முத்துசாமி சிறைக்குள் வந்த இரண்டாம் நாளே மாரியப்பனுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது.

"முத்துசாமி, வெளியுலகத்தைவிடச் சிறையே மேலென்று தெரிந்து வந்துவிட்டாயா?" என்று அவன் பேச்சைத் தொடங்கினான்.

"ஆமாம், மாரியப்பா, எனக்கு இதுதான் இப்போ சரியான இடம்" என்றான் முத்துசாமி.

வாழ்க்கையிலே கசப்பேறிய மாரியப்பனையும் இந்தப் பதில் திகைப்படையச் செய்தது. முத்துசாமி இவ்வாறு கூறுவானென்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

சற்று நேரம் அவன் ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்றுகொண்டிருந்தான். 'எல்லோரும் நினைக்கிற மாதிரி முத்துசாமி யோக்கியனல்லவோ? இவனும் கடைந்தெடுத்த பேர்வழிதானோ?' என்ற சந்தேகங்கள் அவன் மனத்தில் அலை மோதின.

இந்தச் சந்தேகங்கள் தோன்றியதும் மாரியப்பன் பேச்சை அதோடு நிறுத்தியிருப்பான். ஆனால் அன்று வழக்கத்திற்கு மாறாக முத்துசாமி தனது உள்ளத்தைத் திறந்துகாட்டத் தயாராக இருப்பதுபோல் தோன்றியது. தனது நிலைமையை யாரிடமாவது அப்பொழுது கூறாவிடில் மனம் அமைதியுறாது என்று கூறுபவன் போல் அவன் காணப்பட்டான். அதனால் அவனே தொடர்ந்து பேசலானான்.

"மாரியப்பா, நான் நினைக்கிறது சரியென்று உனக்குப் படவில்லையா? ஏன் இப்படி மௌனமாக நிற்கிறாய்?"

"ஆமாம். ஒரு மாசத்துக்குள்ளே அப்படி என்ன குற்றம் செய்துவிட்டாய்?"

"குற்றம் செய்ய ஒரு மாசம் வேணுமா? ஒரு நாளிலே எத்தனை குற்றம் செய்ய முடியாது? கொலை கூடச் செய்துவிடலாம்."

"முத்துசாமி, அது எனக்குத் தெரியாதா என்ன? ஆனால் நீ அப்படிச் செய்வாயா என்பதுதான் கேள்வி."

"நான் இந்தத் தடவை ஒரு பெரிய குற்றம் செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்" என்று கூறிப் பெருமூச்செறிந்தான் முத்துசாமி.

"மெய்யாகவா? எத்தனை பேரைக் கொலை செய்தாய்?" என்று மேலும் சந்தேகத்தோடு மாரியப்பன் கேட்டான்.

கொலை என்ற வார்த்தை காதில் விழுந்ததும் முத்துசாமி நடுங்கினான். பிறகு சமாளித்துக்கொண்டு மெதுவாகப் பேசலானான்.

"பத்து வயதுப் பையன் ஒருவனைக் கொலை செய்யப் போனேன். ஆனால் அதற்குள் எல்லோரும் வந்து குழந்தையைக் காப்பாற்றிவிட்டார்கள்."

"குழந்தையையா? அதுவும் நீயா குழந்தையைக் கொல்லப் போனாய்?" வாழ்க்கையிலே எந்தக் கொடுஞ் செயலும் நடக்கும் என்ற ஒரே நிச்சயத்திலிருந்த மாரியப்பன்கூட இதை நம்பத் தயங்கினான். முத்துசாமியின் தோற்றமும் நடத்தையுமே இதற்குக் காரணங்களாக இருந்தன.

"ஆமாம், பத்து வயதுக் குழந்தைதான். அது என் குழந்தையாகக் கூட இருந்திருக்கலாம்—அதைத் தான் கொல்லப் போனேன்" என்று கூறிவிட்டு முத்துசாமி ஆழ்ந்த சிந்தனையில் முழுகினான்.

"அது யார் குழந்தை?" என்று கேட்டு மாரியப்பன் அவன் சிந்தனையைக் குலைத்தான்.

"என் சிற்றப்பனுக்கு ஒரு மகன் உண்டு. ராமசாமி என்று பெயர். அவனுக்கு என் வயதே இருக்கும். அவனுடைய குழந்தை அது."

"தாயாதிக் காய்ச்சலா? அப்படிச் சொல்லு. அவன் உன் பூமியையெல்லாம் கவரப் பார்த்தானா என்ன?" மாரியப்பனுக்கு இப்பொழுது விஷயம் கொஞ்சம் விளங்கியது போலிருந்தது.

"ராமசாமி அந்தச் சூழ்ச்சியிலே சேர்ந்திருந்தானோ என்னவோ தெரியாது. என் சிற்றப்பன்தான் அப்படிச் சூழ்ச்சி செய்தவர்."

"அவனும் சேராமலா இருப்பான்? சொத்து கிடைக்குமென்றால் எல்லோரும் சேர்ந்துகொள்வார்கள். எந்த அக்கிரமமும் பண்ணுவார்கள். ஆமாம், இப்போ உன்னுடைய பூமியெல்லாம் என்ன ஆச்சு? விவசாயம் பண்ணப் போறதாக வெகு ஆசையோடு வெளியே போனாயே?"

"என் சொத்தையெல்லாம் அந்தக் குழந்தைக்கு எழுதி வைத்துவிட்டேன்."

"எந்தக் குழந்தைக்கு?" என்று மாரியப்பன் சந்தேகத் தொனியில் கேட்டான்.

"நான் கொலை செய்யப் போனேனே, அதே குழந்தைக்குத்தான்."

"என்ன முத்துசாமி, நீ சொல்லுவது எனக்குப் புதிராக இருக்கிறது. குழந்தைக்கு உன் சொத்தையெல்லாம் எழுதி வைத்துவிட்டுப் பிறகு எதுக்கு அதைக் கொல்லப் போனாய்?"

"அந்தக் குழந்தைக்கு என் சொத்தையெல்லாம் கொடுக்க வேண்டுமென்பது என் ஆசை. அதனால் எழுதி வைத்தேன். பிறகு அதைக் கொல்லப் போனதெல்லாம் தண்டனை பெறுவதற்கு ஒரு வழியாகத் தான்."

"அப்போ, அந்தக் குழந்தைக்குச் சொத்தை எழுதி வைப்பானேன்?" என்று மாரியப்பன் விஷயம் புரியாமல் மீண்டும் அதே கேள்வியைக் கேட்டான்.

"அந்தக் குழந்தைக்குத் தீங்கு செய்ய எனக்கு உத்தேசமே கிடையாது. சும்மா அப்படி பாவனை பண்ணினேன். எனக்கு வேண்டியது சிறை தானே?"

"சிறையா?"

முத்துசாமி விஷயம் மேலும் மர்மமாகிவிட்டது.

"மாரியப்பா, அந்தக் காலத்திலே நான் என் அத்தை மகளைக் கலியாணம் செய்துகொள்ள வேணு மென்று எத்தனையோ ஆசையாக இருந்தேன். ஆயுள் தண்டனை பெற்றுச் சிறைக்குள் நுழைந்ததும் அந்த ஆசையில் மண் விழுந்துவிட்டது. என் சிற்றப்பன் தன் மகன் ராமசாமிக்கே அந்தப் பெண்ணைக் கலி யாணம் செய்து வைத்துவிட்டார் என்பதை வெளியே போன பிறகுதான் தெரிந்து கொண்டேன். இதிலும் அவருக்கு வெற்றி கிடைத்திருக்கிறது."

"அந்தப் பெண்ணின் மகனா அந்தப் பையன்?"

"ஆமாம், அவள் பெற்ற மகன்தான். என் சொந்த ஊரில் நானிருந்த சில நாட்களில் என் வீட் டுக்கு அவன் அடிக்கடி ஓடி வருவான். அவனைத் தவிர மற்றவர்களை நான் பார்க்கவில்லை. சிற்றப்ப னுக்கும், ராமசாமிக்கும் என்னைப் பார்க்கவே அவமான

மாக இருந்திருக்க வேண்டும். அதனால் அவர்கள் எனக்கு முன்னால் தலை காட்டவே இல்லை. என் அத்தை மகளைப் பார்க்கக் கூடாது என்று நானே தீர்மானம் செய்து கொண்டிருந்தேன்.''

''சரி, அப்புறம் என்ன நடந்தது?''

''நான் சிறையை விட்டுப் போகும்போது என் அத்தை மகளை ராமசாமியே கலியாணம் செய்துகொண்டிருப்பானென்று எதிர்பார்க்கவில்லை. அது நிலைமையைப் பெரிதும் மாற்றிவிட்டது.''

''அதை விட்டுத் தள்ளப்பா. கலியாணம் மட்டும் பண்ணிக்காதே என்று உனக்கு நான் சொல்லியனுப்பினேனே?''

''அந்தப் பெண் எனக்குக் கிடைப்பாள் என்று நான் எதிர்பார்த்துச் செல்லவில்லை. பதினைந்து ஆண்டுகள் அவளுக்குக் கலியாணம் செய்யாமலா இருப்பார்கள்? ஆனால் அவளை இப்படித் தினமும் பக்கத்து வீட்டிலேயே பார்த்துக்கொண்டிருக்க நேரும் என்று நான் நினைத்ததில்லை. இந்த நிலையிலே எனக்கு எங்கள் ஊரில் இருக்க எப்படிப் பிடிக்கும்?''

''அதற்காகச் சிறைக்கு வரவேணுமா?''

''இன்னொரு முக்கியமான விஷயம் ஊருக்குப் போன பிறகுதான், எனக்குத் தெரிந்தது. பதினைந்து ஆண்டுகளாகப் பிறர் ஏவலின்படி யந்திரம்போல வேலை செய்த எனக்கு அங்கே சொந்தமாக எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை. பண்ணைக் காரியங்களைக் கவனிக்கும்படி தூண்டுகின்ற மேலதிகாரியும் இல்லை; உள்ளத்தின் அடியிலிருந்து தூண்டுதலும் இல்லை. யாருக்காகவாவது வாழ வேண்டியிருந்தாலாவது, அந்தத் தூண்டுதல் வரும். அதுவும் இல்

லாது போயிற்று. அதனால் பிறர் ஏவலின்படி வேலை செய்து காலத்தை நிம்மதியாகக் கழிப்பதற்கு எனக்குச் சிறைதான் சரியான இடம் என்று வந்துவிட்டேன்.''

"சரி, சரி, புரிஞ்சுது; அந்தக் குட்டி பக்கத்து வீட்டிலே இருக்கும்போது உனக்கு அங்கே வாழப் பிடிக்கவில்லை. ஆனால் ஒரு விஷயந்தான் எனக்கு விளங்கமாட்டேனென்கிறது. உன் சொத்தை அந்தப் பயலுக்கு எதுக்கு எழுதி வைக்கவேணும்?''

"விதியின் விளையாட்டைப் பூர்த்தி செய்ய வேணுமென்பது என்னுடைய ஆசை. முதல் தடவை கொலைக் குற்றத்தை என்மேல் சுமத்தியும் என் சிற்றப்பனுக்கு என் சொத்துக் கிடைக்கவில்லை. அதை அவருக்குச் சேரும்படி இப்போ நானே செய்து விட்டேன்.''

"என்ன? அப்போ முதல் தடவை நீ கொலை செய்யவில்லையா?'' என்று மாரியப்பன் திடுக்கிட்டுக் கேட்டான்.

"நான் அந்த மாதிரி குற்றத்தைக் கனவில்கூட நினைக்கமாட்டேன். யாரோ செய்த கொலையை என் மேல் சுமத்தினார்கள். என் தாய் தந்தையர் முன்னமேயே இறந்து போய்விட்டார்கள். நான் ஒண்டியாக இருந்தேன். சிற்றப்பனுக்கு என் சொத்தைக் கவரவும், அத்தை மகளைத் தன் மகனுக்குக் கலியாணம் செய்யவும் இது நல்ல உபாயமாகப்பட்டது. பணத்தை வாரி இறைத்துச் சாட்சிகளையெல்லாம் நன்றாகத் தயார் செய்து நீதிமன்றத்தை அவர் ஏமாற்றிவிட்டார்.''

"இதுதானப்பா உலகம். இப்போ தெரிஞ்சுதா?''

"இது உலகமில்லை, மாரியப்பா. உலகம் இப்படியிருந்தால் முன்னமே அழிந்து போயிருக்கும்."

"அட போப்பா. நீ பிழைக்கத் தெரியாத பிள்ளை... அது இருக்கட்டும், சிறைக்கு மறுபடியும் வரத்தான் தீர்மானம் செய்தாயே, உன் சிற்றப்பனையாவது அடித்துத் தள்ளிவிட்டு வரப்படாதா?"

"மாரியப்பா, யாருக்கும் துன்பமுண்டாக்க வேண்டும் என்று எனக்கு இப்போ ஆசையில்லை. என் சிற்றப்பன் மேல் கூட எனக்கு இப்போ கோபம் கிடையாது. ராமசாமிக்குக் கலியாணம் ஆகி என் அத்தை மகள் வீட்டிற்கு வந்ததும் என் சிற்றப்பனோடு ஒரே குடும்பமாக இருக்க மறுத்துவிட்டாளாம். அவர் தனியாக வாழ்ந்து சிரமப்பட்டாராம். அவருக்கு அவர் வீட்டிலேயே தண்டனை கிடைத்துவிட்டது. அதைக் கூட நான் விரும்பவில்லை. என் அத்தை மகள் எனக்காகப் பரிவு காட்டித்தானே அப்படி அவரை ஒதுக்கி வைத்திருக்கிறாள்? நான் அவள் குழந்தையையே கொல்ல முயன்றதாக அவளை நம்பும்படி செய்துவிட்டால் பிறகு என்னை அவள் வெறுக்கத் தொடங்குவாள். அவள் குடும்பம் ஒற்றுமைப்பட்டு வாழும். அதைத்தான் நான் விரும்பினேன்."

இதைக் கேட்கக் கேட்க மாரியப்பன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழியத் தொடங்கியது. கசப்பேறி இறுகிப்போன அவன் உள்ளமும் கரைந்துவிட்டது. "நல்லவர்களுக்கு உலகம் இப்படித்தான் பலன் கொடுக்கும்" என்ற வார்த்தைகள் அவன் வாயிலிருந்து கிளம்பின.

"உலகத்தின் மேலே குற்றமில்லை, மாரியப்பா. இதுதான் விதி என்று எனக்குத் தெரிந்துவிட்டது.

நான் சிறு வயதிலேயே கம்பராமாயணம் கேட்டிருக்கிறேன். இராமர் தாம் காட்டுக்குப் போக நேரிட்டதைப் பற்றி லக்ஷ்மணனிடம் சொன்னாரே, அதுதான் உண்மை. இராமர் காட்டுக்குப் போக நேர்ந்தது தாயின் பிழையுமல்ல, தந்தையின் பிழையுமல்ல, விதியின் பிழை என்று அவர் கூறினாரே அந்த வார்த்தைதான் எனக்கு அமைதி கொடுக்கிறது'' என்றான் முத்துசாமி.

அவர்களுடைய பேச்சுக்குத் தடங்கலாக ஒரு சம்பவம் இந்தச் சமயத்தில் நிகழ்ந்தது. யாரோ ஒருவனுடைய கையில் விலங்கைப் பூட்டி அவனை உள்ளே தள்ளிக்கொண்டு வந்தார்கள். அவன் வெறி பிடித்தவன் போல் காணப்பட்டான். முத்துசாமியைக் கண்டதும், "முத்துசாமி, உங்கள் சிற்றப்பனைப் போய்ப் பார்'' என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தான்.

விஷயம் என்னவென்று விசாரித்ததில், முத்துசாமி கொலை செய்ததை நேரில் பார்த்ததாகப் பொய் கூறிய சாட்சி அவன்தான் என்றும், அவனுக்கு முத்துசாமியின் சிற்றப்பன் கொடுப்பதாகக் கூறியிருந்த இரண்டு ஏக்கர் நிலத்தைக் கொடுக்காமல் இத்தனை ஆண்டுகளாக ஏமாற்றி வந்ததால் மனமுடைந்துபோய் வெறிகொண்டு சிற்றப்பனையும் அவன் மகன் ராமசாமியையும் கொலை செய்துவிட்டானென்றும் தெரிய வந்தது.

இதையறிந்ததும் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்த மாரியப்பன் உண்மையான மகிழ்ச்சியோடு சிரித்தான்; முத்துசாமி துயரத்தில் மூழ்கிக் கண்ணீர் வடித்தான்.

# பஞ்சக் காலன்

சுந்தரம் வேட்டையாடுவதில் கை தேர்ந்தவன். நீலகிரித் தொடரிலே அவன் நுழையாத இடம் கிடையாது. எவ்வளவு அடர்ந்த காடு என்றாலும் அதற்குள்ளே அவனுடைய அடிச்சுவடு பட்டுத்தான் இருக்கும். யானை வேட்டை, புலி வேட்டை என்றால் அவனுக்கு ஒரே உற்சாகம். காட்டெருமை, காட்டுப் பன்றி முதலிய பயங்கர விலங்குகளையும் அவன் துப்பாக்கி எத்தனையோ தடவை உயிர் குடித்திருக்கிறது. ஆனால் புலி வேட்டையில்தான் அவனுக்கு அலாதியான விருப்பம்.

யானை மிகவும் பலம் வாய்ந்ததுதான். ஆனால் புலியின் தந்திரமோ குரூரமோ இதற்கு வராது. "யானையை ஏமாற்றி மடக்கிவிடலாம்; புலியிடத்திலே அந்த ஜாலமெல்லாம் பலிக்காது" என்று அவன் சொல்லுவான்.

"பிறகு எதற்காகப் புலி வேட்டை, புலி வேட்டை என்று எப்பொழுதும் அதையே நாடுகிறாய்?" என்று கேட்டால் அவனுக்குச் சிரிப்பு வந்துவிடும். "ஆட்டுக் குட்டியை வேட்டையாடுவதிலே என்ன சாமர்த்திய மிருக்கிறது? எந்த ஜமீன்தாரும் அதைச் செய்யலாம். எனக்குப் புலி வேட்டைதான் உகந்தது. மனிதனுடைய புத்திசாலித்தனத்தை அதுதான் ஒவ்வொரு விநாடியும் சோதனை செய்யக்கூடியது" என்று அவன் பெருமையோடு பதில் சொல்லுவான்.

அவன் கூறுவது முற்றும் உண்மைதான். புலி வேட்டை எளிதான காரியமல்ல. எடுத்து நீட்டிய வுடன் குறி தவறாமல் சுடக்கூடிய திறமை முதலில் வேண்டும். அது மட்டும் போதாது. சமயோசித புத்தியும், மின்னல் வேகத்தில் தீர்மானம் செய்து பதற்றமில்லாமல் சடாரென்று செயலில் இறங்கும் தன்மையும் வேண்டும். இவை யெல்லாமிருந்தாலும் புலியின் தன்மையைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்து கொள்ளாவிடில் அதை வேட்டையாடுவது உயிருக்கு ஆபத்தாகத்தான் முடியும்.

ஷோக் மான் வேட்டை என்று கேள்விப்பட்டிருக்கி றீர்களா? வேட்டையாடுகிறவன் துப்பாக்கியை வைத்துக்கொண்டு ஷோக்காக ஓரிடத்திலே பதுங்கி யிருப்பான். அவன் காட்டிற்குள்ளே அலைவதுமில்லை; மானைத் தேடுவதுமில்லை. கூட வந்திருக்கும் ஏவலா ளர்கள் தப்பட்டை, கொம்பு முதலிய வாத்தியங்களை முழக்கிக்கொண்டு காட்டிற்குள்ளே நுழைவார்கள். அந்த ஆரவாரம் கேட்டு மிரண்ட மான்கள் அங்கும் இங்குமாகப் பாய்ந்தோடும். பதுங்கியிருக்கிறவனுக்கு எதிரிலே தென்பட்டால் அவன் சுடுவான். இதுதான் ஷோக் மான் வேட்டை. இப்படி ஒய்யாரமாகப் புலி வேட்டை யாடும் ஒரு வகையும் உண்டு. ஒரு மரத்தின் உச்சியிலே கட்டப்பட்டிருக்கும் ஒளி கூண்டிலே ஒன்றி ரண்டு பேர் உட்கார்ந்து கொள்வார்கள். கீழே ஓரிடத்திலே ஓர் ஆட்டையோ அல்லது கிழட்டு மாட் டையோ கட்டிவிடுவார்கள். கானகத்திலே தனியாகக் கட்டப்பட்டிருக்கும் அந்தப் பிராணி இருள் ஏற ஏறப் பயந்து ஓலமிடும். அதைக் கேட்டுப் புலி வருவ துண்டு.

கட்டுண்டு கிடக்கும் அந்தப் பிராணியைப் புலி அடித்துத் தின்னத் தொடங்கும்போது மர உச்சியில் இருப்பவர்கள் அதன் முகத்திலே விழும்படி பிரகாசம் மிகுந்த மின்சார டார்ச்சு ஒளியைத் திடீரென்று போடுவார்கள். புலியின் கண்கள் இருட்டு நேரத்திலே பூனையின் கண்கள்போல இன்னும் அகலமாக விரிந்திருக்கும். அதனால் பிரகாசமான ஒளி பட்டவுடன் புலி திகைப்படைந்து பார்வை கலங்கி அசைவற்று நிற்கும். அந்தச் சமயம் பார்த்து ஆற அமர இருந்து துப்பாக்கியிலே குறி வைத்துச் சுடுவார்கள். அதிலே அத்தனை ஆபத்துக் கிடையாது. ஷோக் மான் வேட்டையைப் போல இதுவும் ஷோக் வேட்டைதான்.

சுந்தரத்திற்கு இது கொஞ்சங்கூடப் பிடிக்காது. காட்டு விலங்கு நடமாடுகிற இடத்திற்கு நேரே அவன் செல்லுவான். மான் முதலான தனக்கு விருப்பமான இரையைத் தேடிப் புலியும் அங்கு வந்து பதுங்கிக் கொண்டிருக்கும். அதைக் கண்டுபிடித்து நேருக்கு நேரே சுட வேண்டும். இதுதான் அவன் விரும்புவது. இதிலே ஆபத்துண்டு. சாமர்த்தியத்திற்கும் இடம் உண்டு. "ஷோக் வேட்டை என்றால் அது கிழவிகள் செய்யவேண்டிய காரியம்" என்பான் சுந்தரம்.

அவனை நீலகிரி வட்டாரத்திலே ஷிகாரி சுந்தரம் என்றுதான் அனைவரும் அழைப்பார்கள். காட்டு விலங்கு வேட்டையிலே விருப்பமுள்ள செல்வர்களில் அவன் உதவியை நாடாதவர்கள் இல்லை. அதனால் சுந்தரத்திற்கு நல்ல வரும்படி. புலித்தோலும் போட்டோக்களும் செல்வர்களின் வீட்டை அலங்கரிக்கும்: சுந்தரத்திற்கு அவற்றைப் பற்றி லட்சியம் இல்லை. செத்துப்போன புலி அவன் கவனத்தை இழுக்காது.

அதனருகில் நின்று போட்டோ எடுத்துக்கொள்வதிலும் அவன் ஆர்வங் காட்டுவதில்லை. புலியைச் சுட்ட சுந்தரம் தூரத்திலே விலகி நின்று கொள்ளுவான். கூட வரும் செல்வர்கள் செத்துப்போன புலியின் மீது பயமில்லாமல் காலை ஊன்றி நின்று கையிலே துப்பாக்கியையும் பிடித்துக்கொண்டு போட்டோ எடுத்துக் கொள்ளுவார்கள்.

இருபத்தைந்து நாட்களுக்கு முன்னாலே சிமானூர் ஜமீன்தார் புலி வேட்டைக்குச் சுந்தரத்தை அழைத்த போது அவனுக்கு அளவுக்கு மீறி உற்சாகம் வந்து விட்டது. சில மாதங்களாக அவனுக்கு இப்படி நல்ல சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதோடு மற்றொரு முக்கிய காரணமும் இருந்தது. தீபாவளிக்குத் துணிமணிகள் வேண்டும். இந்த வேட்டை வெற்றிகரமாக முடிந்துவிட்டால் அவற்றிற்குக் கவலைப்பட வேண்டியதில்லை. வீட்டிலே மனைவி மக்களுக்குத் திருப்தியாக எல்லாம் நல்ல பட்டாகக் கிடைத்துவிடும்.

இப்படி நினைத்துக்கொண்டு அந்த ஷிகாரி வேட்டைக்குக் கிளம்பினான். வருவாயிலே அதிக நாட்டம் வைத்ததனாலோ என்னவோ அன்றைய இரவு வேட்டை உயிருக்கே ஆபத்தைக் கொண்டுவரக் கூடிய அவ்வளவு சங்கடமானதாகப் போய்விட்டது.

முன் நிலாக் காலமாதலால் அடர்ந்த அந்த நீலகிரிக் காடுகளிலும் சுந்தரம் எளிதாக வழி காட்டிக் கொண்டு சென்றான். சுமார் ஒரு மைல் நடந்த பிறகு அவன் ஜமீன்தாரையும் அவரோடு வந்த நால்வரையும் அங்கே ஏற்படுத்தப்பட்டிருந்த ஒளியிடங்களுக்குள்ளே தங்கும்படி செய்தான். நல்ல பத்திரமான இடங்கள். மேலும் அந்தப் பக்கத்திலே புலிகளின் நட

மாட்டம் பெரும்பாலும் கிடையாது. வேட்டைக்காரர்களின் ஆர்ப்பாட்டம் ஒரு காலத்திலே அங்கே அதிகமாக இருந்ததால் மான்கள்கூட அந்த வழியாகப் போவதைத் தவிர்த்துவிட்டன.

"இவ்விடத்திலேயே எச்சரிக்கையாக இருந்துகொண்டு ஏதாவது பிராணி எதிர்ப்பட்டால் சுடுங்கள்; நான் இன்னும் கொஞ்சம் உள்ளே நுழைந்து பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சொல்லிவிட்டு அவன் கையில் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு தனியாகப் புறப்பட்டான். சுமார் ஒரு மைல் அவன் நடந்திருப்பான். எதிரே ஒரு நீர்நிலை தென்பட்டது. அதைச் சுற்றிலும் சிறிதளவு வெளியிடம். பிறகு ஒரே மரச் செறிவு. அந்த நீர்நிலையை விட்டால் அவ்விடத்திலே வெகு தூரத்திற்குத் தண்ணீர் குடிக்க வேறொன்றுங் கிடையாது. ஆகையால் தாகங் கொண்ட பிராணிகள் எல்லாம் இரவு நேரத்திலே அங்கேதான் வர வேண்டும். புலி வேட்டைக்கு அதைப் போலச் சிறந்த இடம் கண்டுபிடிப்பது அரிது. சுந்தரம் மூன்று புலிகளை அங்கே சுட்டு வீழ்த்தியிருக்கிறான். ஆனால் அந்த இடத்தில் ஒரு கிழப் புலி மட்டும் அவனை இதுவரையில் ஏய்த்துக்கொண்டே வந்திருக்கிறது.

ஷிகாரி சுந்தரம் அதற்குப் பஞ்சுக் காலன் என்று பெயர் வைத்திருந்தான். புலிகள் எல்லாமே சப்தம் செய்யாமல் நடக்கக் கூடியவைதாம். அவற்றின் பாதங்களின் அடிப் பாகம் அவ்வளவு மெத்தென்றிருக்கும். வறண்டு உதிர்ந்துபோன இலைகளை மிதிப்பதால் ஓரளவு அரவம் கேட்குமேயொழிய, காலடி வைக்கும்போது உடம்பின் கனம் காரணமாக ஓசையே கேட்காது. இந்தக் கிழப் புலி உதிர்ந்த சருகுகளைக்

கூட எப்படியோ சமாளித்துக்கொண்டு சிறிதளவும் ஓசை செய்யாமல் செல்லும். அதனாலேயே அவன் அதற்கு அப்படிப் பெயர் வைத்திருந்தான்.

பஞ்சுக் காலனுக்கு வயது முதிர்ந்து சிறிது தளர்ச்சியும் ஏற்பட்டுவிட்டது. வேகத்தில் வல்ல மான்களின்மீது முன்போலப் இப்பொழுது பாய்ந்து சாடுவதற்கு அதனால் முடிவதில்லை. பாயக் கூடிய தூரமும் கொஞ்சம் குறைந்து போயிற்று. அதனால் அது மனித இரையை நாட ஆரம்பித்தது. சாதாரணமாகப் புலிகள் மனிதனைக் கொல்ல இந்தத் தளர்ச்சி நிலையில்தான் தொடங்குவது வழக்கம். மனிதனுக்கு அத்தனை வேகம் கிடையாதல்லவா? இளமை முதற்கொண்டு புலிகளுக்கு மனிதனை அடித்துப் பழக்கமில்லை. அவற்றின் தினசரி வாழ்க்கையிலே சந்திக்காத ஒரு புதிய பிராணி அவன். அதனால் பெரிய புலிகளும் அவனைக் கண்டால் பயந்து ஓடி விடும். ஆனால் ஒரு தடவை மனித ரத்தத்தை ருசி கண்டுவிட்டால் பிறகு அந்த ருசியில்தான் அவற்றிற்கு நாட்டம் அதிகம். இப்படிப்பட்ட மனிதக் கொல்லி களைச் சுடுபவர்களுக்கு அரசாங்கத்தில் சன்மானம் கொடுப்பதுண்டு.

பஞ்சுக் காலன் இதுவரை மூன்று பேரை மடக்கி விட்டது. அதைச் சுட்டு மாய்க்க வேண்டுமென்று சுந்தரம் பல தடவைகளில் முயன்றிருக்கிறான். ஆனால் அவனை அது எப்படியோ ஏய்த்துக்கொண்டிருந்தது. அந்த மனிதன் தன்மேல் கண் வைத்திருக்கிறான் என் பதும் அதற்குத் தெரிந்துவிட்டது. அதனால் அதற் கும் சுந்தரத்தின் மேலே கண். அவனுடைய வாடை அதற்குத் தனியாகத் தெரியும். பஞ்சுக் காலனுடைய

அடிச்சுவடுகளும் சுந்தரத்திற்கு நன்ருகத் தெரியும். இப்படி மனிதனும் விலங்கும் போட்டி போட்டுக் கொண்டு கண் வைத்திருந்தது மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனால் இந்தப் போட்டி மட்டும் வளர்ந்து கொண்டே யிருந்தது.

சுந்தரம் அந்தத் தடாகத்துக்கு மேல்புறமாக மரக் கூட்டங்களிடையே மெதுவாக அமர்ந்தான். அங்கிருந்து நாலு பக்கமும் நன்ருகப் பார்க்கலாம். அவன் அங்கே சேருவதற்கும் முன்நிலா மறைவதற்கும் சரியாக இருந்தது. அவனுக்கு இருட்டிலே பார்த்து நல்ல பழக்கமுண்டு. கூர்ந்த பார்வையும், சிறிய அரவத்தையும் அறிந்துகொள்ளக்கூடிய செவி நுட்பமும் காட்டு வேட்டையிலே பெரிதும் தேவை. பயிற்சியடைந்த அவனுடைய புலன்கள் எப்பொழுதும் எச்சரிக்கையாகவே இருக்கும்.

அன்றைக்கு வெகு நேரம் வரையிலும் யாதொரு பிராணியும் நீருந்த வரவில்லை. மனித வாடையைக் கண்டு கொண்டனவோ என்று சுந்தரத்திற்கு ஐயமுண்டாயிற்று. வேட்டை கிடைக்காவிட்டால் தீபாவளி இன்பமளிக்காதே என்று அவனுக்குக் கவலை. அதே சமயத்தில் அந்தப் பஞ்சுக் காலன் தன்னை நீண்ட நாளாக ஏமாற்றி வருவதை நினைத்து அதன்மேல் எரிச்சலும் உண்டாயிற்று. அவன் மனத்திலே பலவிதமான நினைவுகள் ஓடின. சுந்தரம் மெதுவாக மல்லாந்து தரையில் சாய்ந்தான். சிந்தனையின் ஓட்டமும், சிறிதும் கலைவுருத ஆழ்ந்த நிசப்தமும் சேர்ந்து எப்படியோ அவனுக்குச் சிறிது நேரத்திலே உறக்கத்தை உண்டாக்கி விட்டன. கண்கள் அவனை அறியாமலே உறக்கத்தில் மூடின. வலது கையில் வைத்திருந்த

துப்பாக்கியின் பிடியும் தளர்ந்து போயிற்று. கைகள் இரண்டும் நெஞ்சின் மேலே கட்டைகள் போலக் கிடந்தன.

அடர்ந்த காட்டிற்குள்ளே அவன் இவ்வாறு அயர்ந்து என்றும் தூங்கினதே இல்லை. இன்று அவனுக்குப் பொல்லாத காலம் போலிருக்கிறது.

அவன் ஆழ்ந்து உறங்கும் சமயத்திலே அவனுக்கு எதிரிலே ஒரு பயங்கரக் காட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தது. கலைமான் ஒன்று மருண்டு மருண்டு பார்த்துக்கொண்டு மெதுவாக நீர்நிலையை அணுகிற்று. அதன் காதுகள் விறைப்பாக நின்றன. மான் தனது வாயை நீரில் வைப்பதற்குமுன் மறுபடியும் சுற்றிலும் ஒரு முறை ஊடுருவிப் பார்த்தது. அவ்வளவுதான்; அக்கணமே திடீரென்று திரும்பி மின்னல் வேகத்தில் வந்த வழியிலேயே தாவிற்று. அதே சமயத்தில் பஞ்சுக் காலன் அதன் மேலே சரேலென்று பாய்ந்தது. அதன் நகங்கள் வெளியில் கோரமாகத் துறுத்திக்கொண்டு மானின் உடலைக் கிழிக்கத் தயாராக இருந்தன. ஆனால் ஒரு முழ தூரத்திற்குள் அதன் பாய்ச்சல் தப்பிப் போய்விட்டது. கலைமான் தனது முன்னெச்சரிக்கையினாலும் கால்களின் உறுதியாலும் உயிர் பிழைத்துச் சென்றோடி மறைந்தது. பஞ்சுக் காலனின் முதுமையும் பாய்ச்சல் தூரக் குறைவும் மானுக்கு உதவியாக நின்றன.

பஞ்சுக் காலன் பாய்ந்ததாலும், மரச் செறிவிற்குள் மான் குதித் தோடியதாலும் ஏற்பட்ட அரவத்தால் சுந்தரம் விழித்துக்கொண்டான். ஆனால் அவன் திடுக்கிட்டு எழுந்திருக்கவில்லை. காட்டிற்குள்ளே அப்படி எழுந்திருப்பது உயிருக்கு ஆபத்து என்று அவனுக்குத்

நன்றாகத் தெரியும். அதனால் நெருக்கடியான சமயங்களிலும் அவன் அசையாதபடி கண்ணை விழித்து நிதானமாகச் சுற்றிலும் பார்க்கப் பழகியிருந்தான்.

அப்படி இன்று நாலு பக்கத்திலும் பார்க்கின்ற போது ஏமாந்துபோன கிழப் புலியின் உருவம் சற்றுத் தூரத்தில் தெரிய வந்தது. சுந்தரம் அந்தத் திசையிலே பார்வையைச் செலுத்திப் பஞ்சுக் காலனைப் பார்ப்பதற்கும், அது அவனை ஏறிட்டுப் பார்த்து அறிந்துகொள்ளுவதற்கும் சரியாக இருந்தது. உயிர் குடிக்க உறுதி கொண்டிருந்த விரோதிகள் நேருக்கு நேர் தனியாக எதிர்ப்பட்டு விட்டார்கள். சுந்தரம் புலியை ஊடுருவிப் பார்த்தான். புலியின் கண்கள் இவனை நோக்கி இரண்டு சுடர் விளக்குகளைப்போல் சுடர் விட்டன. அந்தப் பார்வையிலே குரூரமும் ரத்த வெறியும் கலந்திருந்தன. பஞ்சுக் காலன் அவன் மேலே பாய்வதற்குத் தயாராயிற்று. உடம்பெல்லாம் அதற்கேற்றபடி முறுக்கேறியது. அதன் நுனி வால் படம் எடுத்த நாகம்போலச் சுருண்டு நெளிந்தது. சுந்தரத்திற்கு அந்த நிலைமையின் நெருக்கடியும் ஆபத்தும் தெரியாமலில்லை. ஆனால் அவன் அசையாமல் கல் தூண் போலக் கிடந்தான். நெஞ்சின் மேலே கிடக்கும் வலது கையை நகர்த்திப் பக்கத்திலே உள்ள துப்பாக்கியை எடுக்க அவன் நினைக்கவில்லை.

அப்படிச் செய்வது உயிருக்கு ஆபத்து என்பதை அவன் அறிவான். அசையாமலிருந்துகொண்டு நேராகப் பார்வையைத் தன்மேல் செலுத்தும் மனிதனைத் தாக்கப் புலி பயப்படுகிறது. பார்வை கொஞ்சம் விலகினாலோ, உடம்பில் அசைவு ஏற்பட்டாலோ உடனே அது பாய்ந்துவிடும். பார்வையை வேறு பக்கம் திருப்

பினால் கவனம் வேறு இடத்தில் சென்றுவிட்டதென்று அது புரிந்துகொள்ளுகிறது. உடம்பில் அசைவு ஏற்பட்டாலோ அதன்மூலம் தனக்கு ஆபத்து வருமென்று அதன் இயல்பு உணர்ச்சி தூண்டுவதால் அது பயத்தால் பிறக்கும் துணிச்சலோடு எதிரியைத் தாக்க முயலுகிறது. இந்த இரு வகையான விபத்துக்களிலிருந்தும் தப்புவதற்குச் சுந்தரம் அசையாமல் படுத்துப் பஞ்சுக்காலனையே உற்று நோக்கியிருந்தான்.

அந்த நிலையிலே ஒரு விநாடி செல்லுவதும் அவனுக்கு ஒரு யுகமாகத் தோன்றியது. முதுகில் மிகுந்த வலி கண்டது. எத்தனை நேரம் அப்படி உடம்பின் ஒரே பாகத்தைக் கரடுமுரடான நிலத்திலே வைத்துக் கொண்டிருப்பது? உறங்கும்போது அவன் அசையாது தான் படுத்திருந்தான். ஆனால் ஆபத்து முன்னால் தலையெடுத்து நிற்கும்போது எப்படியோ இந்த அசையா நிலையை அவனால் பொறுக்க முடியவில்லை. இன்னும் சற்று நேரம் சென்றால் தன்னால் அசையாமலிருக்க முடியாதென்று அவன் நினைத்தான்.

பஞ்சுக்காலனுக்கும் அந்தச் சந்தேகமான நிலைமை பிடிக்கவில்லை. முன்னால் மானையிழந்த ஏமாற்றம் ஒரு பக்கம்; சுந்தரத்தை ஒழித்துக்கட்டாவிட்டால் தன் உயிருக்கு ஆபத்துத்தான் என்ற உணர்ச்சி ஒரு பக்கம்; பசி ஒரு பக்கம். இப்படி எல்லாம் சேர்ந்து அதன் பொறுமையைச் சோதித்தன. என்ன ஆனாலும் சரி, அந்த மனிதன் மேல் பாய்ந்தே தீர்வதென்று அது முடிவு கட்டிவிட்டது. ஒரே விநாடி. பஞ்சுக் காலன் சரியாகத் தூரத்தை அளந்துகொண்டது. இனி அம்பு போல நேரே பாயவேண்டியதுதான் பாக்கி. சுந்தரத்திற்கும் அதன் எண்ணம் புலப்படாமல் இல்லை.

கொஞ்சம் அசைந்தால் அதன் நோக்கத்தை நிறை வேற்றுவதற்கு அவனே தூண்டுகோல் போட்டதாகும். ஆனால் அசையாமலிருந்துதான் என்ன பலன்? எப்படியும் அவன்மேல் பாய்வதென அந்தப் புலி முடிவு கட்டிவிட்டது.

சுந்தரத்திற்கு ஒன்றுமே புலப்படவில்லை. தனது சாமர்த்தியமெல்லாம் இன்று உதவவில்லையே என்று அவன் உள்ளம் கலங்கினான். பாதுகாத்துக்கொள்ள ஒரு முயற்சியும் செய்யாமலா இந்தப் புலியின் வாயில் சிக்குவது என்று அவனுக்குக் கோபம் வேறு. என்ன ஆனாலும் சரி, துப்பாக்கியை எடுத்துச் சுடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

இரண்டு உயிர்களும் ஒரே முடிவுக்கு வந்திருக்கின்றன. எந்த உயிர் எந்த உயிருக்குப் பலியாகுமோ என்று திகைக்கும்படியான அந்தப் பயங்கர கணநேரம். புலியின் வால் சுருண்டு நிமிர்ந்து விட்டது. பாய்வதற்கு வேண்டியவாறு உடம்பு முறுக்கேறி விட்டது. சுந்தரத்தின் கை துப்பாக்கியைத் தூக்கத் துடித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு ஜோடிக் கண்கள் மட்டும் மாறாமல் ஒன்றை ஒன்று விழுங்குவனபோல் பார்த்திருந்தன. அவற்றிற்கிடையே கூற்றுவனின் பாசக் கயிறு இங்கா அங்கா என்று ஊசலாடிக்கொண்டிருந்தது.

ஆயிற்று, பஞ்சுக் காலன் பாயப் போகிறது. அந்தக்கணத்திலே எதிர்பாராத கிரீச் என்ற ஒரு குரல் கேட்டது. ஓர் எலியின் கீச்சுக் குரல். அதையொட்டி ஓர் ஆந்தையின் அலறல். எலியென்றால் ஆந்தைக்குப் பிரியமான உணவல்லவா? எங்கேயோ மரக் கிளையிலே உட்கார்ந்திருந்த அந்த ஆந்தை பஞ்சுக் கால

னுக்கு அருகிலே குடுகுடுவென்று சென்ற ஓர் எலி யைப் பார்த்து விட்டது. அதன்மேல் ஒரே பாய்ச்சல்; எலி பயந்து அலறிக் கத்தியது. அதைக் கொன்ற ஆந்தையும் வெற்றிக் குரல் கொடுத்தது. இவ்வாறு ஏற்பட்ட அந்த சப்தம் எப்படியோ பஞ்சுக் காலனின் கவனத்தை ஒரு விநாடி கவர்ந்தது. பார்வையைக் கொஞ்சம் அந்தப் பக்கம் திருப்பிற்று.

சுந்தரத்திற்கு அந்தக் கண நேரம் போதும். மின்னல் வேகத்திலே துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்து விட்டான். ஏமாந்த புலியும் மறு கணத்திலே அவன்மேல் மூர்க்கத்தனமாகப் பாய்ந்தது. ஆனல் சுந்தரம் முந்திக்கொண்டான். அவன் குறி தவறியது கிடையாது. முதல் குண்டிலேயே பஞ்சுக் காலன் மடங்கி விழுந்தது. அடுத்த குண்டு அதன் உயிரை முற்றும் போக்கிவிட்டது.

சுந்தரத்திற்கு எப்பொழுதுமே ஆந்தை என்ருல் ஒரு வெறுப்பு. அதைக் கண்டால் சுடாமல் விடமாட் டான். அழகற்ற அதன் தோற்றம், அருவருப்பைக் கொடுக்கும் அதன் குரல் இரண்டும் அவனுக்குப் பிடிக்கவில்லை. ஆனல் பஞ்சுக் காலன் வேட்டையி லிருந்து அவனுக்கு ஆந்தைகளிடம் மிக்க மதிப்பு உண்டாகிவிட்டது. ஒவ்வோர் உயிர்ப் பிராணியையும் ஒரு நல்ல பணிக்கு இறைவன் உண்டாக்கியிருக்கிருன் என்று அவன் அது முதல் கூறிக்கொண் டிருக்கிருன்.

# பட்டணம் கை

இது கதையல்ல; பதினைந்து நாட்களுக்கு முன்னே நடந்த உண்மையான நிகழ்ச்சி. ஆனால் பட்டணம் கையின் திறமையைத் தங்கள் சொந்த அனுபவத்தில் கண்டவர்களே இதை உண்மை என்று நம்புவார்கள்; மற்றவர்களுக்கு நான் எவ்வளவு வற்புறுத்திக் கூறினாலும் இது வெறும் கட்டுக்கதையாகத்தான் தோன்றும். நீங்கள் எப்படி முடிவு கட்டினாலும் சரி. நடந்ததை நடந்தவாறே கூறிவிடுகிறேன்.

நானும், என் மனைவியும், என் நண்பன் ஒருவனும் இந்த நிகழ்ச்சியில் பங்கெடுத்துக்கொண்ட முக்கிய பாத்திரங்கள். இன்னும் இரண்டு மிக முக்கியமான பாத்திரங்கள் உண்டு. அவர்களில்லாமல் இந்தச் சம்பவமே நடந்திருக்க முடியாது; ஆனால் அவர்களை யாரென்று எங்களில் எவருக்கும் தெரியாது; தெரிந்திருந்தால் இந்த நிகழ்ச்சியின் முடிவே வேறுவிதமாக மாறியிருக்கும்.

எனக்கும் என் மனைவிக்கும் சென்னை புதிது. அண்மையில்தான் இங்கே குடி வந்தோம். "பட்டணத்திலே அறம், பொருள், இன்பம் மூன்றும் கிடைக்கும்; ஆனால் வீடு மட்டும் கிடைக்கவே கிடைக்காது!" என்று எனக்கு முன்பே கூறியிருந்தார்கள். "வீடு கிடைப்பது அவ்வளவு எளிய காரியமா? பட்டணமென்று சொன்னால் மாத்திரம் அது எப்படி எளிதில் கிடைக்கமுடியும்?" என்று நான் பெரிய தத்துவ ஞானி போல நினைத்துக் கொண்டு இங்கு வந்து சேர்ந்தேன். குடியிருப்பதற்கு

வீடு தேடி அலைந்தபோதுதான் அவர்கள் கூறிய செங்கல்லும் சுண்ணாம்பும் மணலும் கலந்து உண்டாக்கிய இந்த வீட்டின் அருமை தெரிய வந்தது.

கடைசியில் எப்படியோ ஒரு வீட்டை ஏற்பாடு செய்துகொண்டு குடும்பம் தொடங்கினேன். தொடங்கிச் சரியாக ஒரு மாதங்கூட ஆகவில்லை; அதற்குள் அந்தச் சம்பவம் நிகழ்ந்துவிட்டது.

ஒரு நாள் மாலை சுமார் மூன்று மணி இருக்கும். ஒருவன், "இது வக்கீல் வீடா?" என்று தெலுங்கிலே கேட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான். முன் அறையில் மேசையருகில் நான் அமர்ந்திருந்தேன். "இல்லை, இங்கே யாரும் வக்கீல் அல்ல" என்று நான் தமிழில் பதில் சொன்னேன்.

"பக்கத்து வீட்டிலே விசாரித்தேன்; புதிதாக ஒரு வக்கீல் இங்கு குடி வந்திருப்பதாகச் சொன்னார்களே?" என்று தொடர்ந்து தெலுங்கிலேயே விசாரித்தான்.

"நான் வக்கீல் அல்ல; இந்தப் பட்டணத்திலே பக்கத்து வீட்டுக்காரருக்கு என்ன உத்தியோகமென்று கூடத் தெரிகிறதில்லை" என்று கூறி நான் அவனை வெளியிலே அனுப்பினேன். அவனும் ஏமாந்தவன் போல் போனான். "பாவம்! யாரோ ஆந்திர நாட்டுக் கிராமவாசி போலிருக்கிறது; பட்டணத்திலே இடம் தெரியாது அலைகிறான்" என்று நினைத்து இரக்கப்பட்டுக்கொண்டேன். நாட்டுப் புறங்களிலுள்ள மக்களில் எத்தனையோ பேர் தமக்குள்ளே வீணாகச் சச்சரவு செய்துகொண்டு பட்டணத்து வீதிகளிலே வக்கீலையும் நீதி மன்றத்தையும் தேடித் திரிந்து கையிலுள்ள பொருளையும் தொலைத்துத் துன்பப்படுகிறார்கள் என்கிற வருத்தமான விஷயம் என் மனத்திலே எழுந்தது.

ஆனால் அதைப் பற்றி நெடு நேரம் சிந்தனை செய்து கொண்டிருக்க நேரமில்லை.

அன்று ஒரு நல்ல இசையரங்கு நடக்க இருந்தது. அதற்குப் புறப்பட வேண்டிய முயற்சியில் கவனம் செலுத்தலானேன்.

ஐந்து நிமிஷங்கூட ஆகவில்லை; அவன் மறுபடியும் வந்தான். ஆனால் நான் அவனைப் பார்க்கவில்லை; என் மனைவி பார்த்தாள். அவளிடம் என்னை எங்கே என்று விசாரித்தானாம். "இதோ உள்ளே குளிக்கும் அறைக்குப் போயிருக்கிறார்; வந்து விடுவார்" என்று என் மனைவி பதில் சொன்னாள். "அதிக நேரம் ஆகுமா? அவரிடம் அவசரமாக ஒன்று கேட்க வேணும்" என்றான் அவன். அவள் உட்பக்கம் வந்து என்னிடம் விஷயத்தைக் கூறிவிட்டு மறுபடியும் அவனுக்குப் பதில் கூற முன் அறைக்குச் சென்றாள்.

அதற்குள்ளே பட்டணம் கை வேலை செய்து விட்டது. மேசைமேல் நான் சற்று முன்புதான் கழற்றி வைத்துவிட்டுப் போன கைக்கடிகாரத்தை அவன் எடுத்து மறைத்துக்கொண்டான். சற்று நேரத்தில் நான் வந்துவிடுவேனென்கிற செய்தியை அவனுக்கு என் மனைவி சொல்லவே, அவன் ஏதோ தலை போகிற அவசரம் போல, "மறுபடியும் பத்து நிமிஷத்தில் வந்து அவரைக் கண்டு கொள்கிறேன்; கொஞ்சம் அவசரம்" என்று கூறிவிட்டுக் கிளம்பிவிட்டான்.

நான் திரும்பி வந்ததும் விசாரித்தேன். "அந்த ஆள் ஏதோ அவசரமாகப் போய்விட்டான்; பத்து நிமிஷத்தில் மறுபடியும் வருவான்" என்று என் மனைவி பதில் கொடுத்தாள்.

பத்து நிமிஷமாயிற்று; அரை மணி, ஒரு மணி ஆயிற்று. திரும்பி வருவதற்கு அவனுக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது? நாங்களும் அவன் வரவை எதிர்பார்க்கவில்லை. கடிகாரத்தை மறதியாக வேறு எங்காவது வைத்துவிட்டேனோ என்று தேட வேண்டாத இடமெல்லாம் தேடிக்கொண்டிருந்தோம். தேடும்போதே இது பட்டணம் கையின் வேலைதான் என்பது எங்களுக்கு நன்கு புலப்பட்டுவிட்டது. இருந்தாலும் எல்லா இடங்களையும் துருவிப் பார்த்து விட்டோம்.

நான் அன்று இசையரங்குக்குப் போகவில்லை. போலீசில் பிராது கொடுத்தல் முதலிய செயல்களில் இரண்டு மூன்று மணி நேரத்தைத் தொலைத்துவிட்டு வீடு திரும்பினேன். அதே சமயத்தில் என் நண்பனும் வந்து சேர்ந்தான். அவன் அன்று காலையில்தான் சென்னைக்கு வந்தான். பட்டணம் பார்க்கவேண்டு மென்று அவனுக்கு ஆசை. அதனால் கிறிஸ்துமஸ் சமயத்தில் உள்ள வேடிக்கைகளையெல்லாம் பார்க்கலா மென்று புறப்பட்டு வந்திருக்கிறான். காலையில் சாப் பிட்டுவிட்டுக் கிளம்பியவன் அதுவரையில் எங்கெங்கோ சுற்றிவிட்டு வந்தான். வந்தவன் மகிழ்ச்சியோடு, "கைக் கடிகாரம் ஒன்று வாங்க வேண்டுமென்று சொன் னேனல்லவா? நல்லதாக ஒன்றைக் குறைந்த விலை யில் வாங்கிவிட்டேன்" என்று என்னிடம் சொன்னான்.

"அப்படியா? எங்கே, பார்க்கலாம்" என்றேன் நான்.

கடிகாரத்தை உடனே என்னிடம் காட்ட நண்பன் விரும்பவில்லை. "முதலில் அதை நான் வாங்கிய விதத்தைப் பற்றிச் சொல்கிறேன். பிறகு கடிகாரத் தைப் பார்க்கலாம்" என்றான் அவன்.

"எப்படி வாங்கியிருப்பாய்? எல்லோரையும் போலத்தான் கடையெல்லாம் புகுந்து புகுந்து, ஆயிரத் தெட்டுக் கடிகாரங்களைப் பார்த்துவிட்டுக் கடைசியில் ஓர் ஓட்டைக் கடிகாரத்தை வாங்கி வந்திருப்பாய்" என்று கேலி செய்தேன் நான். "உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். நான் அப்படி ஒன்றும் செய்ய வில்லை" என்று அவன் பெருமையோடு பேசினான்.

"சரி; வாங்கின விதத்தைத்தான் சொல்லேன்" என்று நான் கேட்டேன்.

என் நண்பன் தொடங்கினான்: "நான் சுமார் ஐந்தரை மணிக்குச் சைனா பஜாரில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். அடாடா! என்ன கூட்டம்! கார்களும், பஸ்களும் எத்தனை! எனக்கு அப்படியே மலைப்பாய்ப் போய்விட்டது. ஓர் இடத்தில் அசையாது நின்றுகொண்டு எல்லாவற்றையும் கவனித் தேன்.

"அப்பொழுது எனக்குப் பக்கத்தில் இரண்டு மனிதர்கள் வந்து நின்றார்கள். ஒருவன் தன் கையில் ஒரு கடிகாரத்தைக் கட்டிக்கொண்டிருந்தான். மற்ற வன் அதை விலைக்குக் கேட்டான். 'ஐம்பது ரூபாய் வேண்டுமானால் கொடுக்கிறேன்; அதற்கு மேலே என்றால் எனக்கு வேண்டாம்' என்றான் அவன். எனக் குத் தெளிவாகக் கேட்கும்படி அவர்கள் வெளிப்படை யாகத்தான் பேசினார்கள்; இரகசியமாகப் பேசவில்லை. அந்தக் கடைவீதி இரைச்சலிலே மெதுவாகப் பேசினால் எப்படிக் கேட்கப் போகிறது?

" 'இவ்வளவு குறைச்சல் விலைக்குக் கேட்பது நியாயமில்லை; நமக்குள் இருக்கிற சிநேகிதத்தை மனத் தில் வைத்துக்கொண்டு கேள்' என்றான் மற்றவன்.

“ ‘சம்மதமென்றால் கொடு; நான் உன்னைக் கட்டாயப்படுத்தவில்லையே?’ என்றான் விலைக்குக் கேட்கிறவன்.

“விற்கிறவனுக்குக் கோபம் வந்துவிட்டது. ‘அவசரம் ஆபத்திற்கு உன்னையெல்லாம் நம்பினால் இப்படித்தான்; தலையில் மிளகை அரைத்துவிடுவாய்; உனக்கும் ஒரு ஆபத்து வராதா? அப்பொழுது பார்த்துக்கொள்கிறேன்’ என்று கடுமையாகப் பேசிவிட்டு அவன் வேகமாக நடந்தான். அவன் எங்கே போனானென்று தெரியவில்லை. சட்டென்று மறைந்துவிட்டான்.

“மற்றவன் அவனைத் தேடிக்கொண்டே அங்கும் இங்கும் அலைந்தான். பிறகு கவலையோடு என்னிடம் வந்து, ‘சார், அவன் எந்தப் பக்கம் போனானென்று பார்த்தீர்களா?’ என்று கேட்டான்.

“ ‘யாரைப்பற்றிக் கேட்கிறாய்?’ என்றேன் நான்.

“ ‘அவன் என்னுடைய சிநேகிதன்தான். அவனுக்கு இப்போது பணத்திற்கு ரொம்ப அவசரம். அதனாலே தன் கைக் கடிகாரத்தை விற்க வேண்டுமென்று நினைக்கிறான். ஒரு மாதத்திற்கு முன்புதான் 110 ரூபாய் கொடுத்து அதை வாங்கினான். எனக்கு நன்றாகத் தெரியும். இன்றைக்கு எட்டு மணிக்குள் அவனுக்குப் பணம் அவசரமாக வேண்டியிருக்காவிட்டால் அவன் அதை விற்கவே மாட்டான். நான் ஐம்பது ரூபாய்க்குக் கேட்டேன்; அவன் 75 கேட்கிறான். ஐம்பதுக்கு மேல் இன்னும் ஓர் ஐந்து ரூபாய் வைத்தால் பேசாமல் கொடுத்துவிடுவான். அவனை விட்டுவிடக் கூடாது. வேறு யாராவது அந்தக் கடிகாரத்தைத் தட்டிக்கொண்டு போய் விடுவார்கள்.

அவன் எங்கே போனுனென்று தெரியுமா?' என்று அவசரம் அவசரமாகக் கேட்டான்.

" 'நான் கவனிக்கவில்லையே' என்று பதில் கொடுத்தேன். உண்மையில் அவன் எந்தப் பக்கம் போனுனென்று நான் பார்க்கவில்லை. அந்த மனிதன், 'அடாடா! ஏமாந்து போய்விடுவோம் போலிருக்கிறதே' என்று கூறிக்கொண்டே ஒரு திக்கில் நடந்தான்.

"நாலு பக்கமும் பார்த்துக்கொண்டே நான் மெதுவாக நகர்ந்தேன். ஒருவன் கண்ணுடித் தம்ளர் விற்கிருன்; ஒரு கிழவி, 'லட்டெல்லாம் ரண்டணு, லட்டெல்லாம் ரண்டணு' என்று சாத்துக்குடிப் பழம் விற்கிருள். பல்லுக்குச்சி ஒரு புறம்; பணியன் ஒரு புறம்; இன்னும் ரிப்பன் என்ன, பொத்தான் என்ன, பாச்சைக் குண்டு என்ன—இப்படிப் பல வகையான சாமான்கள் மக்கள் நடக்கும் குறுகிய பாதையிலேயே விற்கப்படுகின்றன. நகருவதற்குக் கூட இடமில்லை. ஒரே கூட்டம், ஒரே கூச்சல். நமது கிராமத்தில் அமைதியாக இருந்துவிட்டு வந்த எனக்கு இந்த ஆரவாரத்தைக் கேட்டுத் தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. அதோடு அந்தப் பெட்ரோல் புகை நாற்றம் இருக்கிறதே, அதைத்தான் என்னுல் சகிக்கவே முடியவில்லை. தலைவலி எடுத்துக் கொண்டது. இருந்தாலும் பட்டணத்துக் காட்சி ஒரு தனிக் கவர்ச்சிதான். நான் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு பத்துப் பதினைந்து கஜ தூரம் போயிருப்பேன்.

"அதற்குள் அந்தக் கடிகாரக்காரன் திரும்பி வந்து சேர்ந்தான். 'சார், என்னிடம் பேசிக்கொண்டிருந்தானே, அவன் எங்கே போனுனென்று பார்த்தீர்களா?' என்று கேட்டான்.

“‘எனக்கு எப்படித் தெரியும்? உன்னைத்தான் தேடிக்கொண்டு போறான் அவன்’ என்றேன்.

“‘நீங்கள்தான் பாருங்கள் சார்; இந்தக் கடிகாரத்தை அவன் 50 ரூபாய்க்குத் தட்டிக்கொண்டு போகலாமென்று பார்க்கிறான். வாங்கி ஒரு மாசங்கூட ஆகவில்லை. சுளைபோல 110 ரூபாய் கொடுத்து வாங்கினேன். உழைத்துச் சம்பாதித்த பணம். இன்றைக்கு எனக்கு எப்படியும் கொஞ்சம் பணம் வேண்டியிருக்கிறது. என்னுடைய நெருக்கடியைத் தெரிந்துகொண்டு அவன் குறைந்த விலைக்கு வாங்கப் பார்க்கிறான். இத்தனைக்கும் அவன் எனக்கு வெகு நாளாகச் சிநேகம். இந்தக் காலத்திலே சிநேகம் எங்கே இருக்கிறது?’ என்று வெறுப்போடு பேசிவிட்டுக் கடிகாரத்தை என்னிடம் கொடுத்தான்.

“அழகான கடிகாரம்; அண்மையில்தான் வாங்கினது என்பதில் சந்தேகம் இல்லை; அதற்குப் போட்டிருந்த தோல் பட்டைகூட மங்கவில்லை. எனக்கு அதன்மேல் ஆசை விழுந்துவிட்டது. குறைச்சல் விலைக்குக் கிடைத்தால் நல்லதுதானே என்று நினைத்தேன்.

“‘எனக்கு அதை விற்றுவிட உனக்குச் சம்மதமா?’ என்று மெதுவாகக் கேட்டேன்.

“‘யாராயிருந்தால் எனக்கென்ன? ரூபாய் 75 கொடுத்தால் யாருக்கு வேண்டுமானாலும் விற்கத் தயார். என்ன செய்கிறது? என்னுடைய அவசரம் அப்படி இருக்கிறது!’ என்று அவன் விசனத்தோடு பதில் கொடுத்தான்.

“‘நான் 60 ரூபாய் கொடுக்கிறேன். விருப்பமா உனக்கு?’ என்றேன் நான்.

"'என்ன சார், நீங்களும் அந்தப் பயலைப்போலப் பேரம் செய்கிறீர்களே? யாராவது இதை அடைமானமாக வைத்துக்கொண்டு 50 ரூபாய் கொடுத்தால் மூன்று நாளில் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவேன். வட்டி வேண்டுமானாலும் கேட்டபடி கொடுப்பேன்' என்றான் அவன்.

"'அடைமானம் வாங்கிக்கொள்ள நான் இந்த ஊரல்ல. சுத்தக் கிரயமாக 60 ரூபாய் கொடுக்கிறேன். அதற்கு மேலே அது பெறாது' என்று சாமர்த்தியமாகப் பேசினேன்.

"கொஞ்ச நேரம் அவன் என்னுடன் வாதாடினான்; இடையிடையே தன்னுடைய தலைவிதியை நொந்துகொண்டான். நான் பிகுவாகவே இருந்தேன். 'சரி; உனக்கு விருப்பமில்லாவிட்டால் வேண்டாம்; வேறு யாருக்காவது விற்றுக்கொள்' என்று கூறிவிட்டு நடந்து காட்டினேன். நான் அடியெடுத்து வைப்பது கண்டு அவன் மடங்கிவிட்டான். என்னை விட்டுவிட்டால் அவனுக்கு ஐம்பது ரூபாய்க்கு மேல் கொடுக்க ஆள் கிடையாதல்லவா? அதனால் அவன் பேசாமல் கடிகாரத்தை எனக்கு விற்றுவிட்டான்.

"எப்படி என்னுடைய திறமை?" என்று கூறிக்கொண்டே என் நண்பன் தான் வாங்கிய கைக் கடிகாரத்தை என்னிடம் காட்டினான். அவன் அதைக் குறைந்த விலைக்கே தட்டிக்கொண்டு வந்திருக்கிறான் என்பது எனக்கு உடனே விளங்கிவிட்டது; கடிகாரமும் புதிதுதான்; அதன் விலையும் 110 ரூபாய்தான். இவையெல்லாம் எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஏனென்றால் அது என்னுடைய கைக் கடிகாரம்தான்.

பட்டணத்துக் கையின் வேலை வெகு சுறுசுறுப்பாக நடந்து விட்டது. எடுப்பதிலேயும் அப்படி; அதைப் பணமாக்குவதிலேயும் அப்படியே.

மூன்று மணிக்கு வீட்டிலே நடந்த திருட்டைப் பற்றி என் நண்பனுக்குக் கூற வாயெடுத்தேன். ஆனால் சட்டென்று நிறுத்திக்கொண்டேன். அதைச் சொல்வது உசிதமில்லை என்று பட்டது. என் நண்பன் 60 ரூபாய் கொடுத்து அதை வாங்கியிருக்கிறான். மலிவாக அவனுக்குக் கிடைத்திருக்கிறது. அந்த மகிழ்ச்சியாவது இருக்கட்டுமே. விஷயத்தை நான் சொன்னால் கடிகாரத்தை எடுத்துக் கொள்ளும்படி அவன் வற்புறுத்துவான்; அதற்காக அவன் தந்த ரூபாயைப் பெற்றுக்கொள்ளவும் மறுத்து விடுவான். அந்த சங்கட மெல்லாம் வேண்டாமென்று நான் மௌனமாக இருந்துவிட்டேன்.

ஆனால் ஒரு எச்சரிக்கை மட்டும் அவனுக்குச் செய்தேன். "பட்டணத்தை விட்டுப் போகும் வரையில் கடிகாரத்தை பத்திரமாக வைத்துக்கொள். என்னுடைய மேசை மேலே போட்டுவிட்டு அங்குமிங்கும் போய் விடாதே" என்றேன்.

"மேசை மேலே வைத்தால் நீ தூக்கிக்கொள் வாயா? அல்லது உன் மனைவி தூக்கிக் கொள் வாளா? உங்கள் மேல் எனக்கு அப்படி ஒன்றும் சந்தேகம் இல்லையே!" என்று கேலியாகப் பேசினான் நண்பன்.

நான் பதில் பேசவில்லை.

# உறக்கம் தந்த ஓவியம்

"கோபால், உனக்குத் தூக்கம் நன்றாக வரு கிறதா?" என்று கேட்டான் கண்ணப்பன். "ஏன், நான்தான் கும்பகர்ணனுக்கு மூத்த பிள்ளையாய் விட்டேனே! தினமும் காலையிலே எட்டு மணிக்கு நீ தொந்தரவு செய்யாவிட்டால் நான் எழுந்திருக்கிறது ஏது?" என்று பதில் கொடுத்தான் கோபாலன்.

"நீ இரவிலே உறங்குவதைத் தவிர வேறு ஒன் றுமே செய்வதில்லையா?" என்று மறுபடியும் கண்ணப் பன் கேட்டான்.

"உன் கேள்வி வேடிக்கையாக இருக்கிறதே! உறங்கும்போது வேறு என்ன செய்யமுடியும்? நான் கனுக்கூடக் காண்பதில்லை" என்று கோபாலன் சொல்லிக்கொண்டே, அன்றைய செய்தித் தாளைப் புரட்டினான்.

கண்ணப்பனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கோபா லன் சொல்லுவதென்னவோ மெய்தான். இருந்தாலும் சென்ற சில நாட்களாக அவன் இரவிலே படுக்கையை விட்டெழுந்து பல மணி நேரம் ஓவியம் தீட்டுவதைக் கண்ணப்பன் கவனித்து வருகிறான். முதலில் ஓரிரண்டு தடவை தற்செயலாக விழித்து இதைக் கவனித்தபோது கண்ணப்பனுக்கு ஆச்சரியம் ஒன்றும் ஏற்படவில்லை. தூக்கம் வராததாலோ அல்லது திடீரென்று ஏதாவது ஒரு புதிய கற்பனை தோன்றியதாலோ இரவிலே ஓவியம் தீட்டுகிறான் என்று எண்ணிக்கொண்டான். ஆனால்

தொடர்ந்து இது பல இரவுகளிலே நடைபெறவே, அவனுக்கு ஐயம் பிறந்தது. மேலும் அவன் மின்சார விளக்கைப் போடாமல் நிலவின் மங்கிய வெளிச்சத்திலேயே ஓவியம் தீட்டிக்கொண்டிருந்தான். ஒன்றிரண்டு மணி நேரம் இவ்வாறு தீட்டிய பிறகு அந்த ஓவியத்தைத் தாங்கும் திரைச் சட்டத்தை ஒழுங்காக எடுத்து ஓரிடத்திலே மறைவாக வைத்துவிட்டுப் படுத்துக்கொள்வான். அப்படி ஓர் ஓவியம் இரவிலே வரைந்துகொண்டிருப்பதைக்கூட அவன் பகலில் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இவையெல்லாம் கண்ணப்பனின் ஐயத்தைப் பலப்படுத்தின.

"என்ன கோபால், இரவிலேகூடவா ஓவியம்?" என்று ஓர் இரவு மெதுவாகக் கேட்டான். உறங்கிக்கொண்டிருந்த கோபால் அப்பொழுதுதான் படுக்கையை விட்டு எழுந்து ஓவியக் கருவிகளையெல்லாம் எடுத்து வைத்துத் தன் முயற்சியிலே ஈடுபட்டிருந்தான். அந்தக் கேள்வியே அவன் காதில் விழவில்லை என்று தோன்றியது. கண்ணப்பன் மெதுவாக எழுந்து கோபாலனுக்கு அருகே சென்று சத்தம் செய்யாமல் நின்று கவனித்தான்.

கொஞ்ச நேரத்தில் கோபாலனுடைய கண்கள் இவன் பக்கம் நேராகத் திரும்பின. ஆனால் அவன் கண்ணப்பன் நிற்பதை அறிந்துகொள்ளவில்லை. மறுபடியும் அவன் ஓவியம் தீட்டுவதிலே முனைந்தான். தொடக்கத்தில் தாறுமாறான பொருளற்ற வரைகளாக இருந்து பிறகு கொஞ்சம் கொஞ்சமாக வடிவம் பெற்றுக்கொண்டிருந்த அந்த ஓவியத்தின் பக்கம் அவன் கண்கள் திரும்பின. அதைத் தீட்டுவதிலே முழுக் கவனத்தையும் செலுத்தினான். பயங்கரமான அந்த

ஓவிய உருவம் கண்ணப்பனின் உள்ளத்தில் நடுக்கத்தை உண்டாக்கியது. அதைப் பார்க்காமல் கண்களை மறுபக்கம் திருப்பிக்கொண்டான்.

கோபாலனுடைய கை தூரிகையைப் பிடித்து நிதானமாக வர்ணங்களைத் தீட்டிக்கொண்டிருந்தது. கண்ணப்பனுக்கு அந்த ஓவியத்தைப் பார்க்கக் கூடாதென்ற எண்ணம் இருந்தாலும் அவன் கண்கள் அதை நாடின. பார்க்க விரும்பாத அந்த ஓவியத்திலே ஒரு கவர்ச்சி இருந்தது. மறுபடியும் கண்ணப்பன் திடுக்கிட்டான். அப்படியே கண்களை மூடிக்கொண்டு உறங்கிவிட்டான்.

கண்ணப்பன் என்றால் கோபாலனுக்கு உயிர். கோபாலன் என்றால் கண்ணப்பனுக்கு உயிர். "கற்கண்டையும் அதன் இனிப்பையும் பிரித்து வைத்தாலும் வைக்கலாம். அவர்கள் இரண்டு பேரையும் பிரிக்கவே முடியாது" என்று மாணவர் விடுதியிலுள்ள மற்ற மாணவர்கள் பேசிக் கொள்வார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே இரண்டு பேருக்கும் ஒருவரை ஒருவர் யாரென்றுகூடத் தெரியாது. வெவ்வேறு இடங்களிலிருந்து வந்த அவர்கள் தற்செயலாக ஒரே மாணவர் விடுதியில் ஒரே அறையில் வசிக்க நேர்ந்தபோது தான் முதல் முதலாக அவர்களுக்குள் தொடர்பு ஏற்பட்டது.

கண்ணப்பன் மருத்துவக் கல்லூரி மாணவன். கோபாலன் அழகுக்கலைப் பள்ளியிலே சேர்ந்து ஓவியம் பயின்று வந்தான். பள்ளி நேரம் போக மற்ற சமயங்களிலெல்லாம், அவர்கள் இருவரையும் ஒன்றாகவே காணமுடியும். "ஓவிய மருத்துவ இரட்டையர்கள்" என்று அவர்களை வேடிக்கையாக அழைப்பார்கள்.

இருபத்தைந்து நாட்களுக்கு முன்புவரை கோபால னிடத்தில் இயல்புக்கு மாருன எவ்விதமான நடத்தை யும் இருக்கவில்லை. இப்பொழுதுங்கூடப் பகல் நேரத் திலே அவனிடம் யாதொரு மாறுதலும் காணவில்லை. இரவிலே மட்டும் உறக்க நிலையிலேயே ஓவியம் தீட்டு கிருன். அவ்வாறு தீட்டுவதும் அவனுக்கே தெரிய வில்லை. அதோடு அந்த ஓவியத்தைத் தாங்கியுள்ள திரையை அவன் பகல் நேரத்தில் கண்ணெடுத்துப் பார்ப்பதும் இல்லை. ஒரு மூலையில் சுவர்ப் பக்கமாகத் திருப்பி வைக்கப்பட்டிருந்த அந்த ஓவியம் மற்ற திரைச் சட்டங்களுடனே கவனிப்பாரற்றுக் கிடந்தது.

கோபாலனுக்கு உறக்கத்திலே நடமாடும் நோயோ என்று கண்ணப்பன் ஐயங்கொண்டான். அப்படி இருந் தாலும் அவன் எதற்காக உறக்க நிலையிலே ஓவியம் தீட்டுவதில் முனைய வேண்டும்? உறக்க நிலையில் நடமாடும் நோயுடையவர்கள் ஏதாவதொரு செயலைத் தம்மை அறியாது செய்வதுண்டு என்று அவன் படித்திருக்கிருன். அந்த நோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் நாள்தோறும் இரவிலே தமது சட்டையை எடுத்துக்கொண்டு போய்ப் புறக்கடைத் தோட்டத் திலே குழி வெட்டிப் புதைத்துவிட்டு வந்துவிடுவாராம். சட்டை காணுமல் போய்விட்டதென்று மறுநாள் அவரே பிராது கொடுப்பாராம். அவரை இரவெல்லாம் மறைவிலிருந்து கவனித்த பிறகே சட்டைகள் மறையும் காரணம் தெரிந்தது; அவருக்கு உறக்க நடை நோய் உண்டென்றும் வெளியாயிற்று. இந்த நோயைப் பற்றி விரிவாகத் தெரிந்துகொண்டு பிறகு கோபால னுக்குச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கண்ணப்பன் நிச்சயித்தான்.

ஒரு நாள் கோபாலன் இல்லாதபோது பகல் வெளிச்சத்திலே அந்த ஓவியத்தை ஒருமுறை பார்த்து விடலாமென்று கண்ணப்பனுக்கு ஆசை உண்டாயிற்று. தீட்டிப் பெரும்பாலும் முடிவுற்றிருந்த அந்தப் பயங்கர உருவம் எப்படியோ அவனை மீண்டும் கவர்ந்தது! கண்ணப்பன் ஓவியத்தை மெதுவாக எடுத்துப் பார்த்தான். அப்பா! என்ன கோரமான காட்சி! கள் வெறியும், கொலை வெறியும் துள்ளுகின்ற கண்களோடு ஓர் ஆடவன் தன் கையிலே ஒரு பெரிய முக்காலியை ஓங்கிக்கொண்டு உயிரோடு எதிரிலே நிற்பதுபோலத் தோன்றியது. தொப்பென்று ஓவியத்தைக் கண்ணப்பன் கீழே போட்டுவிட்டான். அந்தக் கண்களிலே சுடர்விட்ட வெறி அவ்வளவு பயங்கரமாக இருந்தது.

கோபாலன் இதுவரையில் அவ்வளவு கலைச் சிறப்பு வாய்ந்த ஓவியத்தைத் தீட்டியதில்லை. ஆனால் உறக்க நிலையிலே அது எப்படி உருவெடுத்தது? அதிலும் இப்படிக் கொலைவெறி காட்டும் ஓவியத்தை அவன் வரைவதன் காரணம் என்ன? அவைதாம் கண்ணப்பனுக்கு விளங்கவில்லை. உறக்க நடை நோயோடு வேறு ஏதோ ரகசியம் ஒன்று இருப்பதாக அவனுக்குப் புலப்பட்டது.

ஆதலால் கோபாலனுடைய தாத்தாவை உடனே புறப்பட்டு வரும்படி கடிதம் எழுதுவதென்று கண்ணப்பன் தீர்மானித்தான். கோபாலனுடைய தாய் தந்தையர் அவனுடைய குழந்தைப் பருவத்திலேயே இறந்து விட்டார்கள் என்பதும், அவனுடைய தாத்தாவே அவனை அன்போடு பாதுகாத்து வருகிறார் என்பதும் அவனுக்குத் தெரியும். அவர் சென்னை வரும்போதெல்லாம் கண்ணப்பன் அவருடன் நன்கு பழகியிருக்

கிருன். தம் பேரனுடைய உயிர்த் தோழன் என்று அறிந்தது முதல் அவரும் இவனிடம் அளவுகடந்த அன்பைக் காட்டலானர். கொங்கு நாட்டில் ஈரோட்டிற்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திலே அவர் தனியாக வாழ்க்கை நடத்திவந்தார். விவசாயத்திலே அவருக்கு நல்ல வரும்படி உண்டு. அதைக் கொண்டு தம் பேரனைச் செல்வமாக வளர்த்துப் படிக்க வைத்தார். கல்லூரியிலே இரண்டு ஆண்டுகள் படித்துவிட்டுப் பிறகு ஓவியக் கலை பயிலவேண்டுமென்று கோபாலன் விரும்பியதால் அவன் விருப்பப்படியே அழகுக் கலைப் பள்ளியில் சேர்ந்துகொள்ள அவர் இசைந்தார். கோபாலனைப் பார்க்க அவர் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையாவது சென்னைக்கு வருவதுண்டு.

கண்ணப்பனுடைய கடிதம் கண்ட அன்றே அவர் புறப்பட்டு மறுநாள் காலை சென்னை வந்து சேர்ந்தார். கோபாலன் பள்ளிக்குப் புறப்படும் வரை கண்ணப்பன் தான் அவரை வரும்படி எழுதியதன் காரணத்தைக் கூறவில்லை. வழக்கமாக மருத்துவக் கல்லூரிக்குக் கண்ணப்பன் கோபாலனுக்கு முன்பே கிளம்பி விடுவான். ஆனால் அன்று அவன் கல்லூரிக்குப் போகவில்லை. தினமும் கல்லூரிக்குப் போய் அலுத்துவிட்டதென்றும், அன்று முழுவதும் தாத்தாவோடு அரட்டை யடித்துக்கொண்டு உல்லாசமாக இருக்கப் போவதாகவும் அவன் கூறினன்.

"ஏண்டா, கல்லூரிக்கு மட்டம் போடவா பார்க்கிருய்? தாத்தாவாலே நீ வீணுகக் கெட்டுப் போகிருய்!" என்று கேலி செய்துகொண்டே கோபாலன் பள்ளிக்குப் புறப்பட்டான்.

“உன்னாலே நான் கெடாமலிருந்தால் போதும். தாத்தா என்னைக் கெடுத்துவிட மாட்டார்” என்று கண்ணப்பன் அவனுக்குத் தோற்காமல் பதில் கொடுத்தான்.

தாத்தா அந்த இரண்டு தோழர்களின் அன்பு கலந்த பேச்சைக் கேட்டு ஆனந்தமாக வாய்விட்டுச் சிரித்தார். தாத்தாவோடு சேர்ந்து அவர்கள் இரண்டு பேரும் கலீரென்று சிரித்தார்கள். “தாத்தா, நான் கொடுத்த பதில் சரிதானே?” என்றான் கண்ணப்பன். அவனும் அவரைத் தாத்தா என்றே அழைப்பது வழக்கம். அவரும் அவனைத் தம் மற்றொரு பேரனாகவே கருதி நடத்தினார்.

“தாத்தா, நீங்கள் கண்ணப்பன் பக்கம் சேரப் படாது” என்று கோபாலன் அவர் பேச வாயெடுக்கு முன்பே குழந்தை போலக் குறுக்கிட்டான்.

“டேய், தாத்தா எப்பொழுதுமே என் பக்கந் தாண்டா! புதிதாக இப்பொழுதா சேரப் போகிறார்?” என்று கண்ணப்பன் தொடங்கினான்.

இருவரும் இவ்வாறு மாறி மாறி வாக்கு வாதம் செய்தார்கள். தாத்தா பேசுவதற்கு அவர்கள் விடவே இல்லை. கடைசியில் பள்ளிக்கு நேரமாகி விட்டதென்று கோபாலன் ஓடிவிட்டான்.

இவ்வளவு நேரம் சிரித்துக் கொண்டிருந்த கண்ணப்பனுடைய முகத்தில் கோபாலன் மறைந்ததும் கவலை படர்ந்தது. தாத்தா அதைக் கவனித்தார்.

“கண்ணப்பா, எதற்காக அவசரமாக என்னை இங்கே வரும்படி எழுதினாய்?” என்று அவர் மெதுவாகக் கேட்டார்.

உறக்க நிலையிலே ஓவியம் தீட்டும் கோபாலனுடைய விபரீதச் செயலைப்பற்றி விளக்கமாகக் கண்ணப்பன் எடுத்துரைத்தான்.

"உறங்கும்போதே எழுந்து நடமாடுவதும், ஏதாவது செய்வதும் ஒருவகை நோயாகும். அதற்குச் சிகிச்சையும் எளிதிலே செய்துவிடலாம். ஆனால் அவன் தீட்டும் அந்த ஓவியத்தின் பொருள்தான் எனக்கு விளங்கவில்லை" என்று அவன் முடிவாகக் கூறினான்.

கவனத்தோடும் கவலையோடும் இதுவரை அசையாமல் கேட்டுக்கொண்டிருந்த தாத்தா, "அந்த ஓவியம் எங்கே? அதை நான் பார்க்கவேண்டும்" என்றார்.

கண்ணப்பன் அதை எடுத்துத் தாத்தாவின் பக்கம் திருப்பினான்.

அதைப் பார்த்ததும், "ஹா!" என்று தாத்தா வாய்விட்டு அலறினார். துக்கம் அவர் நெஞ்சை அடைத்துக் கொண்டது.

கண்ணப்பன் திகைத்து நின்றான். அவன் கண்களை மற்றொரு முறை அந்த ஓவியம் இழுத்தது. ஓவியத்திலே உயிரோடு தோன்றிய அந்த ஆடவன் கையிலே ஓங்கிக் கொண்டிருக்கும் முக்காலி தன் மண்டையிலே தாக்குவது போல அவனுக்குப் பிரமை உண்டாயிற்று. கண்களை இறுக மூடிக்கொண்டான்.

"கோபாலன் இந்த ஓவியத்தைப் பற்றி என்ன சொல்லுகிறான்?" என்று தாத்தா நெஞ்சக் குமுறலோடு தயங்கிக் கேட்டார்.

"அவனுக்கு இதைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அவன் இதைப் பார்த்ததும் இல்லை. அதுதான்

அதிசயமாக இருக்கிறது. எல்லாம் கனவுபோல நடக்கிறது'' என்றான் கண்ணப்பன்.

இதைக் கேட்டதும் தாத்தாவுக்கு ஒருவகையான ஆறுதல் பிறந்தது; அவர் கவலை மறையத் தொடங்கியது. "அவன் இதை என்றுமே பார்க்க வேண்டாம்'' என்று கூறிக்கொண்டே அவர் தமது இடுப்பில் சாவிக்கொத்தோடு சேர்ந்து தொங்கிய பேனாக்கத்தியை எடுத்து அந்த ஓவியத் திரையைச் சின்னாபின்னமாகக் கிழித்து விட்டார்.

''ஐயையோ! ஓர் அற்புதமான ஓவியம் போய்விட்டதே! கோபாலனுக்கு இதனால் அழியாத புகழ் வந்திருக்குமே, தாத்தா!'' என்று கண்ணப்பன் படபடப்புடன் பேசினான்.

"இதனால் வருகின்ற புகழைக் காட்டிலும் துயரந்தான் பெரிதாக இருக்கும்'' என்று ஏங்கினார் தாத்தா.

"எப்படி, தாத்தா?'' என்று ஆவலோடு கேட்டான் கண்ணப்பன்.

தாத்தா அவனுடைய முகத்தை உற்றுப் பார்த்தார். விஷயத்தை அறிந்துகொள்ள அவனுக்கு இருந்த ஆவல் அதிலே தெளிவாக விளங்கியது. அவனிடம் சொன்னால் தவறில்லை என்று தாத்தா தொடங்கினார்.

''அந்த ஓவியத்தைப் பார்த்தாயா? முக்காலியை ஓங்கிக்கொண்டு கொலை வெறியோடு நின்றானே, அவன்தான் கோபாலனின் தந்தை—என் மகன்; குடிப் பழக்கத்திலே கெட்டுப் போனவன். ஒரு நாள் இரவு மிதமிஞ்சிய குடிவெறியிலே தன் மனைவியை முக்காலியாலே ஓங்கி மண்டையில் அடித்து விட்டான். அது காரணமாகவே அவள் இறந்துபோனாள். அந்தக் கொடுஞ்செயல் நடந்தபோது கோபாலனுக்கு இரண்டு

வயது; தாயின் பக்கத்திலே படுத்துக்கொண்டிருந்தான். அவன் வீரிட்டழுத குரல் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது" என்று கூறிக்கொண்டே தாத்தா விம்மி அழத் தொடங்கினார். அவரால் அதற்கு மேலே பேசமுடியவில்லை.

கண்ணப்பனுடைய கண்களிலேயும் கண்ணீர் பொங்கி வழிந்தது.

சற்று நேரம் கழித்து, "தாத்தா, இந்த விவரத்தைப் பற்றிக் கோபாலன் என்னிடம் சொன்னதே இல்லையே!" என்றான் கண்ணப்பன்.

"அவனுக்கு இது தெரியாது. தாய் இறந்த அடுத்த ஆண்டிலேயே தந்தையும் இறந்துவிட்டான். குடிவெறியால் தான் செய்த கொடுமையைப் பற்றித் தெரிந்ததும் என் மகன் மனம் உடைந்து போனான். சுயநினைவோடு இருப்பதே அவனுக்கு நரகமாகி விட்டது. அதனால் சதா குடியிலேயே மூழ்கிக் கிடந்து உயிர் துறந்தான். மூன்று வயதுக்குள்ளே இவை நிகழ்ந்ததால் கோபாலனுக்கு ஒன்றும் தெரியாது. வேறு யாருமே அவனிடம் இவற்றைப்பற்றிக் கூறாதவாறு நான் பார்த்துக்கொண்டேன். தாயும் தந்தையும் ஏதோ நோயினால் இறந்து போனதாகவே அவன் எண்ணிக் கொண்டிருக்கிறான்" என்றார் தாத்தா.

"அந்தப் படத்தைக் கிழித்து எறிந்தது சரி என்று இப்பொழுது எனக்குப் படுகிறது" என்றான் கண்ணப்பன்.

"அவன் எப்படி இதை எழுதினான்? அதுதான் எனக்கு விளங்கவில்லை" என்றார் தாத்தா.

"அது எனக்கு இப்பொழுது விளங்கிவிட்டது. குழந்தைப் பருவத்திலே தோன்றிய அந்தக் கோரக்

காட்சியும், பய உணர்ச்சியும் கோபாலன் மனத்தில் எங்கேயோ அடித்தளத்திலே மறைந்து கிடந்திருக்கின்றன. உறங்கும் நிலையில் அவனறியாமல் அவை உருவெடுத்திருக்கின்றன" என்று விளக்கம் தந்தான் கண்ணப்பன்.

# பூவின் சிரிப்பு

பூ சிரிக்கிறது. ஓயாத சிரிப்பு; மாருத புன்முறுவல். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வண்ணத்தையும், மணத்தையும் அள்ளி வீசுகின்றது. இன்னிசை முரன்று வரும் வண்டுகளுக்குத் தேனை மோகன இளநகையோடு கொடுக்கிறது. அடடா! அதன் வாழ்வு ஒரே இன்பம். கடைசி வரையில் களியாட்டம். அதிலும் காற்றுத் தேவன் வந்து உடலைத் தீண்டி விட்டால் அதன் இன்ப நடனத்திற்கு முடிவே இல்லை!

அதைப் பார்க்கும்போது உள்ளத்திலே எனக்கு என்னவோ மாதிரி இருக்கிறது. நாமும் தானே படைப்பின் சிகரமாக இந்த உலகத்தில் இருக்கிறோம்? எத்தனை கவலைகள், எத்தனை சலிப்பு, எத்தனை நோய், எத்தனை துன்பம், எத்தனை பொறாமை, பகைமை, எத்தனை பூசல்கள், சண்டைகள், கொடிய யுத்தங்கள்!—சே, எண்ணிப் பார்த்தால் நமக்கு அவமானமாக இல்லையா? காலையில் மலர்ந்து மாலையில் சுருங்கி நிலத்தில் விழும் பூவுக்குக்கூட வாழத் தெரிகின்றது; வாழ்க்கையைத் துய்க்கத் தெரிகின்றது. நமக்கு அதன் அறிவுகூட இல்லையா? பிறகு ஏன் இப்படிக் கவலைகளால் வாடுகின்றோம்? ஏன் இப்படி ஒருவரை ஒருவர் நாசஞ் செய்துகொண்டு வாழ்க்கையை நஞ்சாகச் செய்கின்றோம்? இத்தனை கவலைகள் நமக்கு மட்டும் எங்கிருந்து முளைத்தன? இத்தனை போராட்டம் எதற்காக?

மனிதா, நீ உன்னதமான அறிவைப் பெற்றிருக்கிறாய். உனக்கு அது தனிச் செல்வம். அதைக் கொண்டு எத்தனையோ வாழ்க்கை வசதிகளைத் தேடிக் கொண்டிருக்கிறாய். இறைவனின் அம்சமே நீ என் பதையும் கண்டிருக்கிறாய். உன்னுள்ளே, உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களினுள்ளே, கல்லிலே, கடலிலே, பூவிலே, பொறியிலே எங்கும் ஒரே இறைவன் இருக்கிறான் என்ற மிகப் பெரிய அற்புதமான உண்மையைக் கண்டிருக்கிறாய். பின் ஏன் உனக்குக் கவலை? ஏன் உனக்கு இந்த நாச எண்ணம்? சோறில்லையா? ஒருவனை ஒருவன் வெட்டாமல், குத்தாமல் சுகங் கிடைக்காதா? சிறகு மட்டும் இருந்தால் இந்த உலகத்தில் எத்தனையோ இன்பங்களைத் துய்க்கலாமே என்று ஏங்குகிறானும் ஒருவன். சிறகு பெற்ற ஈ என்ன செய்கிறது? மலத்தில் உட்காருகிறது. சீ, அதைச் சொல்லக்கூட அருவருப்பாக இருக்கிறது. சிறகு இருந்து என்ன பயன்? அதைப் பயன்படுத்த அறிவு வேண்டாமா? மனிதனுக்கு அறிவு இருக்கிறது. ஆனால் அதைக் கோணல் வழியில் அவன் செலுத்துகிறான். நேர்வழி கண்ணுக்கு முன்னாலே கிடந்தாலும் அது அவனுக்குத் தெரிவதில்லை.

மனிதா, உனக்குச் சோறு கிடைக்கவில்லையா? இயற்கை அன்னை சோறுபோட மறுத்துவிட்டாளா? உனது அறிவை நேராகச் செலுத்தினால் ஒன்றுக்குப் பத்தாக இயற்கை அன்னை கொடுக்கிறாள். ருஷியாவிலே பனிப் பாலைகளிலேகூட இன்று கோதுமை விளைகிறதாம். பனியிலே வளரக்கூடிய பாசியையும் கோதுமைப் பயிரையும் ஒட்டுச் சேர்த்து அவற்றிலிருந்து ஒரு புதிய கோதுமைப் பயிரை உண்டாக்கி

திருக்கிறார்களாம். அது பனிப் பிரதேசத்தில் வளர்ந்து பயன் தருகிறதாம். இப்படியெல்லாம் செய்யத் தெரிந்த பிறகு சோற்றுப் பஞ்சமேது? மனிதா, ஏன் இப்படி வீணாக அழிவு தேடிக்கொள்கிறாய்? எறும்பை அழிக்க வேண்டுமானால் இறைவன் அதற்கு இறகு கொடுப்பதாகச் சொல்லுவதுண்டு. அது பறந்து தீயில் விழுந்து மடிகிறது. அதுபோல உன்னை அழிப்பதற்காகவா இறைவன் அறிவைக் கொடுத்தான்?

மனிதா, எழுந்திரு. சோம்பலை உதறித் தள். கோணல் அறிவை நேராக்கு. பூவின் வாழ்க்கை ஒரு நாள். ஆனால் அதன் வாழ்க்கையின் இரகசியத்தை நீ பின்பற்றினால் நூறாண்டு இன்பமாக வாழலாம். நேர் வழியிலே நட. குறுக்கு வழியை நோக்காதே. பிறரைத் துன்புறுத்தி, வஞ்சித்து, அடிமைப்படுத்தி இன்பங்கொள்ள நினைக்காதே. அப்படி இன்பம் பெறுவது முடியாத செயல். அதனால் இன்பங் கிடைக்காது. இத்தனை நாள் வாழ்க்கையிலே உனக்கு அது தெரியவில்லையா? உன்து திறமையை ஈயைப்போலப் பயன் படுத்தாதே; பூவைப்போல வாழ். வானத்திலே பற; நீந்தி விளையாடு. உலகத்தை ஒரே குடும்பமாகப் பிணை. ஆனால் குண்டைப் போடாதே. ஆயிரம் வித்தைகள் புதிது புதிதாகச் செய். எல்லாம் இன்பத்திற்காக. அழிவுக்காக ஒன்றும் இருக்கக்கூடாது. பசுமாசுரனுக்குக் கை எப்படியோ அப்படி உனக்கு அறிவு. அவன் தன் கையைத் தன் தலைமேலேயே வைத்து அழிந்தான். அப்படி அழிந்து போகச் செய்யும் பூதமாக இந்த அறிவை மாற்றி விடாதே. இதை அலாவுதீனுடைய லாந்தர்ப் பூதமாகச்

செய்; உனது வேலைக்காரனுக்கு. எதற்காக? இன்பங் கொண்டு வர. எதற்காக? துன்பப் பேயை உலகி லிருந்து ஓட்ட. எதற்காக? அவனியை இன்ப வீடாக்க. எதற்காக? பூவின் வாழ்க்கையைப் போல மனிதன் வாழ்க்கை மலர.

# முன்னேற்றம்

சென்ற நூற்றாண்டிலே மனித சமூகம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பற்றிச் சில ஆண்டுகளுக்கு முன் ஒருவர் ஒரு நூல் எழுதினார். 'மகத்தான முன்னேற்றங்கள் ஏற்பட்ட நூற்றாண்டு' என்று அந்த நூலுக்குப் பெயர். அந்த மனிதர் வெகு சிரமப்பட்டுப் போன நூற்றாண்டிலே உண்டான விஞ்ஞான வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, கலை வளர்ச்சி என்றிப்படி எல்லாவற்றையும் குறித்துப் பக்கம் பக்கமாக வரைந்து தள்ளி, அந்த முன்னேற்றத்தின் மகத்தான தன்மையை நிலைநாட்ட முயன்றிருக்கிறார்.

அவர் எடுத்துக்கொண்டிருக்கும் சிரமத்தைக்கண்டு பெர்னாட்ஷாவுக்கு மனமிளகிப் போய்விட்டதாம். 'ஐயோ பாவம்! அந்த மனிதன் அத்தனைத் துன்பப் பட்டிருக்க வேண்டிய தேவையே இல்லையே! மனித சமூகத்தின் முன்னேற்றத்தை மிக எளிதாக ஒரே வாக்கியத்தில் கூறி நிலைநாட்டி விடலாமே' என்று அவர் அங்கலாய்த்தாராம். மனித சாதியின் முன்னேற்றத்தைப் பற்றி அவர் சுருக்கமாகக் கூறுவதாவது: "காட்டுமிராண்டியாகத் திரிந்த ஆதிக்கால மனிதன் பிறரைக் கொல்ல நஞ்சு தோய்ந்த அம்பை ஏவினான்; நாம் இன்று நச்சு வாயுவை ஏவுகிறோம்; இதுதான் நமது முன்னேற்றம்" என்கிறார் அவர்.

சற்று ஊன்றிப் பார்க்கப்போனால் பெர்னாட்ஷா சொல்லுவது ஒரு வகையில் உண்மைதான் என்று

தெரிய வரும். பழங்கால மனிதனைவிட நாம் எந்த வகையில் உயர்வு? அவன் கண்டறியாத மின்சார விந்தையும், ஆகாய விமானமும், அணுக்குண்டுகளும் நமக்கு நமது அறிவின் வல்லமையினுலே கிடைத்திருக்கின்றன. ஆனுல் அவையா முன்னேற்றத்திற்கு அடையாளம்? இன்று மனிதனுக்குப் பலவிதமான வசதிகள் உண்டாகி யிருப்பது மெய்தான். ஆனுல் அவையெல்லாம் இருந்து என்ன பயன்? இயற்கையின் சக்திகள் பலவற்றை மனிதன் தன் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்திருப்பதும் மெய்தான். ஆனுல் அவற்றைக்கொண்டு அவன் தன்னைத் தானே அழித்துக் கொள்வான் போலல்லவா தோன்றுகிறது? பாரதியார் கூறுகிருர், "யந்திர பீரங்கிகளும் சப்மரீன்களும் நாகரிகத்திற்கு அடையாளமல்ல. நிலக்கரிச் சுரங்கங்களும், ஆகாச வெடிகுண்டுகளும் அபிவிருத்திக்கு லட்சணமல்ல. அவை மனிதனுக்குப் பலமல்ல, துணையல்ல. அவை மனிதனுக்குப் பகை. மனிதனையும் அவனுடைய நாகரிகத்தையும் அழிக்கும் குணமுடையன" என்று.

விஞ்ஞானம் இன்று அற்புதமாக வளர்ந்திருக்கின்றது. உலகத்தை இன்ப வீடாகச் செய்யக்கூடிய சக்திகள், வசதிகள் மனிதன் கையில் அகப்பட்டிருக்கின்றன. ஆனுல் அவை இருந்து என்ன பயன்? மனிதனுடைய உள்ளம் பண்பட்டு வளரவில்லையே! அது இன்னமும் விலங்கு நிலையிலேயே இருக்கின்றதே!

இன்று மனிதன் விஞ்ஞானத்திலே ஆதிக்கம் பெற்றிருக்கிருன். அவன் அந்த விஞ்ஞானத்தால் அழிந்துபோகும் காலம் வராமல் இருக்கவேண்டுமானுல் அவனுடைய குரங்குத் தன்மை மாறவேண்டும்.

உள்ளம் பண்பட வேண்டும். அப்பொழுதுதான் மனித சமூகத்திற்கு உய்வுண்டு; அப்பொழுதுதான் மனித சமூகம் தனது முன்னேற்றத்தைப் பற்றிப் பெருமையடித்துக்கொள்ள முடியும்.

மனிதன் தன்னுடைய நாகரிகத்திற்கும் முன்னேற்றத்திற்கும் அறிகுறியாக வெடிகுண்டுகளையும், டாங்கிகளையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும் கருதும் வரையில் அவனுக்கு உய்வில்லை. உண்மையில் இன்று அவைகளை யெல்லாம் செய்து வைத்துக் கொண்டிருக்கும் மக்களே ஒருவரோடொருவர் சண்டை யிட்டுக்கொண்டு மண்டையை உடைத்துக் கொள்ளுகிறார்கள். ஒருவரை ஒருவர் மிக விரைவிலே அழித்து விடுவதற்குப் போட்டி போட்டுக்கொண்டு வழிகளும் படைகளும் கண்டு பிடிக்கிறார்கள். பாமரர்களாகக் கருதப்படும் மக்கள் அமைதியோடு வாழ்கிறார்கள். அப்படி இருக்கும்போது எதை நாகரிகம், முன்னேற்றம் என்று சொல்லுவது?

இன்று மனிதன் டாங்கிகளையும், பீரங்கிகளையும் அணிவகுத்து நிறுத்திப் பெருமைப்படுகிறான். சொந்த இனத்தையே ஒழித்துவிட எனக்கல்லவா இத்தனை இயந்திரங்கள் இருக்கின்றன என்று கர்வமடைகின்றான். ஆனால் எப்பொழுது அவன் இவற்றையெல்லாம் பார்த்துத் தனது அரக்கத் தன்மைக்காக நாண மடைகின்றானோ அப்பொழுதுதான் அவன் நாகரிகம் அடைந்தவனாவான்.

உலகமே ஒரு குடும்பம்; அதில் வாழும் அனைவரும் உடன் பிறந்தவர்கள்; அவர்கள் எல்லோரும் ஒருவன் போலவே இன்புற்றிருக்க வேண்டும் என்ற எண்ணத்தின் வளர்ச்சியே மனித சமுதாயத்தின் முன்

னேற்றத்திற்கு அளவுகோல். அதற்கு மாறானதெல்லாம் மனித சமூகத்தின் கீழ்நிலையையே காட்டுவதாகும்.

இந்த உண்மையைப் பல மகான்களும் அறிவாளிகளும் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் மனிதன் தனது சுயநலத்தால் அதைக் காதில் போட்டுக் கொள்வதில்லை. அவன் எப்படியாவது மற்றவர்களைவிடப் பெரியதோர் அளவில் இன்பமடைய வேண்டுமென்று பிறரை வஞ்சிக்க வழி கண்டு பிடிக்கிறான். பிறரை வஞ்சிப்பதாலும் அழிப்பதாலுந் தான் தனது இன்பத்தைப் பெருக்கிக்கொள்ள முடியுமென்று தவறாக எண்ணுகிறான்.

ஒருவன் மற்றவர்களைக் கொல்ல ஓர் ஆயுதம் செய்தால் அதற்கு ஈடுசொல்ல மற்றோர் ஆயுதத்தை வேறொருவன் செய்வான் என்பதை மனிதன் எண்ணிப் பார்ப்பதில்லை. பறக்கும் குண்டை உண்டாக்கியவன் தன்னைப் போல வல்லவன் இல்லை என்று மார் தட்டுகிறான்; உலகத்தைத் தனது காலில் மிதித்து நசுக்கி விடலாம் என்று கனவு காண்கின்றான். பிறகு அணுக்குண்டைத் தூக்கிக்கொண்டு வேறொருவன் தனக்கு நிகர் யாருமில்லை என்று கிளம்புகிறான்.

இந்தப் போட்டியில் மனிதன், தான் மனிதன் என்பதையே மறந்து விலங்காய் விடுகிறான். இது இப்படியே போய்க்கொண் டிருந்தால் மானிட சாதியின் அழிவு மிக விரைவில் ஏற்பட்டுவிடும்,

மானிட சாதி இன்பத்தோடு இந்த உலகத்திலே நிலைபெற்று வாழ வேண்டுமானால் அதன் குறுகிய சுயநல மனப்பான்மையையும், பேராசையையும், அகம்பாவத்தையும் இன்றே உதறித் தள்ளிவிட வேண்டும்;

முன்னேற்றத்தின் சின்னமாக இன்று விளங்கும் குண்டுகளையும் ஆயுதங்களையும் ஆழமான கடலிலே கொட்டிவிட வேண்டும். உள்ளத்தின் உயரிய பண்புகளாகிய அன்பு, இரக்கம், சகோதர உணர்ச்சி முதலிய அருங்குணங்களைப் போற்றி ஓங்கச் செய்யவேண்டும். உலகத்தின் ஒரு கோடியிலே உள்ள ஒரு மனிதன் சோறில்லாமல் வாடுகிறான் என்றால், 'அவனுக்கு உணவளித்துப் பசியாற்றும் வரையில் நான் அன்னத்தைக் கையில் தொடமாட்டேன்' என்று நினைக்கும் உள்ளப்பான்மை எங்கும் காணப்பட வேண்டும். அப்பொழுதுதான் மனித சாதி முன்னேற்றமடைந்ததாகக் கருதப்படும்.

பெரியோர்கள் இதைத்தான் வற்புறுத்திக் கூறியிருக்கிறார்கள். காந்தியடிகள் போன்ற மகான்கள் இதையேதான் முழங்கினார்கள். மனிதன் தனது அறியாமையினால் அவர்களுடைய வார்த்தைக்குச் செவி சாய்க்க மறுக்கிறான். அவர்களையெல்லாம் பிற்போக்காளர்கள் என்று பேசவும் துணிகிறான்.

ஆனால் இதுவரை உலகத்தையே நடுநடுங்கும்படி செய்துகொண்டிருந்த கொடிய யுத்தம் மனுதனுடைய தவறை நன்கு மெய்ப்பித்து விட்டது. அத்துடன் இன்று கிடைத்திருக்கும் கொடிய ஆயுதங்கள், குண்டுகள் மனித சாதியின் ஆயுளைச் சோதனை செய்வதற்காகவே தோன்றியிருக்கின்றன. அவற்றை நமது முன்னேற்றத்தின் சின்னமாகக் கருதுவோமா அல்லது அவற்றை நமது சாதியை அழிக்கவந்த யமனைக் கருதி ஒழிப்போமா என்பதைப் பொறுத்தே நமது எதிர்காலம் இருக்கிறது.

# காற்றாடி

ஒரு சிறிய ஓலை நறுக்கு. அதன் மையத்தில் வட்டமாகச் சிறிய தொளையிட்டு முள்ளைச் செருகிச் சோளத் தட்டுடன் இணைத்துக் காற்றிலே பிடித்து விட்டால் வந்துவிட்டது அதற்கு உயிர். ஒரே வேகம். கிறுகிறுவென்று சுற்றத் தொடங்கி விடுகிறது. இந்தக் காற்றாடியின்மேல் சிறு வயதிலே ஏற்பட்ட விருப்பம் இன்னும் எனக்கு மாறாதிருக்கின்றது. அதன் சுழற்சியிலே எத்தனை உணர்ச்சிகள் பிறக்கின்றன! வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகளைப்பற்றி விரிவுரை செய்பவன் அதைக் காற்றாடிக்கு ஒப்பிடுகின்றான். காற்றாடியின் முனைகள் மேலும் கீழுமாய் மாறி மாறிச் சுற்றுவதுபோல வாழ்க்கை ஓங்கியும் தாழ்ந்தும் மாறிக் கொண்டிருக்கிறதாம். ஒரு நிலையில் நில்லாது அலையும் மனத்திற்குக் காற்றாடியை உவமை கூறுவதுண்டு.

சித்திரைத் திங்களிலேயே காற்றாடிக்கு உயிர் வந்து விடும். பனையோலையைத் தேடிச் சிறுவர்கள் புறப்பட்டு விடுவார்கள். ஆனால் ஆடித் திங்களில்தான் காற்றாடிக்கு நல்ல இளமைப் பருவம்! அப்பொழுது அதன் முறுக்கும், வேகமும் சொல்லி முடியா.

காற்றுத்தேவன் காற்றாடியின் காதலன். அவன் மெய் தொட்டுவிட்டால் அதற்கு உண்டாகும் இன்பம் கரைகடந்து விடுகிறது. அந்த முள் மட்டும் இல்லாவிட்டால் ஓலை நறுக்கின் களியாட்டம் எப்படி முடியுமென்றே சொல்ல முடியாது.

காற்ருடியின் முதுகிலே தொளே போட்டுக் கொண்டு முள் அசையாது நிற்கிறது. அது துன்பம் தருகிறதா, காதலர் கூட்டத்திற்கு இடைஞ்சல் செய்கிறதா, துணை செய்கிறதா என்று சிந்தித்துப் பார்க்கும்போது பெரிய பெரிய தத்துவ விசாரணைகள் எல்லாம் உதயமாகி விடுகின்றன. எது விடுதலே, எது கட்டுப்பாடு என்றெல்லாம் உள்ளத்திலே விவாதம் ஏற்பட்டுவிடுகிறது. ஆனல் இவற்றிற்கெல்லாம் காற்ருடி செவி சாய்க்கிறதா என்ன? அது ஒன்றையும் கவனியாது தான் பெற்ற இன்பத்திலே மூழ்கி மூச்சுக்கூட வாங்காமல் விர்ரென்று தலேகால் தெரியாதபடி வட்டமிடுகின்றது. அது மட்டுமா? சுற்றும்போது அந்த ஓலே தனது சொந்த உருவத்தை இழந்து, ஒரே வட்டமாகின்றது. இறைவனே அச்சாணியாகக் கொண்டு வாழும் ஞானிகளும் இப்படித்தான் தமது உருவம் இழந்து, இன்பப் பெருக்கிலே வட்டமிட்டுக் கொண்டிருக்கிருர்களாம்.

காற்ருடி சுற்றும்போது அதைக் கவனித்துப் பாருங்கள். மாயோன் கையில் திகிரி போன்ற ஒரு வட்டம் தோன்றுகிறதா? நன்கு கவனியுங்கள். அந்த வட்டத்திலே காற்ருடி இல்லாத இடமிருக்கின்றதா? தொட்டுக் காட்ட முடியுமா? முடியாது. அது இறைவனேப் போன்று எங்கும் நிறைந்து, ஆனல் அதே சமயத்தில் ஓரிடத்திலும் இல்லாதிருக்கின்றது.

சிறுவர்களுக்கு இவைபோன்ற ஆராய்ச்சிகளேப் பற்றிக் கவலேயில்லே. அவர்களுக்குக் காற்ருடியின் வேகத்திலேதான் கண். காற்ருடி சுற்றுகிறது. சிறுவர்கள் அதைக் கண்டு உவகை மீறிக் குதிக்கிருர்கள்; கை தட்டிக் களிக்கிருர்கள்.

சுழன்று சுழன்று காற்றாடி அவர்களுக்கு மாறாத இன்பந் தருகிறது. அதைப் போலவே மூச்சிருக்கும் வரையில் ஓயாமல் முயன்று முயன்று நான் உலகிற்கு இன்பம் அளிக்க வேண்டும் என்பது எனது ஆசை. காற்றாடியைப் பார்க்கும்போதெல்லாம் இவ்வாசை மேலோங்கி நிற்கிறது.

# கரிக் குருவி

'காகங் கரைந்தது காலையுமாயிற்று' என்று தொடங்கும் ஓர் அழகிய பாட்டு உண்டு. அதிகாலையிலே காக்கையின் குரலை நாம் கேட்கிறோம்; மெய்தான். ஆனால் அதற்கு முன்னாலேயே மற்றொரு குருவி குரல் கொடுப்பதைக் கவனித்திருக்கிறீர்களா? அதுதான் கரிச்சான் அல்லது காரி என்னும் கரிக் குருவி. காக்கைக்கு முன்னெழுந்து கூவத் தொடங்குகிறது அந்தச் சிறிய பறவை.

உழவர்களுக்கு அதன் குரல் நன்றாகத் தெரியும். 'கரிக் குருவி கூப்பிடுகிறது; கவலை இறைக்கப் புறப்படலாம்' என்று அவர்கள் பேசிக் கொள்வார்கள்.

எனக்கென்னவோ சிறு வயது முதற்கொண்டு அந்தக் குருவியைக் கண்டால் பிடிக்கிறதில்லை. அந்தக் காலத்திலே என்னை இரட்டை வால் என்று சொல்வார்கள். அதாவது நான் மிகவும் துடுக்கான பிள்ளை என்பது பெரியவர்களின் கருத்து. ஆனால் நான் அதை ஒப்புக் கொள்ளவில்லை. இரட்டை வால் என்று யாராவது பேசிவிட்டால் எனக்குக் கோபம் வரும். கரிக் குருவியிலே இரண்டு வகை உண்டு. ஒன்றிற்கு இரட்டை வாலுண்டு. அதனால் அதற்கு இரட்டை வால் கரிக் குருவி என்று பெயர். ஆனால் அந்த வாலுக்கும், எனக்கு அதன் மேலுள்ள வெறுப்புக்கும் யாதொரு சம்பந்தமும் இருக்கவில்லை.

கன்னங் கரேலென்று காக்கை இருக்கிறது; குயிலிருக்கிறது. அவை போதாவா? இன்னும் ஓர்

இருட்டுக் குருவி எதற்காகப் பிறந்திருக்கிறது? காக்கையாவது உலகத்தைச் சுத்தம் செய்கிறது; குயிலாவது இனிமையாகக் கூவுகிறது. இந்தக் கரிக்குருவி என்ன செய்கிறது? வைகறையில் துயில் எழுப்ப ஒரு நல்ல, அழகிய பறவை இருக்கப்படாதா? அதனுடைய குரலைப் பார்; எத்தனை கடூரம்! இவ்வாறாக நான் வெறுப்போடு எண்ணமிடுவேன்.

இரட்டை வால் கரிக்குருவி மிகத் தந்திரம் தெரிந்தது. அது ஆட்டின் மேலே ஒய்யாரமாக வாலை ஆட்டிக்கொண்டு உட்கார்ந்து கொள்ளும். ஆடு பாவம், மேய்ந்து கொண்டே போகும். போகப் போகச் செடிகளின் மேலே, புல்லின் மேலே, தரையின் மேலே ஒட்டிக் கொண்டிருக்கும் வெட்டுக்கிளி முதலிய சிறு பூச்சிகள் பறந்து வேறிடம் பார்த்துக்கொள்ளக் கிளம்பும். இந்தக் குருவி ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து லபக்கென்று அவற்றை வாயில் போட்டுக்கொண்டு மறுபடியும் ஆட்டின் மேலே சவாரி செய்யத் தொடங்கி விடும். அதைக் காணும்போது எனக்கு வெறுப்பு மேலும் அதிகரிக்கும். சாதுவான ஆட்டை இப்படித் தன் காரியத்திற்காகப் பயன்படுத்திக் கொள்வதைக் காண எனக்குச் சகிப்பதில்லை.

ஆனால் அண்மையில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியால் அந்த வெறுப்பு மாறிவிட்டது.

ஒரு மாலை நேரம். இளங்காற்று இனிமையாக வீசிக் கொண்டிருந்தது. நான் மேட்டு நிலங்களிடையே உலாவிக் கொண்டிருந்தேன். ஓரிடத்தில் ஒரு கிழவன் செம்மறி ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான். வழக்கம்போல ஓராட்டின் மேலே இரட்டை வால் கரிக் குருவி ஒன்று உரிமையோடு அமர்ந்து தன்

வயிற்றுக் காரியம் பார்த்துக் கொண்டிருந்தது. நான் அதன்மேல் கல்லை விட்டெறிந்தேன்.

"சாமி, ஏன் உங்களுக்கு அந்தக் குருவியின்மேல் அத்தனை கோபம்?" என்று கேட்டுக்கொண்டே இடையன் என்னை நோக்கி வந்தான்.

"அதற்கென்ன அத்தனை கொழுப்பு? ஆட்டின் முதுகிலே உட்கார்ந்து கொண்டு அதன் வேலையைப் பார்! எத்தனை தந்திரம்!" என்றேன் நான்.

"அந்தக் குருவியாவது தேவலையே! மனிதன் அதைவிடப் பொல்லாதவனுச்சே!" என்ருன் கிழவன். அவன் பேச்சைக் கேட்டு நான் திகைத்துப்போனேன். "என்ன, அப்படிச் சொல்லுகிருய்? மனிதன் எப்படிப் பொல்லாதவனுவான்?" என்று கேட்டேன்.

"கரிக் குருவி ஆட்டின் மேலே தந்திரமாக உட்கார்ந்து கொள்ளுகிறது மெய்தான். ஆனல் அது ஆட்டின் வயிற்றில் அடிப்பதில்லையே! தனக்கு வேண்டிய இரையைத் தாஞகவே தேடிக்கொள்கிறது. மனிதன் அப்படி இல்லை" என்ருன் அவன்.

அவன் சொல்வது எனக்கு ஒரு புதிராக இருந்தது. இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், "நீ என்னவோ பேசுகிருய். அதில் ஒன்றும் விஷயம் இருப்பதாகத் தோன்றவில்லையே?" என்று தோரணையோடு கேள்வி போட்டேன்.

"விஷயமா? இதுதான் விஷயம்: அந்தக் குருவி ஆட்டின் மேலே உட்கார்ந்திருந்தாலும் அதன் உணவைத் தொடுவதில்லை. ஆடு புல்லை மேய்கிறது. கரிக் குருவி பூச்சிகளைப் பிடித்துத் தின்கிறது. ஆடு வாகனமானதோடு சரி. ஆனல் என்னைப் பாருங்கள். நான் இந்த ஆடுகளை நாள்தோறும் காலையிலிருந்து

பொழுது சாயும் வரையில் மேய்க்கிறேன். கண்ணுங் கருத்துமாக வளர்க்கிறேன். ஆனால் ஆடுகள் குட்டி போட்டுப் பெருகப் பெருகப் பண்ணைக்காரர் வீட்டு இரும்புப் பெட்டிதான் நிறைகிறது" என்றான் அவன்.

அவன் கூறியவற்றைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டு அசையாமல் நின்றிருந்தேன்.

"கிழவன் ஏன் இப்படிப் பேசுகிறான் என்று யோசிக்கிறீர்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. வேடிக்கையாக என்னவோ வாய்க்கு வந்ததைச் சொன்னேன். பண்ணைக்காரர் இல்லாவிட்டால் இந்த வயதிலே எனக்கு அரை வயிற்றுக் கஞ்சிகூடக் கிடைக்காது. எல்லாம் அவர்கள் தயவுதான்" என்று கூறிக் கொண்டே அவன் சிரித்தான். அடுத்த விநாடியிலே ஆடுகளை மேய்ப்பதிலே அவன் கவனம் செலுத்திக் கொண்டு போய்விட்டான்.

அந்த இடையனைச் சந்தித்து உரையாடியது முதல் நான் கரிக் குருவியைப் பற்றி அலட்சியமாக எண்ணுவதில்லை. ஒரு வகையிலே கரிக் குருவி மனிதனைவிட மேலானதுதான்.

# குறட்டை

ஒரு பெரிய செல்வர் வீட்டுத் திருமணத்திற்குச் சென்று நான் மிகப் பெரிய சங்கடத்திற் குள்ளானேன் என்று சொன்னால் நீங்கள் யாரும் எளிதில் நம்ப மாட்டீர்கள். 'திருமணம் என்றாலே குதூகலமான நிகழ்ச்சி அல்லவா? அதிலும் பணம் படைத்தவர் நடத்தும் திருமணத்தைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?' என்று இப்படிக் கேள்விகள் உடனே உங்கள் உள்ளத்தில் உதயமாகி விடும். மெய்தான். அந்தத் திருமண வைபவத்திலும் குதூகலத்திற்குக் குறைவே கிடையாது. எதிர்பார்த்ததற்கும் அதிகமாக இருந்ததென்று தான் சொல்ல வேண்டும். நள பாகத்தை எளிதில் தோற்கடிக்கும் அறுசுவை உண்டிகள், முதல்தர வித்துவான்களின் இசை யரங்குகள், பரத நாட்டியம், கும்பகோணத்துக் கொழுந்து வெற்றிலை, நெய்யில் வறுத்தெடுத்த களிப் பாக்கு என்று இப்படி நாளெல்லாம், ஏன் இரவு பதினொரு மணி வரையில், மாறி மாறிக் கிடைத்துக்கொண்டே இருந்தன. எங்கே பார்த்தாலும் விருந்தைப் பற்றியே பேச்சு; அது முடிந்தால் இசைப் பேச்சு; பரத நாட்டியப் பேச்சு; 'ஆகா! அற்புதமான ஏற்பாடு' என்று வெற்றிலையை மடித்து வாயில் போட்டுக் குதப்பிக்கொண்டே அனைவரும் உரையாடிப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இத்தனை கோலாகலங்கள் இருந்தமையால்தான் அன்று இரவு நான் மிகவும் துன்பப்பட வேண்டிய தாய் விட்டது. பகலெல்லாம் ஒரே உற்சாகம். கண்

ணுக்கு விருந்து, காதுக்கு விருந்து, இவை தப்பினல் வயிற்றுக்கு விருந்து என்றிருந்தால் உள்ளத்திலே கவலைக்கு இடமிருக்க முடியுமா? நான் அன்று உறங்கப் போகும் வரையில் இன்ப உலகத்திலே மிதந்து கொண்டிருந்தேன். அதனல் திருமண நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்த பிறகு இரவு பதினெரு மணிக்கு எனக்கு என்றும் இல்லாத வகையில் தூக்கம் தள்ளிக்கொண்டு வந்தது.

வந்திருந்தவர்களுக் கெல்லாம் படுக்க வசதியாக ஏற்பாடு செய்திருந்தார்கள். கூடம் முழுவதும் ஒழுங்காக மெத்தைகள் விரிக்கப்பட்டிருந்தன. நான் அப்படியே ஒரு பட்டுத் தலையணையின் மேல் சாய்ந்தேன். அன்றைய நிகழ்ச்சிகளெல்லாம் ஓர் இன்பப் படக் காட்சி போல மனத்தின்முன் தோன்றித் தூக்க மயக்கத்தோடு கலந்து எனக்கு ஆழ்ந்த அமைதி அளிக்கலாயின.

அந்த நேரத்தில்தான் எனது சங்கடம் தொடங்கிற்று.

எனக்குப் பின்புறத்தி லிருந்து எருமைக் கடா பெருமூச்சு விடுவது போல ஓர் அரவம் கேட்டது. உறுமுவது போலும் குரல் வந்தது. எனக்குச் சந்தேகம் கிளம்பிற்று. யாராவது எருமையையோ அல்லது பன்றியையோ கொண்டுவந்து இப்படி வேடிக்கை செய்யத் தொடங்கி விட்டார்களா என்று முதலில் நினைத்தேன். ஆனல் சற்று நேரத்தில் உண்மை வெளியாயிற்று. அந்த அரவம் எனக்குப் பக்கத்திலே ஒரு வெல்வெட் மெத்தையிலே சயனித்திருந்த பேர்வழியின் மூக்கிலோ அல்லது குரல்வளையிலோ இருந்துதானென்று திட்டமாகக் கூற முடியாத

படி முரைச்சலிட்டுக் கொண்டு புறப்படுகிறதென்று தெரிய வந்தது.

அந்த மாதிரி முரைச்சலை நான் அதுவரையில் கேட்டதில்லை. மனிதனால் அது போன்ற ஒலி அலைகளைப் படைக்க முடியுமா என்று எனக்கு இன்னும் சந்தேகமாகவே இருக்கின்றது. இத்தனை பெரிய மனிதன் குழந்தைகளுக்கு அச்சங் காட்டுவதுபோல ஏன் இப்படி என்னிடம் வந்து நடுநிசியிலே 'கொர்முர்' என்று உறுமுகிறான், என்று திரும்பிப் பார்த்தேன். அது சமயம் என் உள்ளத்திலே கோபம் கொதித்துக் கொண்டிருந்தது. அந்த ஆசாமி மட்டும் நான் எண்ணியபடி சேட்டை பண்ணிக் கொண்டிருந்தானானால் என்ன செய்திருப்பேனோ சொல்ல முடியாது. ஆனால் அந்த மனிதனோ வாயைத் திறந்து கொண்டு ஆழ்ந்த உறக்கத்திலிருக்கிறான் !

அத்தனை கொர்முர்ரிலும் உறங்குகிறானே மனிதன்! அந்தப் பிறவியின் திறமையைக் கண்டு எனக்கு வந்த கோபமெல்லாம் எங்கேயோ மறைந்து விட்டது; ஒரு வியப்புணர்ச்சிதான் மனத்திலே நிறைந்து நின்றது. உண்மையில் அவன் கும்பகர்ணஜித்தாகத்தான் இருக்க வேண்டுமென்று நான் நிச்சயித்தேன்.

இங்ஙனம் சிறிது நேரம் அவனை உள்ளூறப் பாராட்டிவிட்டுக் கண்ணை இறுக மூடிக்கொண்டு படுத்தேன்; கையை வைத்துக் காதுகளையும் அடைத்துக் கொண்டேன். என்ன செய்தும் எப்படியோ அந்த உறுமல் எனக்குள்ளே புகுந்து மூளையில் தாக்கிக் கொண்டே இருந்தது.

உறுமலென்றாலும் ஒரே மாதிரியாக வந்து கொண்டிருந்தால் கேட்பாருக்குக் கொஞ்சம் சமாதானமாக

இருக்கும். கனாத்திற்குக் கூட நினைக்க முடியாத வெவ்வேறு நாத வடிவத்தில் வெளிப்பட்டால் யாரால்தான் அதைப் பொறுத்துக்கொள்ள முடியும்?

(குர் ர் ர் ர்...என்று ஆரோகணம்; இஸ்ர்...இ...ஸ் ஸ் ஸ்...அஹ் ஹ என்று இடைப்பட அவரோகணம். மறு நிமிடத்திலே கரியால் ஓடும் பஸ் போல டபடப என்று கிளம்பி டபக்கென்று நின்றுவிடுகிறது. பிறகு திடீரென்று திருப்பதி ஆண்டவன் கோயில் குரங்கு போல உர் என்று தொடங்குகிறது. உச்ச ஸ்தாயிக்குச் சென்று பலூன் வெடிக்கிறது போலச் சத்தமிட்டு அடங்கி விடுகிறது.

இப்படி அடங்கும்போதுதான் வேதனை பொறுக்க முடிவதில்லை. அடுத்த நொடியில் என்ன புதிய கோரத்தில் புறப்படப் போகிறதோ என்று பயந்து உள்ளம் வெடித்துப் போவது போல அடித்துக் கொள்ளுகிறது.)

என்னால் கொஞ்சமும் சகிக்க முடியவில்லை. இந்த மாதிரி ஆட்களை எதற்காகத் திருமணத்திற்கு அழைக்கிறார்கள் என்று மாப்பிள்ளை, பெண் வீட்டார்களைச் சீறி வைது கொண்டிருந்தேன். அதனால் ஒரு பயனும் ஏற்படவில்லை.

பிறகு சற்றுப் பலமாக, 'ஏன்காணும் இப்படி உறுமுகிறீர்?' என்று வார்த்தை சொன்னேன். அத்தனை நாத பேதங்களுக்கும் ஈடு கொடுக்கிற பேர்வழி எனது முணுமுணுப்புக்கா செவி சாய்க்கப் போகிறார்? இது கூடத் தெரியவில்லையே என்று என்னை நானே கடிந்து கொண்டேன்.

அந்தச்சமயத்திலே மனத்தை அடக்கும் சக்தியைப் பற்றி நினைவு வந்தது. யோகிகள் தங்கள் மனத்தை

அடக்கி உலக விஷயங்களையே மறந்துவிடுவதைப் பற்றி எண்ணிப் பார்த்தேன். உள்ளத்தை ஏதாவ தொன்றில் நிலைக்கச் செய்துவிட்டால் அருகில் என்ன நடந்தாலும் தெரியாதென்று சொல்லுகிறார்கள். இடி முழக்கங்களும் செவியில் பாயா என்கிறார்கள். யாரோ ஒரு தத்துவ ஞானிக்குப் பகைவர் நகரிற் புகுந்து சூறையாடியது கூடத் தெரியவில்லையாம். வால்மீக ருக்குத் தம்மைச் சுற்றிப் புற்று வளர்ந்து மூடியதே புலனாகவில்லையாம்.

ஆமாம், அவையெல்லாம் மெய்யென்றாலும் என் னுடைய மனம் அப்படி அடங்கவேணுமே! அவன் அப்படிச் செய்கிறான், இவன் இப்படிச் செய்கிறான் என்று பேசி என்ன பயன்?

அந்த மனிதனை எழுப்பிச் சமாதானமாக விஷயத் தைச் சொன்னால் என்ன என்று ஒரு யோசனை உதய மாயிற்று. ஆமாம், அதுதான் நல்லது என்று அவரை எழுப்பலானேன். "ஓய், உம்மைத்தானையா, ஏன் இப்படிச் சப்தம் பண்ணுகிறீர்?" என்றேன்.

அவர் மெதுவாக விழித்து எழுந்து உட்கார்ந்தார். கண்ணைப் பிசைந்து விட்டுக்கொண்டார். வாய் கிழிந்து போகுமோ என்னவோ என்று அஞ்சும்படியாக அண் ணாந்து ஆ...ஹ் என்று ஒரு நீண்ட கொட்டாவியும் விட்டார். பிறகுதான் அவர் மூளைக்கு எனது கேள்வி எட்டியிருக்கும் போலிருக்கிறது. "என்ன?" என்று பதில் கேள்வி போட்டார். "ஏனையா இப்படிக் குறட்டை போட்டுத் தொந்தரவு செய்கிறீர்?" என்று அடங்கிய குரலில் கேட்டேன்.

"நானா குறட்டை போடுகிறேன்? சும்மா தூங்கிக் கொண்டிருப்பவனை எழுப்பி நடுநிசியிலே ஏன்

வாயைப் பிடுங்குகிறீர்? கல்யாண விருந்து ஆட்டி வைக்கிறதாக்கும்!'' என்று பேசிவிட்டு மறுபடியும் திரும்பி உடனே படுத்துவிட்டார். நான் திகைத்துப் போனேன்; என்ன பதில் கூறுவது என்று தோன்ற வில்லை. குறட்டை போடுகிறவர்களுக்குத் தாங்கள் செய்யும் சப்த ஜாலங்களைப்பற்றித் தெரிகிறதே இல்லை; பிறர் சொன்னாலும் அவர்கள் நம்பமாட்டார்கள் என்று எனக்குத் தோன்றிற்று.

அதனால் அவருடன் வாதாடுவதைவிட அவர் நித்திரை போகுமுன்பே நானும் தூங்கிவிட்டால் பிரச்சினை ஒருவாறு தீர்ந்துவிடும் என்று எண்ணி மறு வார்த்தை கூறாமல் சாய்ந்தேன். ஆனால் அந்த மகான் படுத்ததும் நாலு மூச்சுத்தான் நேராக வந்தன. மறுபடியும் பழையபடி குறட்டை தொடங்கிவிட்டது.

அவரை மேலும் எழுப்புவதில் ஒரு பயனும் ஏற்படாது என்று தோன்றியதால் வேறு எங்காவது இடம் பார்த்துக்கொள்ளலாம் என்று கிளம்பினேன். ஒரே இருட்டு. எங்கே பார்த்தாலும் பலபேர் படுத்துக் கொண்டிருந்தார்கள். மின்சார விளக்கைப் போடுவதற்கும் இடம் தெரியவில்லை. ஓர் இரண்டடி எடுத்து வைத்ததும் யாரோ ஒருவர் காலை மிதித்துவிட்டேன். அதனால் அவர் என்னவோ முணுமுணுக்கத் தொடங்கி விட்டார். இனி எச்சரிக்கையாக நடக்கவேண்டுமென்று அடிமேல் அடி வைத்துப் பம்பிப் பம்பி நகரத் தொடங்கினேன். அந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவர் விழித்துக் கொண்டார் போலிருக்கிறது. “டேய்! யாரது? என் இப்படி இருட்டிலே பதுங்குகிறாய்? கல்யாண வீட்டிலே முடிச்சவிழ்க்கவா?'' என்று சத்தம் போடலானார்.

மற்றவர்களும் விழித்துக்கொண்டால் நிலைமை ஆபத்தாய்விடுமே என்று சட்டென்று மறுபடியும் பழைய இடத்திற்கே வந்து படுத்துவிட்டேன். 'சரி, இன்று எனக்கு வேறு கதியில்லை. இங்கேயே கிடந்து சகிக்க வேண்டியதுதான்' என்று முடிவு செய்து கொண்டேன். ஓர் இரவிலேயே இத்தனை தொல்லை யென்றால் அந்த மனிதன் வீட்டிலே மனைவி மக்கள் ஆண்டு முழுவதும் இதை எப்படிச் சகிக்கிறார்களோ என்று அவர்கள்பால் பரிவு கொள்ளலானேன்.

எவ்வளவு நேரம் நான் அவர்களுடைய பரிதாப நிலைமையைப் பற்றி எண்ணிக்கொண் டிருந்தேனோ, தெரியாது. எப்படியோ அந்த எண்ணத்தோடேயே உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டேன். மறுநாட் காலையில் யாரோ ஒருவர் அதட்டி அதட்டி எழுப்பியிராவிட்டால் எப்பொழுது விழித்திருப்பே னென்று திட்டமாகச் சொல்ல முடியாது. "ஓய், யாரையா நீர்? மணி எட்டாகியும் இப்படிக் குறட்டை போட்டுக்கொண்டு தூங்குகிறீரே; எழுந்திரும்" என்று அதட்டும் குரல் காதில் புகுந்து என்னைத் திடுக்கிடச் செய்தது. எழுந்து சுற்று முற்றும் பார்த்தேன். அப்பொழுது தூங்கிக்கொண் டிருந்தவன் நான் ஒருவன்தான்!

கத் தெரியாது. மூன்று மணி ரெயிலிலே வந்து இறங்கி எப்படிப் போகிறதென்று மனசு அடித்துக் கொண்டே இருந்தது.

இளமங்கை: பாட்டி, ஏன் இப்படி இரவு வேளையிலே தனியாக வந்தீர்கள்? வழியில் துணை கிடைக்காவிட்டால் ரொம்பக் கஷ்டப்படுவீர்களே!

கிழவி: என்ன செய்கிறது? இந்த ரெயிலை விட்டால் பிறகு காலையில் ஐந்து மணிக்குத்தான் அடுத்த ரெயில் வந்து சேரும். அதில் வந்தால் ஊர் போய்ச் சேருவதற்குள்ளே முகூர்த்தமெல்லாம் முடிந்து போகும். எப்படியும் முகூர்த்தத்திற்கு முன்னே வர வேண்டுமென்று இந்த ரெயிலுக்கே புறப்பட்டு விட்டேன். நல்ல வேளையாக நீ துணை கிடைத்தாய். நீயும் கல்யாணத்திற்குத்தானே...

இளமங்கை: இல்லை, பாட்டி. நான் என் சிநேகிதி வீட்டுக்குப் போகலாமென்று வந்தேன்.

[பேசிக்கொண்டே இருவரும் நடக்கிறார்கள்.]

கிழவி: சிநேகிதி வீட்டுக்கா? அதற்கா இந்த நேரத்தில் வந்தாய்? சிறு வயசுப் பெண்களெல்லாம் இப்படித் தனியாக இருட்டிலே வரலாமா? இந்தக் காலத்துப் பெண்களே இப்படித்தான். நாங்களெல்லாம் சிறு வயசாக இருக்கும்போது இப்படி யெல்லாம் வர மாட்டோம்.

இளமங்கை: என்ன பயம், பாட்டி? இங்கிருந்து ஊர் அரை மைல்தானே?- தள்ளாத வயசிலே நீங்கள் தனியாக வந்திருக்கும்போது எனக்கென்ன?

கிழவி: முகூர்த்தத்தைக் காலையிலே வைத்துவிட்டார்கள். அதனால்தான் ராத்திரி வண்டிக்கு வந்தேன்.

இளங்கை: யாருக்கு பாட்டி, கல்யாணம்?

கிழவி: அவனுக்குத்தான்—நம்ம ராமசாமிக்கு. இத்தனை நாள் கழித்து இப்பொழுதுதான் அவனுக்கு நல்ல புத்தி வந்திருக்கிறது.

இளங்கை: (திடுக்கிட்டு) யாருக்கு? ராமசாமிக்கா? எந்த ராமசாமி, பாட்டி?

கிழவி: பெரிய வீட்டு ராமசாமிக்குத்தான். அவன் எனக்குப் பேரன் ஆகவேணும். அவன் கல்யாணத்தைப் பார்த்துவிட்டுத்தான் சாகவேணுமென்று எனக்கு ஆசை. இப்பொழுதுதான் அவனுக்கு வேளை வந்து சேர்ந்தது.

இளங்கை: (கலக்கத்தோடு) இந்த ஊரிலே பொதுக் காரியங்களில் எல்லாம் ஈடுபட்டு நல்ல வேலை செய்வாரே, அந்த ராமசாமிக்கா கல்யாணம்?

கிழவி: ஆமாம் அவனுக்குத்தான். ஊர்ப் பொதுக் காரியம் என்றால் அவனுக்கு உயிர். உனக்கு அவனைத் தெரியுமா? நீ முன்னால் இந்த ஊருக்கு வந்திருக்கிறாயா?

[இளங்கை விம்மி ஏங்கிப் பெருமூச்சு விடுகிறாள். கிழவி அதைக் கவனியாமல் பேசிக் கொண்டிருக்கிறாள். அம்மங்கை அதையுணர்ந்து மனதைத் திடப்படுத்திக் கொள்கிறாள்.]

இளங்கை: (தடுமாற்றத்துடன்) எனக்கு...எனக்குத் தெரியாது; கேள்விப்பட்டிருக்கிறேன்; அதனால் கேட்டேன்.

கிழவி: இத்தனை நாளாக அவன் கல்யாணம் பண்ணிக் கொள்ள மாட்டேனென்று ஒரே பிடிவாதம் பண்ணி

ரான். இப்பொழுதுதான் அவனுக்கு நல்ல காலம் வந்திருக்கிறது.

**இளமங்கை:** ஏன் கல்யாணம் வேண்டாமென்றார்?

**கிழவி:** அந்தக் கூத்தை ஏன் கேட்கிறாய்? இந்த ஊரிலே ஒரு சிறுக்கி வந்திருந்தாள். வாத்தியார் வேலை பண்ணுவதாகச் சொல்லிக்கொண்டு அவனை மயக்கிக் கொண்டிருந்தாள். இந்தப் பையனோ கல்யாணம் பண்ணினால் அவளைத்தான் பண்ணிக் கொள்வேன், இல்லாவிட்டால் கல்யாணமே வேண்டாம் என்று ஒரே பிடிவாதமாக இருந்தான்.

**இளமங்கை:** இப்பொழுது எப்படிச் சம்மதித்தார்?

**கிழவி:** இப்பொழுதா? அந்த ஊர்சுற்றிதான் எங்கேயோ ஓடிப் போய்விட்டாளே?

**இளமங்கை:** எங்கே போனாளோ?

**கிழவி:** எனக்கு எப்படித் தெரியும்? வேறு யாரை யாவது மயக்கப் போயிருப்பாள்.

**இளமங்கை:** (தயக்கத்தோடு) அவள் பெயர் உங்களுக்குத் தெரியுமா?

**கிழவி:** (ஏளனமாக) சரோஜாவாம்...சரோஜா! நாய்க்குப் பேர் முத்து மாலை. அவள்தான் தொலைந்து போனாளே, இந்தப் பையன் உடனே கல்யாணம் செய்துகொள்ளப் படாதா? அவளையே தேடிப் பிடித்து வந்து பண்ணிக்கொள்வேனென்று அடம் சாதித்தான். ஒரு வருஷமாக எல்லோரும் சொல்லிச் சொல்லி இப்பொழுதுதான் சரியென்று சொன்னான்.

**இளமங்கை:** சரியென்று சொல்லிவிட்டாரல்லவா?

கிழவி: என்னவோ அரை மனசாகத்தான் சொல்லி யிருக்கிறான். அவன் தாய் தினந்தினம் அழுவாள். அதனால் நல்ல புத்தி வந்திருக்கிறது.

இளமங்கை: (யோசனையோடு) நான் உங்களை ஒன்று கேட்கலாமா, பாட்டி? அவர் இஷ்டப்படியே கல்யாணம் செய்துகொள்ளும்படி சொல்லியிருந்தால் என்ன கெட்டுப்போகும்?

கிழவி: நல்ல பேச்சு இது. அவள் யாரோ, என்ன சாதியோ? சாதி விட்டுச் சாதி கட்டிக்கொள்ள முடியுமா? ராமசாமி குடும்பம் என்ன லேசா? அவர் கள் கௌரவம் என்ன, காரியம் என்ன? அதெல்லாம் நினைத்துப் பார்க்காமல் நீ பேசுவதைப் பார்.

இளமங்கை: அவர் இதையெல்லாம் யோசனை செய்யா மலா இருந்திருப்பார்? அவருக்கு அவளிடத்தில் அதிக இஷ்டம்போல் இருக்கிறது.

கிழவி: அவனுக்கா இஷ்டம்? அதெல்லாம் அவள் பண்ணின மாயம். அவன் சாதியை விட்டுப் போவானா? தங்கமான பிள்ளையாச்சே!

இளமங்கை: உங்கள் விருப்பப்படி முழு மனசோடு ஒப்புக்கொண்டாரல்லவா?

கிழவி: என்னவோ முகூர்த்தம் வைத்தாய் விட்டது. கல்யாணம் ஆனால் எல்லாம் சரியாகிவிடும். எங்கள் காலத்திலெல்லாம் இப்படிக் கிடையாது. தாய் தகப்பன் சொல்படிதான் கல்யாணம் நடக்கும். இதெல்லாம் இந்தக் காலத்தின் கூத்து.

இளமங்கை: மனசுக்குப் பிடித்தமாக இருக்கும் இடத் திலே கல்யாணம் செய்து கொள்ளுவதுதானே நல்லது, பாட்டி?

கிழவி: இந்தக் காலத்துப் பெண்களே இப்படித்தான். காலம் கெட்டுப் போய்விட்டது. அப்படி வேண்டுமானாலும் சொந்தத்திற்குள்ளே மனசுக்குப் பிடித்த பெண்ணாகப் பார்த்துப் பண்ணிக் கொள்ளலாமே! இவன் சாதி விட்டுச் சாதி போகப் பார்த்தானே!

இளமங்கை: என் பாட்டி, அவர் பிடிவாதமாக அந்த சரோஜாவையே கல்யாணம் செய்திருந்தால் நீங்கள் என்ன பண்ணுவீர்கள்?

*[அவள் குரலில் ஓர் ஆர்வம் தொனிக்கிறது.]*

கிழவி: என்ன பண்ணுவோமா? அவனைச் சாதியிலே சேர்த்துக்கொள்ள மாட்டோம். தள்ளிவைத்துச் சாதிக் கட்டுமானம் செய்துவிடுவோம்.

இளமங்கை: என்ன பாட்டி, உங்கள் பேரன் என்று சொன்னீர்களே, அவரையா அப்படித் தள்ளி வைப்பீர்கள்?

கிழவி: பேரன்தான். அதனால் என்ன வேண்டுமானாலும் பண்ணலாமா? எங்கள் சாதியிலே இது வரையில் யாரும் இப்படி நினைத்ததுகூடக் கிடையாது.

இளமங்கை: அவருடைய இன்பம் உங்களுக்குப் பெரிதில்லை—அப்படித்தானே?

கிழவி: அவன் சுகமாக இருக்கத்தானே நாங்கள் இந்தப் பாடு படுகிறோம்? குலத்திலே ஒரு பெண் என்று சொல்லுவார்கள். நமது சாதியிலே பண்ணினால்தான் சுகம், வாழ்வு எல்லாம்.

இளமங்கை: சாதி இல்லாமல்போனால் சுகம் இருக்காதோ?

கிழவி: நாலு நாளைக்கு இருக்கும். பிறகு நீ யாரோ நானுரோ என்று போகும். அது இருக்கட்டும்; உனக்குக் கல்யாணம் ஆய்விட்டதா?

இளமங்கை: இன்னும் இல்லை.

கிழவி: கல்யாணம் ஆகாத பெண்ணு இப்படித் தனியாக வருகிருய்?

இளமங்கை: வந்தால் என்ன தப்பு?

கிழவி: இருந்தாலும் உனக்கு இத்தனை துடுக்கு ஆகாது. ஊரிலே எல்லோரையும் நல்லவரென்று எப்படி நம்புவது?

இளமங்கை: இதோ ஊர் வந்தாயிற்று, பாட்டி. நீங்கள் போகிறீர்களா? என் சிநேகிதி வீட்டிற்கு இந்தப் பக்கம் போகவேண்டும்.

கிழவி: ஊருக்கு வந்துவிட்டோம். பேசிக்கொண்டே வந்ததில் சலிப்பே தெரியவில்லை. நீ சுகமாக இருக்க வேணும். போகிருயா? ஏன், நீயும் என் கூட வரக்கூடாதா? கல்யாண வீட்டுக்கு வந்து விட்டுப் போனுல் போகிறது. இந்த இருட்டிலே எப்படி உன் சிநேகிதி வீட்டுக்குப் போவாய்?

இளமங்கை: போய்விடுவேன். அவள் தனியாகத்தான் வசிக்கிருள். வீட்டிலே வேறு யாரும் கிடையாது.

கிழவி: சாக்கிரதையாகப் போ அம்மா. நீ ரொம்ப நல்ல பெண்ணுக இருக்கிருய். என் பேரனுக்குக் கிடைக்கிற பெண்ணும் உன்னைப்போல இருக்க வேணும்.

இளமங்கை: போய் வருகிறேன் பாட்டி.

[இருவரும் பிரிந்து வேறு வேறு வீதிகளில் போகிருர்கள்.]

## காட்சி இரண்டு

அதே இரவு. சுமார் நான்கு மணி இருக்கும். ஒரு சாதாரண வீடு. லாந்தர் விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருக்கிறது. வீட்டின் இடது புறத்திலிருந்த கதவை வெளியிலிருந்து யாரோ மெதுவாகத் தட்டுகிறார்கள். அக்கா, அக்கா என்ற குரல் கேட்கிறது. மறுபடியும் மெதுவாகத் தட்டும் சப்தம். கட்டிலில் படுத்திருந்த ஒரு விதவை எழுந்து கவனித்துக் கேட்கிறாள். பிறகு கதவின் அருகே வருகிறாள். அவளுக்கு வயது முப்பத்தைந்து இருக்கும். வெள்ளை உடை தரித்திருக்கிறாள். வாழ்வில் இன்பம் காணாதவள் என்பதை அவள் முகம் காண்பிக்கிறது.

**விதவை:** யாரது இந்நேரத்தில் கதவைத் தட்டுவது?

**வெளியிலிருந்து பெண் குரல்:** (மெதுவாக) மருதாயி அக்கா, நான்தான் சரோஜா.

**மருதாயி:** (ஆச்சரியத்தோடு) யார், சரோஜாவா?

[கதவை விரைவாகச் சென்று திறக்கிறாள். வெயிலிலிருந்து கிழவியுடன் வந்த இளமங்கை உள்ளே நுழைகிறாள்.]

சரோஜா, இந்நேரத்தில் எப்படி வந்தாய்?

[அவளைக் கட்டி அணைத்துக் கொள்கிறாள்.]

**சரோஜா:** அக்கா, உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன்.

**மருதாயி:** திடீரென்று யாரிடமும் சொல்லாமல் ஓடிப் போய்விட்டாயே? இந்த ஒரு வருஷமாக எங்கே இருந்தாய்? உன்னை எங்கெல்லாமோ தேடித் தேடிப் பார்த்தானே அவன்?

[வெளிக் கதவைத் தாழிட்டுவிட்டு மருதாயி வருகிறாள். இருவரும் வீட்டுத் தாழ்வாரத்தில் உட்காருகிறார்கள்.]

சரோஜா: என்னை எதற்காகத் தேடவேண்டும்? நான் தான் போய்விட்டேனே, அக்கா?

மருதாயி: என்ன இருந்தாலும் நீ அப்படிப் போகலாமா? இப்பொழுது பார், என்ன ஆயிற்று? உன்னைக் காணாமல் அவன்......

சரோஜா: (சட்டென்று) என்ன ஆயிற்று? எல்லாம் நல்லதுதான் ஆயிற்று...

மருதாயி: நிசமாகத்தான் நீ பேசுகிறாயா? அவனுக்கு இன்றைக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது. உனக்குத் தெரியுமா? எட்டு மணிக்கு முகூர்த்தம். பக்கத்து ஊரிலே பெண். இன்னும் கொஞ்ச நேரத்திலே எல்லோரும் அங்கே புறப்பட்டுப் போவார்கள்.

சரோஜா: எனக்கு இதெல்லாம் வரும்போதே தெரிந்து விட்டது.

மருதாயி: எப்படித் தெரிந்தது?

சரோஜா: யாரோ ஒரு பாட்டியம்மாள் கல்யாணத்துக்கு வந்தார்கள். அவர்கள் மூலம் அறிந்தேன்.

மருதாயி: அவளுக்கு உன்னை இன்னாரென்று தெரியவில்லையா?

சரோஜா: இல்லை, அந்தப் பாட்டி என்னை நேரிலே பார்த்ததில்லை போலிருக்கிறது. மேலும் அவர்களுக்கு இருட்டிலே கண் சரியாகத் தெரியாது.

மருதாயி: ராமசாமிக்கு இந்தக் கல்யாணம் கொஞ்சங் கூட இஷ்டம் இல்லை.. அவன் தாய் வைத்த ஒப்பாரியைத் தாங்கமுடியாமல்........

சரோஜா: தாயாருக்கு இனி சந்தோஷமாக இருக்கும், இல்லையா?

மருதாயி : தாய்க்கும் சந்தோஷந்தான்; பந்துக்களுக்கும் சந்தோஷந்தான்....ஆனால்...

சரோஜா : (சிறிது ஆத்திரத்தோடு) ஆனால் என்ன? எல்லோரும் சந்தோஷமாக இருந்தால் போதும்.

மருதாயி : ராமசாமிக்கு சந்தோஷம் வேண்டாமா?... பிறகு, உன் கதி என்ன ஆகிறது?

சரோஜா : எனக்கு என் வேலை இருக்கிறது. எப்படியோ காலத்தைத் தள்ள வேண்டியது.

[எழுந்து பக்கத்திலிருந்த தூணைப் பிடித்துக் கொண்டு நிற்கிறாள்.]

மருதாயி : நீ எதற்காக இங்கிருந்து யாருக்கும் சொல்லாமல் போனாய்?

சரோஜா : (சோகத்தோடு) அவர் என்னை மறந்துவிட்டும் என்பதற்காகத்தான்.

மருதாயி : அவன் உன்னை மறக்கவே இல்லை. இனிமேல் மறக்கப் போவதும் இல்லை. அது எனக்கு நன்றாகத் தெரியும். ....நீ மாத்திரம் அவனை மறக்கப் போகிறாயா?

சரோஜா : (அருகில் வந்து அமர்ந்து) அக்கா, என் மன நிலைமை உங்களுக்கு நன்றாகத் தெரியும். நான் என்ன செய்வது? இங்கே நான் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் வரை அவருடைய பந்துக்கள் எல்லோரும் என்னை ஏசினதும் பேசினதும் உங்களுக்குத் தெரியாதா?

மருதாயி : எல்லாம் எனக்குத் தெரியும் சரோஜா. ஆனால்....

சரோஜா : நான் அதையெல்லாம் பொருட்படுத்தினேனா? இல்லவே இல்லை. ஆனால் அவரைச் சாதியை விட்டுத் தள்ளிவிடுவதாகச் சொன்னது தான் எனக்குக் கவலையாக இருந்தது.

மருதாயி: (விசனத்தோடு) அதற்காக நீ இப்படி ஓடிப் போகலாமா?

சரோஜா: அக்கா, ஊரெல்லாம் ஒன்று சேர்ந்து கொண்டு அவருக்குத் தொந்தரவு கொடுத்தால் அதை எப்படி அவர் சமாளிக்க முடியும்? இதுவோ கிராமம். பட்டணமாக இருந்தால் கவலையில்லை. இங்கே பழைய சம்பிரதாயங்கள் வேரூன்றி இருக்கின்றனவே!....அதோடு, சுற்றிலும் உள்ளவர்களுடைய உதவியில்லாமல் இங்கு வாழ முடியுமா? அவர் என்னை மறந்துவிட்டுச் சாதி வழக்கப்படி கல்யாணம் செய்துகொண்டு நிம்மதியாக இருக்கட்டும் என்று நினைத்துத்தான் போனேன்.

மருதாயி: என்னிடம் கூடச் சொல்லாமல் போய்விட்டாயே!

சரோஜா: உங்களிடம் சொன்னால் நான் போவதற்குச் சம்மதிப்பீர்களா? உடனே அவரிடம் விஷயத்தைச் சொல்லி....

மருதாயி: சரோஜா, என்மேல் உனக்கு நம்பிக்கை இல்லையா?

சரோஜா: நம்பிக்கையா? எங்கிருந்தோ வந்த என்னை உடன் பிறந்த சகோதரியாக நினைத்து நீங்கள் நடத்தியதை நான் உயிருள்ள வரை மறக்க முடியுமா?

மருதாயி: நீ இங்கே இருந்தபோது என் இருண்ட வாழ்விலே கொஞ்சம் வெளிச்சம் இருந்தது. இப்போது பழையபடி எல்லாம் இருட்டாய் விட்டது. நீங்கள் இரண்டு பேரும் குடும்பம் நடத்துவதைப் பார்த்துச் சந்தோஷப்பட நான் கனவு கண்டு கொண்டிருந்தேன்.

சரோஜா: (ஏக்கத்தோடு) அக்கா, அதையெல்லாம் பேசி என்ன பலன்? விதிப்படித்தான் எல்லாம் நடக்கும் என்று நீங்களே அடிக்கடி சொல்லுவீர்கள். இல்லா

விட்டால் இப்படிச் சிறு வயதிலேயே உங்களை விட்டு விட்டு அவர் இறப்பாரா?

மருதாயி: அதை இப்பொழுது எதற்கு நினைக்கிருய்? என் கதிதான் முன்னமேயே தீர்மானம் ஆகிவிட்டது. இப்பொழுது உன் விஷயத்திற்கு என்ன செய்ய லாம்? சும்மா பேசிக்கொண்டே இருந்தால் காரியம் மிஞ்சிவிடும்.

சரோஜா: திரும்பிப் போவதற்கு அடுத்த ரெயில் எப் பொழுது என்றுதான் பார்க்க வேண்டும். அதுதான் உடனே செய்ய வேண்டியது.

மருதாயி: சரோஜா, நிசமாகவா? பின் எதற்காக வந்தாய்?

சரோஜா: அவர் எப்படி இருக்கிருர் என்று பார்க்க ஆசையாக இருந்தது. அதனல் பார்க்க வந்தேன். (அழுதுகொண்டே) அவரைப் பிரிந்து என்னல் இருக்க முடியவில்லை. ஆனல் அவரைப் பார்க்கா மலே திரும்பிப் போவதுதான் நல்லதென்று இப் பொழுது நினைக்கிறேன். அவருக்கு நான் வந்தது கூடத் தெரியக்கூடாது.

மருதாயி: அவனுக்குத் தெரியவேண்டும் என்பதுதான் என் ஆசை. நான் இப்பொழுதே போய்ச் சொல்லி....

சரோஜா: அக்கா, வேண்டவே வேண்டாம். அவர் சுக மாக இருந்தால் அதுவே போதும் எனக்கு.

மருதாயி: சரோஜா, நீ நிசமாகத்தான் பேசுகிருயா? உள்ளதைச் சொல்லு; நீ அவனை மறந்து விட் டாயா?

சரோஜா: அக்கா, நீங்கள் கூடவா என்னை இப்படிச் சோதனை செய்யவேணும்? என் மனசு உங்களுக்குத் தெரியாதா? நான் அவரை மறக்க முடியுமா?

[அவள் குரலில் துக்கம் பீறிட்டு வெளிப்படுகிறது.]

மருதாயி: பிறகு எதற்காக உடனே போகவேண்டும் என்கிறாய்?

சரோஜா: வேறு வழி? பந்துக்களுடைய வெறுப்பை நினைத்து அன்றைக்கு நான் ஓடிப்போனேன். இப்பொழுது அவருக்குக் கல்யாணம் நடக்கப் போகிறது. அப்படி நடக்கட்டும் என்றுதான் போனேன். நான் மறுபடியும் இங்கே தலை காட்டினால் அவருக்குத் தான் வீண் துன்பம் ஏற்படும். இல்லையா அக்கா?

மருதாயி: எப்படி சரோஜா நான் உன்னைப் போ என்று சொல்லட்டும்?

சரோஜா: அக்கா, நேரமாகிறது. அடுத்த ரெயிலுக்கு நான் எப்படியும் போயாக வேண்டும். நீங்கள் கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். நான் இங்கே இருந்து பிரயோசனம்?

மருதாயி: (இரக்கத்தோடு) ஆமாம், நீ சொல்வது மெய் தான். இனி இங்கிருந்து என்ன செய்யப் போகிறாய்? நீ நேற்றுவது வந்திருக்கக் கூடாதா?

[சரோஜாவின் தோள் மேல் கையைப் போடுகிறாள். கண்களில் நீர் பிதுங்குகிறது.]

சரோஜா: (வருத்தத்தோடு) 'அப்படியெல்லாம் நினைத்து ஏங்கி இனி ஒன்றும் ஆகப் போவதில்லை. நான் போய்வரட்...நான் போகட்டுமா, அக்கா? என்னை மறந்து...(குரல் கம்முகிறது.)

**மருதாயி:** சரோஜா, நானும் உன்னோடு ரெயிலடிக்கு வருகிறேன். ரெயில் வரும் வரையிலாவது இருவரும் சேர்ந்திருப்போம்.

### காட்சி மூன்று

*அதே இரவு. மணி சுமார் ஐந்திருக்கும். கல்யாண வீட்டிலே ஓர் அறை. மஞ்சத்தின் மீது மணமகன் யோசனையோடு படுத்திருக்கிறான். அவனுக்கு வயது முப்பது இருக்கும். கதர் உடுத்திருக்கிறான். அவன் திரும்பித் திரும்பிப் புரளுவதிலிருந்து அவனுடைய மனக் கலக்கம் வெளியாகிறது. வெளியே பலவகையான ஆரவாரம் மெதுவாகக் கேட்கிறது. நாகசுர ஒலியும் தூரத்தில் முழங்குகிறது. அறையின் கதவைத் திறந்துகொண்டு மணமகனின் தாய் உள்ளே நுழைகிறாள். ஐம்பதைத் தாண்டிய விதவை அவள். வெள்ளை உடை கிராமத்து முறையில் கட்டியிருக்கிறாள். அவள் முகத்தில் கவலை படர்ந்திருக்கிறது. மஞ்சத்தின் அருகே சென்று மகனைப் பார்த்துப் பேசுகிறாள்:*

**தாயார்:** ராமசாமி, இன்னும் படுத்துக்கொண்டிருக்கிறாயே? புறப்படுவதற்கு எல்லாம் தயாராகிவிட்டது. நேரமே போனால்தான் முகூர்த்த வேளைக்குச் சரியாக அங்கே இருக்க முடியும்.

**ராமசாமி:** நான்தான் தயாராக இருக்கிறேனே!—இன்னும் என்ன செய்யவேண்டும்?

**தாயார்:** குளிக்க வேண்டாமா? புது வேட்டி கட்ட வேண்டாமா? மாப்பிள்ளை என்றால் அதற்கு வேண்டிய மாதிரி செய்ய வேண்டுமோ இல்லையோ?

**ராமசாமி:** ஆமா, இந்தக் கோலம் போதும்.

**தாயார்:** (கவலையோடு) சும்மா படுத்துக்கொண்டே இருந்தால் எப்படி? வந்த பந்துக்களிடம் ஒரு

வார்த்தைகூடப் பேசவில்லை. உன் தகப்பனார் இருந்தால் அவரே எல்லாம் கவனித்துக் கொள் வார். இப்பொழுது நீதானே அவை யெல்லாம் கவனிக்க வேண்டும்?

**ராமசாமி:** (*சிடுசிடுப்பாக*) எதற்காக நான் கவனிக்க வேண்டும்? அவர்களை யார் வரச் சொன்னார்கள்?

**தாயார்:** (*சாந்தமாக*) சரி, நீ ஒன்றும் கவனிக்க வேண் டாம். எழுந்து குளித்துவிட்டு வா; நேரமாகிறது.

**ராமசாமி:** எல்லோரும் வந்துவிட்டார்களா?

**தாயார்:** நேற்று சாயங்காலமே வந்தாய்விட்டது. ஒருத்தர் பாக்கி இல்லை. பாட்டிகூட மூன்று மணி ரெயிலிலேயே வந்துவிட்டாள்.

**ராமசாமி:** பாட்டிக்கு இனி நிம்மதிதான். எனக்குக் கல்யாணம் ஆகாமல் பாட்டிக்குச் சாவுகூட வர வில்லை.

**தாயார்:** முகூர்த்த நாளிலே இப்படி யெல்லாம் பேசாதே. அவளுக்கு நீதான் உயிர்.

**ராமசாமி:** நான் சொன்னால் சாவு வந்துவிடுமா? பாட்டி இப்பொழுது எங்கே சாகப் போகிறாள்? என் குழந்தை குட்டிகளைப் பார்க்காமல் அவள் சாக மாட்டாள்.

**தாயார்:** சரி ராமு, நீ இப்படியே பேசிக்கொண்டிருந் தால் நேரமாகிறது.

**ராமசாமி:** மருதாயி அக்கா வந்துவிட்டார்களா? அவர் களைக் கூட்டி வரச் சொன்னேனே?

**தாயார்:** மருதாயியா? இப்பொழுதுதான் வீட்டிற்கு ஆள் விட்டேன். அவளை அங்கே காணோமாம். வீடு பூட்டிக் கிடக்கிறது.

ராமசாமி : எங்கே போயிருப்பார்கள்? இன்னொரு தடவை ஆள் விட்டுப் பாருங்கள்.

தாயார் : அவள் இருந்தால் கூட இந்தச் சமயத்தில் இங்கே வரமாட்டாள். முகூர்த்தத்துக்குப் புறப்படுகிறபோது அவள் எதிரிலே வருவாளா?

ராமசாமி : என்ன, மருதாயி அக்காள் கூட வரப்படாதா? அவர்கள் வராமல்....

தாயார் : (சற்றுப் பொறுமை இழந்து) சரி, ராமு, உன் இஷ்டம்போல் செய். இதோ மறுபடியும் ஆள் அனுப்புகிறேன். அக்காள் அக்காளென்று அவள் தான் உனக்கு அக்காள், வேறு ஒருத்தரும் அக்காளும் இல்லை, தங்கையும் இல்லை. உன்னோடு ஒருத்தருமே பிறக்கவில்லை.

ராமசாமி : ஆமாம். அக்காள், தங்கை, அம்மாள் இத்தனை பேரும் இல்லாவிட்டால் இந்தக் கல்யாணம் நடக்குமா? உங்களுக்குத்தானே கல்யாணம்? அவர்கள் எல்லாம் வந்துவிட்டார்களா?

தாயார் : வராமலா இருப்பார்கள்? நேற்று சாயங்காலம் பேசிக்கொண்டிருந்தாயே, மறந்து விட்டாயா?— சின்ன மச்சான்தான் இன்னும் வரவில்லை. ஐந்து மணி ரெயிலிலே வந்து விடுவார்கள்.

ராமசாமி : ரெயில் வரும் நேரம் ஆகிவிட்டதே! நான் ரெயில் நிலையத்திற்குப் போய் அவரை அழைத்து வரட்டுமா?

தாயார் : நீ போகாவிட்டால் வேறு யாரும் இல்லையா? முன்னாலேயே வண்டி அனுப்பிவிட்டேன். அவர் இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவார்.

ராமசாமி : நான் போனால் என்ன?

தாயார்: (பரபரப்புடன்) ராமு, எதற்கு நீ சும்மா என்ன என்னவோ பேசிக் காலம் கடத்துகிறாய்? புது மாப்பிள்ளை ரெயிலடிக்குப் போய் மற்றவர்களை அழைத்து வருவதை நீ எங்காவது கண்டிருக்கிறாயா?

ராமசாமி: தனியாகக் கொஞ்ச தூரம் போனாலாவது மனத்திற்குச் சற்று நிம்மதி ஏற்படும்.

தாயார்: இப்போது என்ன நிம்மதி இல்லாமல் போய் விட்டது ராமு? சரி—போய்க் குளித்துவிட்டுப் புறப்படு; முகூர்த்த வேளை தப்பக் கூடாது.

ராமசாமி: (சலிப்பாக) சரி அம்மா, உங்கள் இஷ்டப்படியே குளித்து விடுகிறேன். சும்மா அலட்டாதீர்கள்!

[மறு பக்கம் திரும்பிப் படுத்துக் கொள்கிறான். அவன் எழுந்து போவான் என்று எதிர்பார்த்த தாய் ஏமாந்து நின்று மறுபடியும் பேச யத்தனிக்கிறாள்.]

காட்சி நான்கு

அதே இரவு. காலை ஒன்பது மணி. மருதாயியும் சரோஜாவும் ரெயில் நிலையத்தில் ஓரிடத்தில் தனியாக இருந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

மருதாயி: சரோஜா, ரெயில் இன்றைக்கு அரை மணி தாமதித்து வருமாம்; நல்லதாயிற்று. அதுவரையிலுமாவது பேசிக்கொண்டிருக்கலாம்.

சரோஜா: ஐயையோ! ரெயில் இன்றைக்குப் பார்த்துத் தான் இப்படி நேரங் கழித்து வரவேண்டுமா?

மருதாயி: இந்தக் காலத்தில் என்றைக்குத்தான் ரெயில் சரியாக வருகிறது?

சரோஜா: இருட்டோடு இருட்டாக இந்த ஊரை விட்டுப் போய்விட்டால் நல்லது. யார் கண்ணிலும் படக்கூடாது. அக்கா, நான் வந்ததைப்பற்றி நீங்கள் யாரிடத்திலும் சொல்லவேண்டாம்.

மருதாயி: (விசனத்தோடு) நான் யாரிடத்திலே சொல்லப் போகிறேன்?

சரோஜா: அவரிடத்திலே கூடச் சொல்லக்கூடாது. அவர் என்னை மறந்துவிட்டுச் சுகமாய் வாழ வேணும்.

மருதாயி: நான் சொல்லமாட்டேன். ஆனால்....

சரோஜா: ஆனால் என்ன? அப்படியெல்லாம் பேசாதீர்கள். கொஞ்ச காலத்திலே எல்லாம் சரியாகிவிடும். காலம் போகப் போக எல்லாம் மறந்துபோகும்.

மருதாயி: இந்தச் சமயத்தில்கூட ஓரே ஓட்டமாக ஓடி ராமசாமியிடம் விஷயத்தைச் சொல்லி அந்தக் கல்யாணத்தைத் தடுத்துவிடலாம் என்று என் நெஞ்சு துடிக்கிறது.

சரோஜா: அக்கா, மறுபடியும் மறுபடியும் உங்களுக்கு இந்தச் சபலம் எதற்கு?

மருதாயி: எனக்கென்னவோ நாம் பிரியவே மாட்டோம் என்றுதான் தோன்றுகிறது.

சரோஜா: எல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்தில் தானே தெரியப் போகிறது. பிறகு நீங்கள் எங்கே, நான் எங்கே? என்மேல் உள்ள பிரியத்தினால் நீங்கள் என்ன என்னவோ கனவு காண்கிறீர்கள்.

மருதாயி: ராமசாமிக்கு மனைவியாக நீ இந்த ஊரிலேயே இருப்பாயென்று எவ்வளவோ ஆசையாக

இருந்தேன். என் வீடுதான் வெறும் வீடாகக் கிடக்கிறது; (விம்மி) உன் குழந்தை குட்டிகளைப் பார்த்தாவது சந்தோஷப்படலாம் என்று இருந்தேன். நான் பாவி! அதற்குக்கூடக் கொடுத்து வைக்கவில்லை.

சரோஜா : இதெல்லாம் நம் கையிலா இருக்கிறது? நான் எங்கிருந்தோ இந்த ஊருக்கு வந்து சேர்ந்தேன். இப்பொழுது எங்கேயோ போகப் போகிறேன்.

மருதாயி : சரோஜா, நீ இப்படிப் பேசலாமா?

சரோஜா : நான் சொல்வது உங்களுக்கு வருத்தமாகத்தான் இருக்கும். அக்கா, அவர் இந்த ஊரில்தானே இருக்கிறார்? உங்களைக் கூடப்பிறந்த அக்காளாகவே நினைக்கிறார். அவர் குடும்பத்தைப் பார்த்து நீங்கள் சந்தோஷமாக இருங்கள்.

மருதாயி : இனி எனக்கு அவன் குடும்பம் எதற்கு? நீ இல்லாமல் அவன் எனக்கு ஒரு பொருட்டா?

சரோஜா : அவர்மேல் என்ன தப்பு?

மருதாயி : என்ன தப்பா? கொஞ்சங்கூடத் தைரியம் இல்லாதவன். உன்னைத்தான் கல்யாணம் செய்து கொள்வேனென்று ஊரெல்லாம் பேசிவிட்டு, இன்றைக்கு வெட்கமில்லாமல் வேறு ஒருத்தியை....

சரோஜா : அவர் என்ன செய்வார் அக்கா? நம் சமூகத்திலே கட்டுப்பாடு ஒன்றா இரண்டா? அவற்றை மீற முடியுமா?

மருதாயி : அதற்குத் தைரியமில்லாதவன் வெளியில் ஏன் பேசவேணும்?

**சரோஜா :** அக்கா, நாம் அவரை நொந்து என்ன பலன்? அவருடைய சொந்தக்காரர்கள் அவருடைய நன்மைக்காகவே இந்தக் காரியம் பண்ணுவதாக நினைத்துச் செய்கிறார்கள்.

**மருதாயி :** உன்னுடைய துணிச்சலை நினைத்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. என்னிடத்தில் இப்படிப் பேசிவிட்டுத் தனியாகப் போய் அழுது அழுது சாகப் போகிறாய். அதை நினைக்கும்போது என் நெஞ்சு வெடித்துவிடும்போல் இருக்கிறது.

**சரோஜா :** என்ன செய்யலாம்? தப்போ சரியோ, நான் ஒரு வருஷத்துக்கு முன்பே இங்கிருந்து மறைந்து விட்டேன். அன்றைக்குப் போகாமல் யார் என்ன பேசினாலும் சரியென்று இருந்திருக்க வேண்டும். இப்பொழுது காரியம் மிஞ்சிப் போய்விட்டது. நான் எங்கேயாவது மறைவாக இருந்து மனத்தைச் சமாதானப் படுத்திக்கொள்ள வேண்டியதுதான்; வேறு வழி இல்லை.

**மருதாயி :** இதற்குள்ளே ராமசாமி பெண் வீட்டுக்குப் புறப்பட்டிருப்பான். அவன் மனதுக்குப் பிடித்த பெண் இங்கே ரெயிலுக்காகக் காத்திருப்பதை அவன் எப்படி அறியப் போகிறான்? இப்படி எல்லாம் நம்மை என்னவோ ஆட்டிவைத்து வேடிக்கை பார்க்கிறது.

**சரோஜா :** (பேச்சை மாற்ற முயன்று) எங்கே இன்னும் ரெயில் வரவில்லையே?

**மருதாயி :** என்னைச் சீக்கிரமாய்ப் பிரிந்துவிட வேண்டு மென்று உனக்கு ஆவலா?

சரோஜா: அக்கா, நீங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. நான் ஏன் அவசரப்படுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும்.

மருதாயி: (கம்மிய குரலில்) சரோஜா, நீ எங்கே போகிறாய்? அதையாவது சொல்லிவிட்டுப் போ. உனது வீட்டு விலாசத்தை எனக்குக் கொடு.

சரோஜா: நேற்றுவரை எனக்கு ஒரு வீடு இருந்தது; ஓர் ஊரும் இருந்தது. இனி ஒன்றுங் கிடையாது.

மருதாயி: நீ எங்கேதான் போகிறாய்?

சரோஜா: எங்கே போனால் என்ன அக்கா? எங்கேயாவது போகிறேன்.

மருதாயி: அடுத்த ஊருக்குத்தானே டிக்கட் வாங்கியிருக்கிறாய்?

சரோஜா: நான் அங்கே இறங்கப் போவதில்லை. அது நிச்சயம்.

மருதாயி: பிறகு என்னை ஏமாற்றவா அதை வாங்கினாய்?

சரோஜா: அக்கா, என்மேல் கொஞ்சம் தயவு காட்டுங்கள். நான் போகிற இடம் யாருக்கும் தெரியவேண்டாம். நான் இங்கு வந்ததுகூட யாருக்கும் தெரியக்கூடாது.

மருதாயி: சரோஜா...

[மேலே அவளால் பேச முடியவில்லை. விம்மி விம்மி அழுகிறாள். சரோஜாவைக் கட்டிப் பிடித்துக் கொள்கிறாள்.]

## காட்சி ஐந்து

இன்னும் பொழுது புலரவில்லை. மணி சுமார் ஐந்தரை இருக்கும். ராமசாமி குளித்துவிட்டுப் புதிய

உடை அணிந்து ஓர் அறையிலே நாற்காலியில் அமர்ந் திருக்கிறான். முகக் குறிப்பிலிருந்து அவனுடைய மனப் போராட்டம் இன்னும் ஓயவில்லை என்று தெரி கிறது. அவன் தாய் கவலையோடு அருகே நின்று கொண்டிருக்கிறாள்.

ராமசாமி : மருதாயி அக்கா எங்கே? அவர்களைக் கூட்டி வரச் சொன்னால் அதைக் கவனியாமல் சும்மா அவசரப் படுத்துகிறீர்களே?

தாயார் : அவளைத்தான் வீட்டிலே காணோமே; மூன்று தடவை ஆள் விட்டுப் பார்த்தாய் விட்டது. நான் இன்னும் எங்கே போய்த் தேடட்டும்?

ராமசாமி : மருதாயி அக்காள் வராமல் நான் புறப்பட முடியாது ?

தாயார் : என்ன ராமு, இப்படிப் பிடிவாதமாக இருக் கிறாய்? அவளைத்தான் காணோமே?

ராமசாமி : இதென்ன பெரிய பட்டணமா? இந்த ஊரிலே அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க முடி யாதா? அவர்களிடம் நான் ஒரு விஷயம் கேட்க வேண்டும்.

தாயார் : அதைப் பின்னால் கேட்டுக் கொள்ளக் கூடாதா? இப்பொழுதாவது புறப்பட்டால்தானே முகூர்த்த வேளைக்குப் போய்ச் சேரலாம்? இங் கிருந்து ஐந்து மைல் மாட்டு வண்டியில் போக வேண்டாமா?

ராமசாமி : உங்களுக்கு முகூர்த்தம் தப்பிப் போகுமென் பதுதான் கவலை. எப்படியோ கல்யாணத்தை முடித்து வைத்துவிட்டால் உங்கள் கவலை தீர்ந்து போகும். ஆனால் என்னுடைய கவலை அதிலிருந்து

தான் ஆரம்பமாகும். பிறகு ஆயுள் முடிகிற வரையிலும் அது தீரவா போகிறது? அதைப்பற்றி உங்களுக்கு என்ன?

தாயார்: ராமு, உன் நன்மைக்காகத்தானே எனக்கு எல்லாக் கவலையும்?

ராமசாமி: அதுதான் இல்லை. எனக்கு நல்லது செய்வதாகத்தான் நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் அது எனக்கு நல்லதே அல்ல.

தாயார்: பெண் அழகில்லையா? குணமில்லையா?

ராமசாமி (நிதானமாக) பெண் அழகாக இருக்கலாம்; குணமும் இருக்கலாம். மருதாயி அக்காள் அழகில்லையா? அவர்களைப் போல நல்ல குணம் உடையவர்கள் வேறு யாராவது இருக்க முடியுமா?

தாயார்: அவளைப்பற்றி இப்பொழுது என்ன பேச்சு?

ராமசாமி: அவர்கள் அப்படி நல்லவர்களாக இருந்தும் அவருடைய கணவர் கொஞ்சமாவது சந்தோஷமாக இருந்தாரா?

தாயார்: அது அவள் தலையெழுத்து.

ராமசாமி:* தலையெழுத்தா? அப்படிச் சொல்லி உண்மையை மறைக்கப் படாது. அவருக்கென்னவோ தம் மனைவியினிடத்தில் அன்பு ஏற்படவே இல்லை. என்ன காரணமென்று யாருக்கும் தெரியாது. ஆனால் அவர் சாகிறபோது என்ன சொன்னார் தெரியுமா?

தாயார்: என்ன சொன்னாரோ, உனக்குத்தான் தெரியும். நீதான் அவன் பக்கத்திலேயே இருந்தாய்.

ராமசாமி: அவர் சொன்னது தெரியுமா? 'நான் ஆசைப்பட்ட பெண் எனக்கு வாய்க்கவில்லை. கல்யாணத்

தன்றே என் மனம் உடைந்துவிட்டது. பிறகு உலகத்திலே எனக்குச் சுகமேது?' என்று சொல்லிக் கொண்டே உயிரை விட்டார்.

தாயார்: (சற்றுக் கோபத்துடன்) அதைப் பற்றி இப் பொழுது என்ன பேச்சு, ராமு?

ராமசாமி: அம்மா, நீங்கள் கொஞ்சம் நிதானமாகக் கேளுங்கள். அவர் மனம் உடைந்ததுபோல என் மனமும் உடைந்து போகும்.

தாயார்: (மேலும் கோபமாய்) அப்படியானால் பின் எதற் காக அன்றைக்குச் சரியென்று சொன்னாய்?

ராமசாமி: தினம் தினம் ஓயாமல் நீங்கள் செய்த தொந் தரவுக்காகத்தான்.

தாயார்: எப்போது சரியென்று சொன்னாயோ, பிறகு பேசாமல் புறப்படு.

ராமசாமி: என்னுடைய இன்பம் உங்களுக்குப் பெரி தில்லையே?

தாயார்: நல்ல கூத்து இது. ஊரையெல்லாம் அழைத் தாய்விட்டது. கல்யாணமென்று எல்லோரும் கூடி யாய்விட்டது. இப்பொழுது இப்படி பேசினால் ஊர் சிரிக்கும்.

ராமசாமி: அதைப்பற்றித்தான் உங்களுக்குக் கவலை. என்னுடைய சுகம் பெரிதென்றால் இந்தக் கல்யா ணமே...

தாயார்: (கடுமையாக) முன்னமேயே முடியாதென்று சொல்லித் தொலைக்கலாமே?

ராமசாமி: முன்னாலுந்தான் சொன்னேன்.

தாயார்: சம்மதமென்று சொல்லவே இல்லையா நீ? உன்னைக் கேட்காமலா முகூர்த்தம் வைத்தோம்?

ராமசாமி: சரி; அப்படிச் சொல்லியிருந்தாலும் அது தப்பென்று தெரிந்தால் மாற்றக் கூடாதா?

தாயார்: இப்பொழுதுதான் தப்பென்று தெரிந்ததா? என்னை ஊரார் முன்னால் அவமானப்படுத்த... (அழுகிறாள்)...உன் அப்பாவுக்கு வந்ததுபோல எனக்கும் சாவு வரவில்லையே! எல்லாம் விதி; விதி இப்படி விளையாடுகிறது (விம்முகிறாள்).

ராமசாமி: இதெல்லாம் விதியின் விளையாட்டா? நல்ல விதி உங்கள் கையில் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது! அந்த சரோஜாவை ஊரை விட்டு விரட்டியடித்தது விதி. என் வாழ்வைக் குலைக்கப்போவதும் விதி. என்னோடு சேர்ந்து இன்றைக்குப் புதுப்பெண்ணாக வரப்போகிறாளே அவள் வாழ்க்கையைப் பாழாக்கப் போவதும் விதி. நல்ல விதி வந்து சேர்ந்தது! இதெல்லாம் நீங்கள் பண்ணுகிற விளையாட்டா, அல்லது விதியின் விளையாட்டா? பாட்டியைப் போலவும் உங்களைப் போலவும் உள்ள வம்புக்காரர்கள் பண்ணுகிற கூத்துத்தான் இது. சும்மா எதற்கெடுத்தாலும் விதி விதி என்று பேசாதீர்கள்.

தாயார்: (வெறுப்பும் கோபமும் கலந்த குரலில்) ராமசாமி, நீ எனக்கு மகனா?

ராமசாமி: அம்மா, நீங்கள் இப்படிக் கோபித்துக்கொள்வது எனக்கு நல்லதுதான். நீங்கள் அழுது கலங்குகிறபோது என் மனம் குழம்புகிறது. என் உறுதியெல்லாம் பறந்து விடுகிறது. கோபித்துக்கொண்டு நீங்கள் பேசினால் நான் மனந்தடுமாற மாட்டேன்.

தாயார் : (கோபம் மேலும் பொங்க) சரி, இப்பொழுது நீ என்னதான் செய்யப் போகிறாய்? தாய் சொல்லைத் தட்டுகிற பிள்ளை நீ உருப்படுவாயா?

ராமசாமி : அம்மா, இப்பொழுது என் மனம் தெளிவடைந்துவிட்டது. மருதாயி அக்கா இங்கே வராமல் இருப்பது ஏன் தெரியுமா? அவர்களுக்கு இந்தக் கல்யாணம் சம்மதம் இல்லை. சம்மதமாக இருந்தால் இப்படித் தலைமறைவாக இருக்க மாட்டார்கள். என்னைத் தன் தம்பியாகப் பாவித்திருக்கும் அவர்கள் என் கல்யாண ஏற்பாட்டு நாளிலே வீட்டைப் பூட்டி விட்டு எங்காவது போக நினைப்பார்களா? அம்மா, நான் இந்தக் கல்யாணத்திற்கு இசைந்ததே பெருந் தவறு. நான் இனி அந்தப் பெண்ணின் கழுத்தில் தாலியைக் கட்டி அவள் வாழ்வையும் குலைக்கப் போவதில்லை. எனக்கு விருப்பமான கல்யாணம் வாய்க்குமானால் செய்துகொள்வேன்; இல்லாவிட்டால் கல்யாணமே வேண்டாம்.

[ராமசாமியின் முகத்தில் உறுதி தாண்டவமாடுகிறது. தாய் சீற்றமும் அழுகையுமாக நிற்கிறாள். தூரத்தில் ரெயில் புறப்படும் அரவம் கேட்கிறது. ஹோ வென்ற அதன் குரலும் நன்கு காதில் விழுகிறது.]

—திரை—

# கணவன்

## காட்சி ஒன்று

காலை பத்து மணி இருக்கும். மயிலாப்பூரிலே ஒரு மாளிகை. அதன் பின்புறக் கட்டிலே தாயம்மாளும் விஜயாவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். தாயம்மாள் வேலைக்காரி: அவளுக்கு முப்பத்தைந்து வயதிருக்கும். அவள் முகம் கவலையால் களையிழந்து தோன்றுகிறது. விஜயாவுக்குப் பதினைந்து வயதாகிறது. அந்த மாளிகையின் சொந்தக்காரருக்கு அவள் ஒரே பெண்.

தாயம்மாள்: விஜயா, நான் போகட்டுமா! வேலையெல்லாம் முடிந்தது.

விஜயா: சரி, போ. ரொம்ப நாழிகையாய் விட்டது. உன் குழந்தை அழுமோ என்னவோ?

தாயம்மாள்: சாயங்காலம் வேலைக்கு நேரமே வருகிறேன்; அம்மாளிடம் சொல்லு.

விஜயா: ஏன் தாயம்மா, உன் குழந்தையைக் கூடவே கொண்டுவரப் படாதா? பாவம்! அந்தச் சின்னப் பெண் எவ்வளவு நேரம் தனியாகக் குழந்தையை வைத்திருக்கும்? அதுவும் குழந்தைதானே?

தாயம்மாள்: எப்படியோ வைத்திருக்கட்டும். இங்கே கொண்டு வந்தால் குழந்தை சத்தம் போடும். அசிங்கம் பண்ணும். ஐயாவுக்கு அதெல்லாம் பிடிக்காது.

விஜயா: அந்தச் சின்னக் குடிசைக்குள்ளே எப்படித்தான் கிடக்குமோ பாவம்!

தாயம்மாள்: என்னம்மா செய்யலாம்? நீங்கள் கொடுக்கிற பத்து ரூபாயில்தான் காலம் தள்ள வேணும்.

குடிசையிலே இருக்காமல் வேறே எங்கே போக முடியும்?

விஜயா: தாயம்மா, உன் புருஷன் எங்கே போய்விட்டான்? நான் எத்தனையோ தடவை கேட்டாயிற்று; சொல்லமாட்டாயா?

தாயம்மாள்: அதைச் சொல்லி என்ன லாபம்? என்னவோ என் தலையெழுத்து!

விஜயா: எங்கள் வீட்டிற்கு நீ வேலைக்கு வந்ததிலிருந்து எங்களுக்கு ஒரு தொந்தரவும் இல்லை தாயம்மா. முன்னலே—ஐயோ, அந்த வேலைக்காரிகளிடம் எங்களுக்குப் போதும் போதும் என்று ஆகிவிடும்....

தாயம்மாள்: வேலை செய்யவோ வந்தாச்சு. அதை ஒழுங்காகச் செய்யாமல் வேறென்ன சோலி?

விஜயா: நீதான் அப்படி நினைக்கிருய். எல்லோரும் அப்படி இல்லையே?

தாயம்மாள்: வீட்டு எஜமானிகளும் உன்னைப்போல நல்லவர்களாக இருக்கிருர்களா? நான் முதலிலே ஓர் இடத்துக்கு வேலைக்குப் போனேன். அதுவும் பெரிய இடந்தான். அங்கே அந்த அம்மா படுத்தின பாடு....

விஜயா: என்னவோ, நீ இந்த வீட்டுக்கு வந்தது நல்லதாயிற்று.

தாயம்மாள்: எனக்கும் இங்கே வேலை செய்வது பிடித்தமாக இருக்கிறது. என்னிடத்திலே நீ எத்தனை பிரியமாக இருக்கிருய்! அம்மாவும் அப்படித்தான்... ஆனல் இந்தச் சம்பளத்திலே எப்படிக் குடும்பம் பண்ணுவது?...என்னிடம் இருந்த ஒன்று இரண்டு

நகையையும் விற்றாச்சு. இனி என்ன பண்ணுவேன்?

விஜயா: அப்பாவிடம் சொல்லி இன்னும் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்கச் சொல்லுகிறேன். அப்பாவுக்கும் நீ வேலை செய்வதில் ரொம்பத் திருப்தி.

தாயம்மாள்: சேர்த்துக் கொடுத்தாலும் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் கொடுப்பார்கள்; அதிலே என் பஞ்சம் விடிந்தா போகும்? இன்றைக்குச் சாமான் விற்கிற விலையிலே அந்த இரண்டு குழந்தைகளையும் எப்படிக் காப்பாற்றுவேன்? அதுதான் எனக்கு ஓயாத கவலையம்மா. பத்து ரூபாயிலே குடும்பம் பண்ணி எனக்குப் பழக்கம் இல்லை.

விஜயா: உன் புருஷன் பணம் அனுப்பமாட்டானா?

தாயம்மாள்: அவர் எதற்கு அனுப்புகிறார்? அவர்தான் என்னை வேண்டாமென்று தள்ளிவிட்டாரே!

விஜயா: வேண்டாமென்று தள்ளிவிட்டானா? அட பாவமே! உன்னைப்போல ஒரு நல்லவளை ஓட்டிவிட அவனுக்கு எப்படி மனம் வந்ததோ—?

தாயம்மாள்: (விசனத்தோடு)...ம்...(பெருமூச்சு விடுகிறாள்.) விஜயா, நேரமாச்சு. போகட்டுமா?

விஜயா: தாயம்மா, உன் புருஷனைப்பற்றி மாத்திரம் சொல்லமாட்டேன் என்கிறாயே?

தாயம்மாள்: நீ சிறு பிள்ளை. உனக்கெதற்கம்மா அதெல்லாம்? உனக்கு அந்த மாதிரி புருஷன் இல்லாமல் நல்லவராகக் கிடைக்கவேணும்.

விஜயா: (நாணத்தோடு) போ, தாயம்மா உனக்கு இதுதான் பேச்சு.

**தாயம்மாள்:** (சிரித்துக்கொண்டே) ஏன் அம்மா, நீ இப்போது பத்தாவது படிக்கிறாய்; என்றைக்குமா இப்படிப் படித்துக்கொண்டே இருப்பாய்?

**விஜயா:** ஏன், இருக்கக்கூடாதா?

**தாயம்மாள்:** (துக்கமெல்லாம் மறந்து) சரி அம்மா, சாகாமல் இருந்தால் நான் பார்க்காமலா போகிறேன்? இன்னும் நாலு வருஷங்கழித்துப் பார்க்கலாம்.

**விஜயா:** தாயம்மா, நீ சிரித்துப் பேசினால் சந்தோஷமாக இருக்கிறது; என்னைக் கேலி பண்ணினாலும் பரவாயில்லை.

**தாயம்மாள்:** உன்னைப்போல யாரம்மா இருக்கப் போகிறார்கள்? உன்னைப் பார்த்துத்தான் எனக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருக்கிறது. இனி அந்தக் குடிசைக்குப் போனால் குழந்தை எப்படிக் கிடக்குமோ; அந்தச் சிறு பிள்ளைதான் என்ன சிரமப்படுகிறாளோ.... நான் போய் வரட்டுமா?

*[தாயம்மாள் வேகமாகப் புறப்படுகிறாள். அவள் முகத்தில் கவலை படர்கிறது. விஜயா அன்போடு பார்த்து நிற்கிறாள்.]*

## காட்சி இரண்டு

*காலை பதினொரு மணி ஆகப்போகிறது. ஓர் எளிய குடிசையின் உட்புறம். சுமார் எட்டு வயதுள்ள ஒரு பெண் ஒரு கந்தல் பாயின்மேல் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கும் குழந்தையைப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். வறுமையின் அறிகுறி அக்குடிசை முழுவதும் காணப்படுகிறது. தாயம்மாள் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைகிறாள்.*

**தாயம்மாள்:** பொன்னு, என்ன செய்கிறாய்?

பொன்னு: அம்மா, வந்திட்டாயா? தம்பி இப்பத்தான் தூங்கினான்.

தாயம்மாள்: அழுதானா?

பொன்னு: அம்மா, இந்நேரம் வரையிலும் சும்மா கத்து கத்துனு கத்தினான்...போம்மா, இந்நேரம் வரையிலும் என்ன பண்ணினாய்?

தாயம்மாள்: இந்தா, கொஞ்சம் சோறு கொண்டு வந்திருக்கிறேன். சாப்பிடு.

பொன்னு: எனக்கு வயிறு ரொம்பப் பசிக்குதம்மா? தம்பிகூடப் பசிக்குத்தான் அழுதான். இங்கே ஒண்ணுமே இல்லே; என்னம்மா செய்யட்டும்? இனிமே நான் தம்பியைப் பார்த்துக்கிட்டிருக்க மாட்டேன் போ.

தாயம்மாள்: நீ பார்க்காமல் போனால் நான் எப்படி வேலை செய்யப் போகட்டும்?

பொன்னு: போக வேண்டாம்.

தாயம்மாள்: போகாமல்போனால் கஞ்சி கிடைக்குமா? இப்பொழுதாவது அரைக் கஞ்சி கிடைக்கிறது.

பொன்னு: ஏம்மா, அப்பா எங்கே? ரொம்ப நாளாகக் காணோமே?

தாயம்மாள்: ஊருக்குப் போயிருக்கிறார்.

பொன்னு: வந்திடுவாரா?

தாயம்மாள்: ஆமாம்...பொன்னு. (குழந்தையைத் தொட்டுப் பார்க்கிறாள்.) தம்பிக்கு உடம்பு சுடுகிறதே.. கை வைக்க முடியவில்லை.

பொன்னு: அம்மா, அப்பா வரவேண்டாம். எங்கேயோ போகட்டும்.

தாயம்மாள்: ஏன் வரவேண்டாம்?

பொன்னு: தினமும் அப்பா உன்னிடம் சண்டை பிடிப்பார். அன்றைக்கு அடித்தாரோ இல்லையோ?

தாயம்மாள்: தம்பிக்கு மறுபடியும் மலேரியாக் காய்ச்சல் வந்திருக்கிறது. என்ன செய்கிறது? தலை வலித்திருக்கும். அதற்காகத்தான் அழுதிருப்பான்.

பொன்னு: அம்மா, இட்டிலி இல்லையா?

[பாத்திரத்தில் இருந்த சோற்றைச் சாப்பிட ஆரம்பிக்கிருள்.]

தாயம்மாள்: இட்டிலிக்கு எங்கே போகிறது?

பொன்னு: நேற்றுக் கொண்டுவந்தாயே?

தாயம்மாள்: நேற்று மிச்சம் இருந்ததை அந்த மகராஜி கொடுத்தாள். தினமும் கிடைக்குமா?

பொன்னு: அம்மா, நேற்று இங்கே அக்கா வந்திருந்தாள். எனக்கு மிட்டாய் கொடுத்தாள்.

தாயம்மாள்: எந்த அக்கா?

[அடுப்புப் பற்ற வைத்துக்கொண்டே பேசுகிறுள்.]

பொன்னு: அதுதான் உனக்குத் தெரியாதா? நீ வேலை செய்யும் வீட்டு அக்கா விஜயாதான்.

தாயம்மாள்: விஜயாவை அக்காவென்று சொல்லியா கூப்பிட்டாய்? யாராவது கேட்டால் சண்டைக்கு வருவார்கள்.

பொன்னு: ஏம்மா, கூப்பிட்டால் என்ன?

தாயம்மாள்: நாம் யாரம்மா, அக்கா என்று கூப்பிட? அவர்களெல்லாம் பெரிய இடத்துக்காரர். பணக்காரர். நீ அக்கா என்றால் சும்மா இருப்பார்களா?

பொன்னு: அம்மா, உனக்குச் சோறு வேண்டாமா?

தாயம்மாள்: சோறாக்கி நான் அப்புறம் சாப்பிட்டுக் கொள்கிறேன். இந்த அடுப்பைக் கொஞ்சம் ஊது, வா. நான் போய் ஏதாவது இரண்டு கீரையிருந்தால் பிடுங்கிக்கொண்டு வருகிறேன்.

பொன்னு: போம்மா, தினமும் கீரைக்குழம்பே வைக்கிறாய். வேண்டாம்.

தாயம்மாள்: கீரைகூட இனிமேல் கிடைக்குமோ என்னவோ. தீயை ஊது வா. குழாயிலே தண்ணீர் பிடித்து வைக்கவில்லையா?

*[குடத்தை எடுத்துப் பார்க்கிறாள்.]*

பொன்னு: தம்பி விட்டால்தானே? சும்மா அழுகிறான். எப்படிப் போகிறது?

தாயம்மாள்: இனித் தண்ணீருக்கு எங்கே போகிறது? சாயங்காலம் வரையிலும் குழாயிலே தண்ணீர் வராது. அந்த மாடிவீட்டு ஐயா கேணியிலாவது ஒரு குடம் சேந்தி வருகிறேன்.

*[குடத்தை எடுத்துக்கொண்டு புறப்படுகிறாள்.]*

பொன்னு: அம்மா, அங்கே போகாதே. வைவார்கள்.

தாயம்மாள்: ஏன் வைவார்கள்?

பொன்னு: நம்மைப் பார்த்தால் பிச்சைக்காரி போல இருக்கிறதாம். எல்லாம் கிழிந்ததை உடுத்திக் கொண்டு வருகிறோமாம். அதற்குத்தான் வரக்கூடாது என்கிறார்கள்.

[தாயம்மாள் முகத்தில் விசனத்தின் சாயல் படர்கிறது; சிறிது தயங்கி நிற்கிறாள். பிறகு குடத்தை எடுத்துக்கொண்டு வெளியே செல்கிறாள். பொன்னு தீயை ஊதி அடுப்பைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். வீட்டில் புகை சூழ்கிறது.]

## காட்சி மூன்று

முதற் காட்சியில் கண்ட மாளிகையின் ஒரு புறம். தாயம்மாள் அரிசியில் கல் பொறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். விஜயா பக்கத்தில் கைப்பிடிச் சுவரில் சாய்ந்தபடி பேசிக்கொண்டிருக்கிறாள்.

தாயம்மாள்: விஜயா, இனிமேலும் இந்தமாதிரி காலந் தள்ள முடியாது. கையிலிருந்த ஒன்று இரண்டு நகையும் விற்றுவிட்டேன். குழந்தைக்கு மறுபடியும் காய்ச்சல். பார்லிக் கஞ்சி வைத்துக் கொடு என்று ஆஸ்பத்திரி டாக்டர் சொல்கிறார்.

விஜயா: பார்லியா? நான் கொஞ்சம் தருகிறேன். கொண்டுபோய்க் கஞ்சி வைத்துக் கொடு.

தாயம்மாள்: அம்மா, உன்னாலேதான் நான் ஏதோ இதுவரை உயிர் வைத்திருக்கிறேன்.

விஜயா: தாயம்மா, உன் புருஷனைப்பற்றி என்னிடம் சொல்லக்கூடாதா? அவன் ஏன் உன்னை இப்படித் துரத்திவிட்டான்?

தாயம்மாள்: அதைச் சொல்லி என்ன ஆகப்போகிறது? விஜயா, நீ எதற்காகத் தினமுங் கேட்கிறாய்?

விஜயா: சொன்னால் உனக்கு ஓர் உதவி செய்யலாமென்று இருக்கிறேன். சொல்லமாட்டாயா?

**தாயம்மாள்:** அதைச் சொன்னால்தான் உதவி செய்வாயோ?

**விஜயா:** இல்லை தாயம்மா, அதைத் தெரிந்துகொள்ள எனக்கு ஆசையாக இருக்கிறது. நீ இவ்வளவு நல்லவளாக இருக்கிறாய். அவன் எதற்காக உன்னை ஓட்டி விட்டான் என்று என்னால் நினைக்க முடியவில்லையே! அவனைப்பற்றி நீ ஒருநாள் கூடக் கடுமையாக ஒரு வார்த்தை சொல்லக் காணோம்.

**தாயம்மாள்:** சின்ன வயசுப் பெண் நீ. உனக்கு அதெல்லாம் எதற்குத் தெரியவேணும்?

**விஜயா:** நீ இப்படி மறைத்து வைக்க வைக்க அதைத் தெரிந்துகொள்ள ஆசை அதிகமாகிறது. சொல், தாயம்மா.

**தாயம்மாள்:** சரியம்மா, உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன்? அவருக்கு இன்னொருத்தியிடம் நேசம். என்னைத் துரத்திவிட்டு அவளோடு இப்போது இருக்கிறார்.

**விஜயா:** என்ன, அந்தக் குழந்தைகளைக்கூட நினைக்காமலா?

*[அவள் முகத்தில் ஆச்சரியமும் கவலையும் தோன்றுகின்றன.]*

**தாயம்மாள்:** எட்டு வருஷம் கூடப் பிழைத்தோம். அதற்குள்ளே எத்தனை சண்டை, எத்தனை ரகளை!

*[துக்கத்தோடு பேசுகிறாள்.]*

**விஜயா:** அட பாவமே! இப்படிக்கூட ஒரு மனிதன் இருப்பானா?

தாயம்மாள்: என்ன செய்வது? எல்லாம் என் தலைவிதி.

விஜயா: வேறொருத்தியைக் கல்யாணம் பண்ணிக் கொண்டானா?

தாயம்மாள்: இல்லை விஜயா, கல்யாணம் எதற்கு வேணும்?

விஜயா: பின்னே......வேறெப்படி........?

தாயம்மாள்: இந்தப் பட்டணத்திலே ஒரு மூலையை விட்டு இன்னொரு மூலைக்குப் போய்க் குடியிருந்தால் யாருக்கு என்ன தெரியப் போகிறது? எங்காவது போய்ப் புருஷனும் பெண்சாதியும் போல இருப்பார்கள். யார் கேட்கப் போகிறார்கள்?

விஜயா: அடாடா, இந்தப் புருஷர்களை நம்பவே கூடாது. கல்யாணம் செய்துகொண்ட உன்னை இப்படி விட்டுவிட்டுப் போய்விட்டானே!

தாயம்மாள்: அவர்மேல் குற்றம் சொல்லி என்ன பிரயோசனம்? நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான்.

*[அவள் கண்ணில் நீர்த்துளி பிறக்கிறது.]*

விஜயா: தாயம்மா, உன்னை நினைத்தால் எனக்கும் அழுகையாக வருகிறது.

தாயம்மாள்: என்னவோ நான் செய்த வினை...அனுபவித்துத்தானே ஆக வேணும்?

விஜயா: உன் புருஷன் மகா பொல்லாதவனாக இருக்கிறான்.

தாயம்மாள்: அவரைக் குற்றம் சொல்ல எனக்கு மனசு வராது. நான் நல்லவளாக இருந்தால் அவருக்கு மனசு அப்படி ஏன் போகிறது?

விஜயா: அவளை நீ பார்த்திருக்கிறாயா? உனக்குத் தெரியுமா, அவளை?

தாயம்மாள்: தெரியாமல் என்ன? தெரியும்.

விஜயா: அவள் உன்னைவிட ரொம்ப அழகா?

தாயம்மாள்: இதெல்லாம் யார் சொல்ல முடியும்? மன சுக்குப் பிடித்தால் அதுதான் அழகு.

விஜயா: தாயம்மா, புதிய வேலை ஒன்று இருக்கிறது. சம்பளம் அதிகமாகக் கிடைக்கும். போகிறாயா?

தாயம்மாள்: அப்படி என்னவாவது கிடைத்தால்தான் நான் அந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற முடியும்.

விஜயா: அப்பாவுக்குத் தெரிந்தவர் ஒருத்தர் ரொம்பப் பணக்காரர். அவர் வீட்டிலே குழந்தைகளைக் கவ னித்துக் கொள்ள ஓர் ஆயாள் வேணுமாம். நல்லவ ளாக இருந்தால் சம்பளத்தைப் பற்றி அவர்களுக்கு லட்சியம் இல்லை. மாசம் முப்பது ரூபாய் கொடுப் பார்களாம்; சாப்பாடும் அங்கேயே மூன்று வேளைக்கும்.

தாயம்மாள்: (ஆவலோடு) முப்பது ரூபாய் கிடைத்தால் என் கஷ்டம் தீர்ந்து போகும்.

விஜயா: அப்பாவிடம் சொல்லி உனக்குச் சிபாரிசுக் கடிதம் வாங்கித் தருகிறேன். அப்பா சிபாரிசு பண் ணினால் நிச்சயம் அந்த 'வேலை உனக்குத்தான். ஆனால் தாயம்மா, நீ எங்களை விட்டுவிட்டுப் போகிற தினாலே எனக்கு ரொம்ப வருத்தமாகத்தான் இருக்கும்.

தாயம்மாள்: எனக்குக்கூட உங்களை விட்டுவிட்டுப் போக மனசில்லைதான். ஆனால் என்ன பண்ணு

வது? எப்படியாவது அந்தக் குழந்தைகளைக் காப்பாற்ற வேணுமே.

விஜயா: நான் இன்றைக்கே கடிதம் வாங்கித் தருகிறேன். நீ நேரிலே அந்த விலாசத்துக்கு எடுத்துக்கொண்டு போய்க் கொடு. உடனே வேலை கிடைத்துவிடும்.

தாயம்மாள்: விஜயா, நீ சுகமாக இருக்கவேணும். நீ தான் எனக்குத் தெய்வம் போல......கடுதாசு எங்கே கொண்டுபோக வேணும்?

விஜயா: அவர் தாம்பரத்திலே இருக்கிறாராம். எலக்டிரிக் ரெயிலிலே போனால் வீடு ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயாம்.

தாயம்மாள்: (யோசனையோடு) தாம்பரத்திலா?—

விஜயா: ஆமாம். உனக்குச் சம்பளம் முப்பது ரூபாயும், குடியிருக்க ஒரு சின்ன வீடும் கொடுப்பார்கள். அங்கேயே இருக்கலாம்.

தாயம்மாள்: அப்படியானால் ரொம்ப வசதியாய்ப் போகும். தினமும் மயிலாப்பூரிலிருந்து அங்கே போகமுடியுமா என்றுதான் யோசித்தேன். பக்கத்திலேயே வீடென்றால் தொந்தரவில்லை. குழந்தைகளையும் அடிக்கடி பார்த்துக் கொள்ளலாம்.

விஜயா: தாயம்மா, நீ சௌக்கியமாக இருக்கவேணும். அங்கே போனபிறகு என்னை மறக்க மாட்டாயே?

தாயம்மாள்: உன்னை மறக்க முடியுமா விஜயா? காலையிலே எழுந்ததும் உன்னைத்தான் நினைத்துக் கும்பிடுவேன்.

[ஒருவரை ஒருவர் அன்போடு பார்த்து நிற்கிறார்கள்.]

காட்சி நான்கு

எழும்பூர் ரெயில் நிலையம். தாயம்மாள் மின்சார ரெயிலுக்குப் பிரயாணச் சீட்டு வாங்க வந்துகொண்டிருக்கிறாள். அவள் முகத்தில் என்றுமில்லாத இளநகை விளையாடிக் கொண்டிருக்கிறது. அவளைப் பார்த்த கமலம் என்ற மாது அவளை விளித்துக் கொண்டே வருகிறாள். அவளுக்கு இருபத்தைந்து வயதிருக்கும்.

கமலம்: அக்கா, உன்னைப் பார்க்கவேணு மென்று இருந்தேன்......நான் நினைக்கிறதுக்கு முன்னாலே நீயே எதிரில் வந்துவிட்டாய். ரெயிலுக்குப் போகிறாயா? நானும் ரெயிலுக்குத்தான் வந்தேன்.

[தாயம்மாள் திரும்பிப் பார்க்காமல் போகிறாள்.]

என்ன அக்கா, கூப்பிடக் கூப்பிடத் திரும்பிக் கூடப் பார்க்காமல் போகிறாய்?

தாயம்மாள்: (சட்டென்று திரும்பிக் கோபமாக) யாரடி நீ? என்னை அக்கா வென்று கூப்பிட உனக்கென்ன யோக்கியதை இருக்கிறது?

கமலம்: (சாந்தமாக) அக்கா, என்ன இப்படிக் கோபம் கொள்கிறாய்?

தாயம்மாள்: (மேலும் கோபமாக) உன்னைப் பார்த்ததும் எனக்குச் சிரிப்பா வரும்?

கமலம்: என்னைக் கொஞ்சம் மனமிரங்கிப் பார்த்துப் பேசக்கூடாதா?

தாயம்மாள்: உன்னைப் பார்த்துப் பேசவேண்டிய அவசியம் இல்லை. உன் யோக்கியதைக்கு வெட்கமில்லாமல் பேச வேறு வந்துவிட்டாய்.

கமலம்: அம்மா, உனக்கு நான் என்ன செய்துவிட்டேன்? இப்படி...

தாயம்மாள் : (வெறுப்போடும் எளனத்தோடும்) நீயா?.... நீ ஒன்றுமே செய்யவில்லை. என் குடும்பத்தைத் தான் நாசம் பண்ணிளுய்...வேறென்றும் செய்ய வில்லை.

கமலம் : (இரங்கிய குரலில்) அக்கா, உன்னை விட்டு வரும்படி ஒரு நாள்கூட அவரிடம் நான் சொல்ல வில்லை; அவரேதான் வந்தார்.

தாயம்மாள் : அவர் வந்தால், நீ எப்படியடி கூடக் குடி யிருக்கச் சம்மதித்தாய்? நீதானே அவர் மனசு கலைவ தற்குக் காரணம்?

கமலம் : அக்கா, நான் சத்தியமாகச் சொல்லுகிறேன். உன்னைக் கெடுக்க எனக்குக் கொஞ்சங்கூட ஆசை யில்லை. ஆனல் அவரை விட்டுவிட்டு இருக்க என்ருல் முடியவில்லை.

தாயம்மாள் : உனக்கு மாத்திரந்தான் முடியாது. தாலி கட்டியவளுக்கெல்லாம் முடியும். என், அதுதானே நீ சொல்லுவது?

கமலம் : நீ என்னவோ கோபமாகவே பேசுகிருய். தயவு செய்து கொஞ்சம் யோசனை பண்ணிப் பார். அவருக்கும் என்னுடன் இருக்கத்தான் முதலி லிருந்து இஷ்டம்.

தாயம்மாள் : இஷ்டமாக இருந்தால் அப்பொழுதே போய்த் தொலையலாமே? அந்த இரண்டு குழந்தை களைப் பெற்றுத் தெருவிலே விட்டுவிட்டு இப்படிப் போவது நியாயமா?

கமலம் : அக்கா, உனக்கு எவ்வளவு வருத்தமாக இருக்கு மென்று எனக்குத் தெரியும். என்னைப்

போலத்தானே நீயும் அவரிடத்தில் ஆசை வைத்திருக்கிறாய்?

தாயம்மாள் : என் ஆசையைப்பற்றி யாருக்குக் கவலை? கடவுளுக்குத்தான் தெரியும். என்னுடைய நிலைமையிலே நீ இருந்தால் உனக்கு எப்படி இருக்கும்? அதை நினைத்துப் பார். இந்த எட்டு மாசமாக நான் படுகிற துன்பம் படைத்தவனுக்குக் கூடப் பொறுக்காது.

கமலம் : (கெஞ்சிய குரலில்) என்னவோ நினைத்துப் பார்த்தால் கஷ்டமாகத்தான் இருக்கிறது, அக்கா. ஆனால் எங்களால் பிரிந்திருக்க முடியவில்லை.

தாயம்மாள் : (வெறுப்போடு) முடியாது...முடியாது...... எப்படி முடியும்? நீங்கள் சுகமாக இருந்தால் போதும். அப்புறம் என்ன வேணும்? ஊரிலே எல்லாரும் இப்படி இருந்தால் உலகம் உருப்பட்டுப் போகும்!

கமலம் : சுயநலந்தான். இல்லையென்று நான் எப்படிச் சொல்லமுடியும்? நீ இப்படி மனசு வெந்து பேசினால் நாங்கள் சுகப்படவே முடியாது.

தாயம்மாள் : உங்களுக்குச் சுகம் என்ன வேண்டியிருக்கிறது? ஊரறிய நாடறியக் கை தொட்டுத் தாலி கட்டினவளை வீதியில் அலைய வைத்துவிட்டுச் சுகம் வேறு வேணுமா? நான் அலைந்தாலும் தொலைகிறது. பெற்ற பிள்ளைகளை நினைத்துப் பார்க்கவில்லையே! மிருகம் கூடப் பெற்றவைகளைக் காப்பாற்றாமல் போகாது. மனிதன் அந்தக் கடமையைச் செய்யக்கூட நீ விடாமல் கெடுத்துவிட்டாய்.

கமலம் : (அழுகிற குரலில்) அக்கா, இப்போது அவர் இருக்கிற நிலைமையை உனக்குச் சொன்னால் நீ இப்படிக் கோபமாய்ப் பேசமாட்டாய். உன் மனசு நொந்துதான் அவருக்கு இப்படி ஆபத்து வந்திருக்கிறது.

தாயம்மாள் : இப்போது என்ன வந்துவிட்டது?

கமலம் : என்னவோ டைபாய்டு காய்ச்சலாம்; அது வந்து ஆஸ்பத்திரியிலே ஒரு மாதமாகச் செத்த பிணம் போலக் கிடந்தார். நேற்றுத்தான் வீட்டுக்கு வர முடிந்தது. இன்னும் எட்டிவைக்கச் சீவனில்லை.

தாயம்மாள் : டைபாய்டு காய்ச்சலா?

கமலம் : ஆமாம். இன்னுங்கூட இரண்டு மாசம் போனால்தான் உறுதி சொல்ல முடியுமென்று டாக்டர் சொல்கிறார். எப்படி ஆகுமோ?

தாயம்மாள் : ஆஸ்பத்திரியிலே நன்றாகக் கவனிப்பார்களே?

கமலம் : நன்றாய்த்தான் பார்த்தார்கள். ஆனால் இனிமேதான் ரொம்பச் சாக்கிரதையாகக் கவனிக்க வேணுமாம். மறுபடியும் காய்ச்சல் திரும்பிவந்தால் பிழைக்கிறது கஷ்டமாய்ப் போய்விடுமாம்.

தாயம்மாள் : அப்படியானால் நன்றாகப் பார்த்துக் கவனித்துக்கொள்ள வேணும்.

கமலம் : அதுதான் அக்கா எனக்கு ஒரே கவலையாக இருக்கிறது. இரண்டு மாசத்துக்கு வேளை வேளைக்கு நல்ல சாப்பாடு கொடுத்து உடம்பைக் கவனிக்க வேணும். நான் என்ன செய்யட்டும்? கையிலே

இருந்த காசெல்லாம் செலவாய்விட்டது. இப்போது அவரும் வேலைக்குப் போக முடியாது.

தாயம்மாள்: நீ வேலை செய்வதில்லையா?

கமலம்: அவர்தான் இத்தனை நாளாகச் சம்பாதித்துப் போட்டார். என்னை வேலைக்குப் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டார்.

தாயம்மாள்: நகைநட்டு இருந்தால் விற்றுச் செலவு பண்ணலாமே?

கமலம்: இருந்ததெல்லாம் போன மாசத்திலேயே விற்றுவிட்டேன். ஆஸ்பத்திரியிலே இருந்தபோதே எல்லாம் தீர்ந்தது. ஏதாவது வேலை கிடைத்தால் தான் அவரைக் காப்பாற்ற முடியும்...அக்கா, நான் எங்கெல்லாமோ அலைந்து பார்த்துவிட்டேன்; நல்ல சம்பளத்தில் ஒரு வேலையும் கிடைக்கவில்லை.

தாயம்மாள்: என் பாடும் திண்டாட்டமாகத்தான் இருக்கிறது.

கமலம்: அக்கா, உன்னிடத்திலே உதவி கேட்க எனக்கு அவமானமாக இருக்கிறது. இருந்தாலும் வழியில்லை. அவர் உயிர் பிழைக்க நான் என்ன செய்யவும் தயார். அக்கா, உன்னைக் கெஞ்சிக் கேட்கிறேன். ஏதாவது வேலைக்கு வழியிருந்தால் சொல். மாசம் ஒரு முப்பது ரூபாயாவது கிடைத்தால்தான் அவர் உயிர் தப்பும்.

தாயம்மாள்: நீங்கள் பண்ணின அக்கிரமத்திற்கு எல்லாம் பட்டுத்தான் ஆகவேணும்.

கமலம்: அக்கா, நீ அப்படிச் சொல்லப்படாது. உனக்கு அவரிடத்திலே பிரியம் இல்லையா? அவர்

தப்புச்செய்தால் அதற்காக அவரைச் சாக விட்டுவிட உனக்கு மனசு வருமா?

**தாயம்மாள்:** இத்தனை பெரிய பட்டணத்திலே உனக்கு வேலை கிடைக்காமலா போகும்?

**கமலம்:** வேலை இருக்கிறது. ஆனால் ஐந்து ரூபாய் பத்து ரூபாய்க்கு மேல் யார் கொடுக்கிறார்கள்? எனக்கு வீட்டுவேலை தவிர வேறு எதுவும் தெரியாது.

**தாயம்மாள்:** வேலை கிடைத்தாலும் எல்லாருக்கும் பிடிக்கிற மாதிரி ஒழுங்காகச் செய்யவேணுமே!

**கமலம்:** எத்தனை ஒழுங்காக வேண்டுமானாலும் செய்கிறேன். அதற்குக் கொஞ்சங்கூடச் சளைக்க மாட்டேன் அக்கா. அவர் உயிரைக் காப்பாற்ற ஏதாவது வழி இருந்தால் சொல்லவேணும்.

**தாயம்மாள்:** கமலம், நான் ஒன்று சொல்கிறேன். கேட்பாயா?

**கமலம்:** அக்கா, என்ன சொன்னாலும் கேட்கிறேன். அவரை நினைத்து எனக்கு உதவி பண்ணவேணும். கையெடுத்துக் கும்பிடுகிறேன்.

**தாயம்மாள்:** இந்தா, ஒரு கடுதாசி. நீ இதை எடுத்துக் கொண்டு தாம்பரத்துக்குப் போ. அங்கே போனால் வேலை கிடைக்கும். ஸ்டேஷனுக்குப் பக்கத்திலேயே வீடு இருக்குதாம். நல்ல வேளை! கடுதாசியிலே பெயர் போடாமல் சும்மா வேலைக்காரி என்றுதான் இருக்கிறது.

**கமலம்:** அக்கா, இந்த ரெயிலுக்கே போகிறேன். நீ ரெயிலுக்கு வருகிறாயா?

**தாயம்மாள்:** இல்லை. எனக்கு இனி அங்கென்ன சோலி?

*[கமலம் வேகமாக ரெயில் நிலையத்திற்குள் நடக்கிறாள். தாயம்மாள் அவளைப் பார்த்துக்கொண்டே நிற்கிறாள். குழந்தைகளை நினைத்துக் கவலையும், கணவன் உயிர் பிழைப்பான் என்ற எண்ணத்தால் மகிழ்ச்சியும் மாறி மாறி அவள் முகத்தில் தோன்றுகின்றன.]*

— திரை —

# கங்கணம்

## காட்சி ஒன்று

*சித்தூர்க் கோட்டை முற்றுகையிடப் பட்டிருக்கிறது. அதனுள்ளே அரண்மனையில் இரவு எட்டு மணி சுமாருக்கு இரு பெண்கள் அமர்ந்து உரையாடிக் கொண்டிருக்கிறார்கள். ஒருத்திக்கு வயது அறுபது இருக்கும். அந்த வயதிலும் அவள் முகத்தில் கம்பீரமும் உறுதியும் தெரிகின்றன. அவள்தான் இறந்து போன ராணா சங்காவின் தாய் ஜவாஹர்பாய். மற்றவள் ராணா சங்காவின் மனைவி கருணாவதி. அவளுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். அழகும் வீரமும் பொருந்தியவள்.*

ஜவாஹர்பாய்: கருணாவதி, நம் கோட்டைக்குப் பெரிய ஆபத்து நேரிட்டிருக்கிறது. சென்ற இரண்டு மாத காலமாக இதைப் பகைவர்கள் நெருங்காதபடி காத்து வந்தோம்; ஆனால் இன்று தெற்குப் பக்கத்துக் கோட்டைச் சுவரிலே வெடிமருந்து வைத்துத் தகர்த்துப் பெரும் பிளவை உண்டாக்கி விட்டார்கள்.

கருணாவதி: (கவலையோடும் ஐயத்தோடும் பார்த்து) என்ன! சித்தூர்க் கோட்டைச் சுவரும் தகர்ந்து போய் விட்டதா?

ஜவாஹர்பாய்: ஆமாம், வெடிமருந்து இல்லையானால் இதை யாரும் அசைக்க முடியாது. ஆனால்...... இன்றைக்கு யுத்தமுறையே மாறிக்கொண்டு வருகிறதல்லவா?

கருணாவதி: அந்தக் குஜராத் சுல்தானான பகதூர் கோட்டைக்குள் நுழைந்து விடுவானா?

ஜவாஹர்பாய்: கோட்டைச் சுவரைப் பழுது பார்ப்ப தென்பதும் முடியாத காரியம்.

கருணவதி: அப்படியானால்...அதன் வழியாகப் பகதூரும் அவனுடைய சேனைகளும்...

ஜவாஹர்பாய்: மதில் சுவர் தகர்ந்து போன இடத்தைப் பாதுகாக்க முடியாவிட்டால் அந்த மிலேச்சனுடைய கால் இந்தப் புண்ணிய பூமியை மிதித்துவிடும்.

கருணவதி: நம் வீரர்களின் எண்ணிக்கையோ குறைந்து விட்டது. மதில் சுவரின் பலத்தால் இதுவரை அவர்கள் தாக்குப் பிடித்து நின்றார்கள். இனிமேல் நாம் என்ன செய்வது?

ஜவாஹர்பாய்: இனி என்ன செய்வதா? நமது உயிர் இருக்கும் வரை போரிட வேண்டியதுதான். வேறு என்ன யோசனை?

[அவள் கண்கள் சுடர்விடுகின்றன.]

கருணவதி: அம்மா, ரஜபுத்திர திலகமான என் கணவரைப் பெற்றெடுத்த தாங்கள் வேறு எந்த யோசனையும் செய்ய மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியாதா? எனக்கும் வேறு யோசனை கிடையாது. ஆனால்...

[தயக்கத்தோடு ஜவாஹர்பாயைப் பார்க்கிறாள்.]

ஜவாஹர்பாய்: ஆனால்...ஆனால் என்ன? நீ எதையோ நினைத்து ஏக்கம் கொள்வதுபோல் தெரிகிறதே?

கருணவதி: ஏக்கம் ஒன்றும் இல்லை. உங்கள் மைந்தர் உயிரோடிருந்திருந்தால் எனக்குக் கவலை இருக்காது. அவர் மாண்ட பிறகும் நான் இந்த உயிரை வைத்

துக்கொண்டிருக்க வேண்டியதாயிற்றே என்றுதான் ஏங்குகிறேன்.

ஜவாஹர்பாய்: கருணாவதி, என் மைந்தன் உயிர் இழந்த போது நீ கர்ப்பிணியாய் இருந்ததை மறந்துவிட்டாயா? நமது வீர வம்சம் நிலைத்து நிற்பதற்காக, அவனுடைய புத்திரன் உதயனைப் பெற்றுக் கொடுப்பதற்காகத்தானே நீ உயிர் வாழச் சம்மதித்தாய்? உன்னுடைய கணவனுடைய விருப்பமும் அது தானே?

கருணாவதி: அம்மா, அந்த வீர வம்சம் அற்றுப்போகக் கூடாதென்பதுதான் இப்பொழுதும் என்னுடைய கவலை.

ஜவாஹர்பாய்: அதைப்பற்றி நான் முடிவு செய்து விட்டேன். இன்றிரவு உதயனைச் சுரங்க வழியின் மூலம் இரகசியமாக வெளியே அனுப்பிவிடலாம். நீயும் அவனுடன் செல்லவேண்டும்.

கருணாவதி: உங்களை இங்கே விட்டுவிட்டா?

ஜவாஹர்பாய்: ஆமாம், உதயன் இன்னும் சிறுகுழந்தை. உன்னை விட்டுப் பிரிந்திருந்தால் அவன் ஏங்கிப் போய்விடுவான்.

கருணாவதி: அவன் உங்களிடந்தானே உயிராக இருக்கிறான்? நீங்கள்தான் அவனோடு போகவேண்டும். உங்களை இங்கு பகைவர்களிடையே விட்டுவிட்டு நான் போகமாட்டேன்.

*[பேச்சிலே உறுதி தொனிக்கிறது.]*

ஜவாஹர்பாய்: நீ இங்கிருந்து என்ன செய்வாய்?

கருணாவதி: (கம்பீரமாக) நீங்கள் எதைச் செய்வீர்களோ அதை நான் செய்கிறேன். என் உடம்பில் அதிக வலிமை இருக்கிறதே?

ஜவாஹர்பாய்: நீ என்னதான் செய்வாய்? சொல் பார்க்கலாம்.

கருணாவதி: நீங்கள் என்ன கட்டளையிட்டுச் செல்கிறீர்களோ அதைச் செய்கிறேன்.

ஜவாஹர்பாய்: அது இருக்கட்டும், உன் விருப்பப்படி நீ நடப்பதானால் இந்த நிலைமையைச் சமாளிக்க என்ன செய்வாய்?

கருணாவதி: எனக்கு ஒன்று தோன்றுகிறது; அதை நீங்கள் ஆமோதிப்பதாக இருந்தால்........

ஜவாஹர்பாய்: வெளிப்படையாக உனது யோசனையைச் சொல். இதில் என்ன தயக்கம்?

கருணாவதி: நமக்கு உதவி புரிய டெல்லி அரசரை அழைக்கலாம்.

ஜவாஹர்பாய்: (கோபத்துடன்) என்ன சொன்னாய்? டெல்லி அரசன் அந்த ஹுமாயூனையா? உன் கணவனை ஏமாற்றித் தோல்வியுறச் செய்த அந்த வஞ்சகன் பாபருக்குப் பிறந்த மகனையா?

கருணாவதி: உங்கள் மகனை பாபர் ஏமாற்றி வெற்றியடைந்தது மெய்தான்.

ஜவாஹர்பாய்: அந்தத் தோல்வியினாலேயே மனம் உடைந்து என் மகன் இறந்தது உனக்குத் தெரியாதா?

கருணாவதி: அதுவும் எனக்குத் தெரியும்.

ஜவாஹர்பாய்: அப்படி இருந்தும் இந்த வார்த்தையை நீ சொல்லலாமா?

கருணாவதி: நான் பாபரின் உதவியை நாடவில்லையே! அவர்தான் இறந்து போய்விட்டாரே! நான் ஹுமாயூன் உதவியைத்தான் கேட்க விரும்புகிறேன்.

ஜவாஹர்பாய்: கருணாவதி, நீ ராஜபுத்திர மங்கையா? கணவனை வஞ்சித்த கயவனின் மகன் உதவியை நீ கனவிலும் கருதலாமா? அதற்குப் பதிலாக இந்தப் பகதூரின் படைக்கு நடுவே புகுந்து, வீராவேசத்தோடு போர் செய்து வீரசொர்க்கம் புகுவது நமது குலத்தின் புகழுக்கு உகந்ததென்று உனக்குப் படவில்லையா?

கருணாவதி: அம்மா, நான் போருக்குப் பயப்படவில்லை. என் உயிருக்கும் பயப்படவில்லை. ஆனால் இன்று உங்கள் இளைய மகனுக்கும், மந்திரி பிரதானிகளுக்கும் உள்ள மனவேற்றுமையைப் பயன்படுத்திக் கொண்டு, பேடித்தனமாகப் போருக்கு வந்திருக்கும் இந்தப் பகதூரை முறியடித்து, அவன் கையில் சிக்குண்ட தங்கள் மகனை மீட்டு வர வேண்டாமா?

ஜவாஹர்பாய்: விக்ரமஜித்தை என் மகனென்று சொல்லிக் கொள்ளவும் எனக்கு வெட்கமாயிருக்கிறது.

கருணாவதி: அவருக்கு அநுபவம் போதாது. இளம் வயதாகையால் சபையோர்களோடு ஏதோ பகைத்துக் கொண்டு விட்டார். அதை அறிந்த இந்த வஞ்சகன் அவர் கோட்டைக்கு வெளியே சென்றிருந்த தருணத்தில் சிறைப் பிடித்துக் கொண்டானே, அவனுக்குத் தகுந்த தண்டனை கொடுக்க வேண்டாமா?

ஜவாஹர்பாய்: ஹுமாயூனும் இந்தப் பகதூரைப்போல ஒரு மிலேச்சன்தானே? அவன் உனக்கு எப்படி உதவிக்கு வருவான்?

கருணவதி: அவர் நிச்சயமாக வருவாரென்று நான் நம்புகிறேன்.

ஜவாஹர்பாய்: நீ இந்த மிலேச்சர்களை யெல்லாம் மனிதர்களென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய். நமது நாட்டிற்குள் புகுந்து அவர்கள் எத்தனையோ அட்டூழியம் செய்திருப்பதைக் கண்ட பிறகும் உனக்கு இது தெரியவில்லையே!

கருணவதி: அவர்கள் எல்லோரும் அப்படிக் கொடியவர்கள் என்று நான் கருதவில்லை.

ஜவாஹர்பாய்: அந்த ராட்சஸர்களில் நல்லவனென்றும் ஒருத்தன் இருப்பானா?

கருணவதி: ஹுமாயூனை அரக்கனாக நினைக்க என்னால் முடியாது.

ஜவாஹர்பாய்: பாபரின் மகன்தானே அவன்?

கருணவதி: ஹுமாயூன் சுத்த வீரர்.

ஜவாஹர்பாய்: சுத்த வீரனாக இருந்தாலும் அவன் உனக்கு எப்படி உதவிக்கு வருவான்?

கருணவதி: நமக்கு உதவி செய்ய அவர் கடமைப்பட்டிருக்கிறார். அவர் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவார் என்று நம்புகிறேன்.

ஜவாஹர்பாய்: (யோசனையோடு) கருணவதி, நீ சொல்வது எனக்கு விளங்கவில்லை. அவன் என்ன வாக்குக் கொடுத்திருக்கிறான்?

கருணவதி: அவர் என்னிடமிருந்து கங்கணத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

[கருணவதி மெதுவாக எழுந்து நின்று பதிலை எதிர்பார்க்கிறள்.]

ஜவாஹர்பாய்: (சட்டென்று வெறுப்புடன்) அவனு? அவனுக்கு எப்பொழுது இந்தப் பரிசைக் கொடுத்தாய்?

கருணவதி: என் கணவர் மரணப் படுக்கையிலே இருந்த போது ஹுமாயூன் அவரைப் பார்க்க வந்தார் அல்லவா?

ஜவாஹர்பாய்: அவன் முகத்திலே விழிக்க என் மகன் ராணசங்கன் மறுத்துவிட்டானே?

கருணவதி: ஆமாம், அவர் பார்க்க மறுத்துவிட்டார். ஆனல், ஹுமாயூன் தம் தந்தை பாபர் செய்த வஞ்சனையை வெறுத்து என் கணவரிடம் நட்புக் கொள்ளவே வந்தார் என்பதை நான் அறிந்தேன். அதனலேயே கங்கணம் அனுப்பினேன்.

ஜவாஹர்பாய்: கருணவதி, இந்த மிலேச்சனுக்குக் கங்கணத்தின் பெருமையைப்பற்றி என்ன தெரியப் போகிறது?

கருணவதி: எனக்கு என்னவோ அவர் தம் வாக்கைக் காப்பாற்றக்கூடிய உயர்ந்த குணமுடையவராகத் தான் தெரிகிறது.

ஜவாஹர்பாய்: அவன் நிச்சயமாக உதவிக்கு வரப்போவதில்லை. அப்படி வருவதாகப் பாசாங்கு செய்தாலும் கடைசியில் பகதூரோடு சேர்ந்துகொண்டு சித்தூரைக் கொள்ளையடிக்கத்தான் முயலுவான். போரில் தோல்வியேற்பட்டதை உணர்ந்து பாபர் என் மகனேடு சமாதானம் செய்துகொள்ள விரும்புவ

தாகப் பாசாங்கு செய்து ஏமாற்றினானல்லவா? அவன் மகன்தானே இவன்?

கருணாவதி: (மெதுவாக) நீங்கள் பாபரின்மேல் உள்ள வெறுப்பால் இப்படிப் பேசுகிறீர்கள்.

ஜவாஹர்பாய்: (சட்டென்று கோபத்தோடு எழுந்து நின்று) இவ்வளவு தூரம் நீ பேசியது போதும். ஹுமாயூன் கங்கணத்திற்குக் கட்டுப்பட்டு வருவதாக இருந்தாலும் என் உயிருள்ள வரை அவனுடைய உதவியை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவன் இந்தக் கோட்டைக்குள் அடி வைக்கவும் கூடாது.

*[சற்று நேரம் யாரும் பேசவில்லை. பிறகு மெதுவாகக் கருணாவதி பேசுகிறாள்.]*

கருணாவதி: அம்மா, மகனை இழந்த சோகத்தால் உங்கள் மனம் புண்பட்டிருக்கிறது. அதை மாற்ற முடியாதென்று தெரிந்துகொண்டேன். இனி உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள். உங்கள் கட்டளையை நிறைவேற்ற நான் சித்தமாக இருக்கிறேன்.

ஜவாஹர்பாய்: குழந்தை உதயசிங்கை இரகசியமாக வெளியேற்ற ஓர் ஏற்பாடு செய்திருக்கிறேன். அவனை அனுப்பிவிடு. நீ அவனுடன் போகவேண்டாம். உன் மனப் போக்கை அறிந்த பிறகு உன்னை வெளியே அனுப்ப எனக்குச் சம்மதம் இல்லை.

கருணாவதி: உங்களை விட்டுவிட்டுப் போகவும் நான் விரும்பவில்லை.

ஜவாஹர்பாய்: நான் நாளைக் காலையில் போர் முனைக்குச் செல்லுகிறேன். என் உயிருள்ள வரையில்

பகைவன் உள்ளே நுழையாமல் காப்பேன். பிறகு நடக்கிறது நடக்கட்டும்.

[அவள் மற்றோர் அறைக்குள் செல்கிறாள். கருணாவதி யோசனையோடு நிற்கிறாள்.]

### காட்சி இரண்டு

சித்தூர் அரண்மனையிலே கருணாவதியின் அறை. இரவு 9 மணிக்குக் கருணாவதியும் அவளுடைய அந்தரங்கத் தோழி வசந்தியும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

கருணாவதி: வாசந்தி, ராணியம்மாள் அந்தத் தகர்ந்து போன கோட்டைச் சுவரின் முன்பு படுகாயமுற்று வீழ்ந்தபோதும், அவர் முகத்திலே எவ்வளவு கம்பீரம் இருந்தது, பார்த்தாயா?

வாசந்தி: அவருடைய வீராவேசத்தைக் கண்டுதான் சென்ற இரண்டு நாட்களாகப் பகைவர்கள் உள்ளே நுழையாதபடி மதில் சுவரில் தகர்ந்துபோன பாகத்தை நம் வீரர்கள் தமது உடம்பினால் அடைத்துப் போர் செய்தார்கள்.

கருணாவதி: ராணியம்மாளை யுத்த கோலத்தில் பார்த்த போது எனக்குச் சித்தூரின் காவல் தெய்வமே நினைவுக்கு வந்தது.

வாசந்தி: இரவிலே பார்த்தால் ராணி ஜவாஹர்பாய் பகைவர்களின் கண்ணிலே காளிதேவியைப் போலத் தோன்றினாராம்.

கருணாவதி: காளிதேவியின் அருள் நமக்கு இனிமேலும் இராமல் போகாது.

வாசந்தி: கருணாவதி தேவி, இனி நீங்கள் தானே இந்தக் கோட்டைக்கு ராணி? உங்கள் உத்தரவை எல்லோரும் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

கருணவதி: ஆமாம், நான் தான் கோட்டையைப் பாதுகாக்க வேண்டும். வாசந்தி, என் குழந்தை உதயசிங் பத்திரமாகப் போய்ச் சேர்ந்திருப்பானா? (அவள் குரலிலே கவலை தொனிக்கிறது.)

வாசந்தி: அவனைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

கருணவதி: உன்னை ஒன்று கேட்க வேண்டுமென நினைத்தேன். மூன்று வருஷங்களுக்கு முன்பு ஹுமாயூனிடம் என்னுடைய கங்கணத்தைக் கொடுத்தாயே, அப்பொழுது அவர் என்ன சொன்னார்?

வாசந்தி: கங்கணத்தை ஏற்றுக் கொண்டவன் எப்படி நடந்துகொள்ள வேண்டுமோ அப்படி நடந்து கொள்வதாகத்தான் சொன்னார்.

கருணவதி: ஹுமாயூன் உண்மை வீரரென்றுதான் நினைக்கிறேன். ஆனால் இன்றைக்குச் செய்தி அனுப்பினால் அவர் வரும் வரையில் நாம் கோட்டையைக் காக்க முடியுமா என்பதுதான் சந்தேகம். எங்கே, அந்தத் தியோலி இளவரசர் பாக்ஜியை வரும்படி சொல்லியிருந்தேனே?

வாசந்தி: அதோ அவரும் வந்துவிட்டார்.

[தியோலி என்ற சிறு நாட்டின் இளவரசனான பாக்ஜிக்கு வயது 25-க்கு மேலிராது. தியாக உணர்ச்சியோடு சித்தூருக்கு உதவி செய்ய வந்திருக்கிறான்.]

கருணவதி: இளவரசரே, வாருங்கள்.

பாக்ஜி: ராணி கருணவதி, வணக்கம். தங்களுடைய ஆணையை நிறைவேற்ற நாங்கள் அனைவரும் சித்தமாக இருக்கிறோம்.

[கருணவதி காட்டிய ஆசனத்தில் அமர்கிறான்.]

கருணவதி: சித்தூரின் பெயரைக் காப்பாற்ற நீங்கள் தயாராக இருப்பதை நான் அறிவேன். நாளைக்குப் போர் தொடங்குமுன் செய்ய வேண்டிய முக்கியமான காரியம் ஒன்று இருக்கிறது. அதைப்பற்றி ஆலோசிக்கத்தான் உங்களை அழைத்தேன். இப்பொழுது மிக வேகமாகச் செல்லக்கூடிய இரண்டு குதிரை வீரர்களை வெளியே அனுப்பவேண்டும்.

பாக்ஜி: உடனே ஏற்பாடு செய்கிறேன். அவர்களை இரகசிய வழியின் மூலம் வெளியேறித் தியோலிக்குப் போகச் சொல்லுகிறேன். அங்கே எனது கடிதத்தைக் காட்டிச் சிறந்த குதிரைகளைப் பெற்றுக் கொள்ளுவார்கள். அவர்கள் எங்கே போக வேண்டும்?

கருணவதி: ஹுமாயூனுக்குக் கடிதம் எடுத்துச் செல்ல வேண்டும்.

பாக்ஜி: (ஆச்சரியத்தோடு) ஹுமாயூனுக்கா?

கருணவதி: (நிதானமாக) ஆமாம், அவர் என் கங்கணத்தைப் பெற்றிருக்கிறார். இந்தச் சமயத்தில் அவரை உதவிக்கு அழைக்க எண்ணியிருக்கிறேன்.

பாக்ஜி: அந்த மிலேச்சன் நமக்கு உதவி புரிவானா? குஜராத் சுல்தானும் அவனும் ஒரே மதத்தவராயிற்றே?

கருணாவதி: ஹுமாயூன் கங்கணத்தைப் பெற்றுக் கொண்டதால் எனக்கு எந்தச் சமயத்திலும் உதவி செய்வார் என்று நினைக்கிறேன்.

பாக்ஜி: அந்த தர்மம் ராஜபுத்திரனுக்குத்தான் தெரியும். இந்த மிலேச்சனுக்கு....

கருணாவதி: நான் அவரை அப்படித் தாழ்வாக மதிக்கவில்லை. அவர் ஒரு சுத்த வீரர்.

பாக்ஜி: அப்படி வருவதானாலும் ஹுமாயூன் இப்பொழுது வங்காளத்தில் நெருக்கடியான போரில் ஈடுபட்டிருக்கிறான். அங்கிருந்து இங்கு வர எத்தனை நாளாகுமோ? அது வரை நாம் தாக்குப் பிடிக்க வேண்டுமல்லவா?

கருணாவதி: நான் முன்பே அவர் உதவியை நாட விரும்பினேன். ஆனால் ராணியம்மாள் அதற்கு இணங்கவில்லை. இன்று என் விருப்பப்படி அவருக்குக் கடிதம் அனுப்பலாம் அல்லவா?

பாக்ஜி: உங்கள் ஆணைக்கு எதிர் நான் சொல்லமாட்டேன். ஆனால் தங்கள் கணவருக்கு நேர்ந்ததை எண்ணிப் பார்த்தால்......?

கருணாவதி: இன்று சித்தூரைக் காக்க வேண்டுமானால் வேறு வழி கிடையாது.

பாக்ஜி: ஹுமாயூன் வருவானென்று வைத்துக் கொண்டாலும், இன்னும் குறைந்தது மூன்று நான்கு நாட்களுக்கு நாம் பகதூரை உள்ளே புக விடாமல் காக்க வேண்டும்.

கருணாவதி: ஆமாம்; நாளைக் காலையில் யுத்த முனைக்கு நான் செல்லுகிறேன். ராணி ஜவாஹர்பாய் பிடித்த வாள் இன்னும் மங்கிப் போகவில்லை யல்லவா?

பாக்ஜி: கருணைவதி தேவி, நீங்கள் அர்ஜுனசிங்கின் வீரத் தங்கை என்பதை ஒப்புக்கொள்கிறேன். மீதியிருக்கும் நம் வீரர்களை முன்னின்று நடத்தும் பாக்கியம் எனக்குக் கிடைக்கக் கூடாதா?

கருணாவதி: இளவரசே, உங்களை வேறொரு முக்கியமான பணிக்காக ஒதுக்கி வைத்திருக்கிறேன். ஹுமாயூன் வருவதற்குள் நம் வீரர்களில் பெரும்பாலோர் ரணகளத்தில் உயிர் துறந்துவிட்டால், கடைசியிலே இங்குள்ள பெண்களெல்லாம் தீப் புகு முன்பு, கோட்டையை விட்டு வெளிக் கிளம்பிப் பகைவரின் மத்தியிலே புகுந்து சிங்கங்களென ஆர்ப்பரித்து உயிர் குடிக்கப்போகும் மற்ற வீரர்களுக்கு ஒரு தலைவன் வேண்டும் அல்லவா? உங்களுடைய தலைமையில் நம் வீர ரத்தினங்கள் செய்யும் சாகஸச் செயல்களைப் பார்த்துக்கொண்டு பெருமிதத்தோடு நாங்கள் தீப் புக வேண்டும். அதற்கு உங்களை எதிர் பார்த்திருக்கிறேன்.

பாக்ஜி: தேவி, உங்கள் ஆணை; என்னை இவ்வளவு உயர்வாக மதித்திருக்கும் உங்களுக்கு எனது நன்றி.

[கருணைவதியைப் பணிகிறான். அவன் முகத்தில் மகிழ்ச்சிக் குறி தாண்டவமாடுகிறது.]

### காட்சி மூன்று

வங்க நாட்டிலே ஒரு பாசறை. உச்சி வேளை. தூரத்திலே போர் ஆரவாரம் கேட்கின்றது. ஹுமாயூன் யாரையோ அவசரமாக எதிர் பார்த்திருக்கிறான். அவனுடைய சேனாதிபதி வேகமாக உள்ளே வந்து வணங்கி நிற்கிறான். ஹுமாயூனுக்கு முப்பது வயதிருக்கலாம். நறுக்கி விடப்பட்ட மீசையும் தாடியும் அவன் முகத்திற்கு அழகு செய்கின்றன. சேனாதிபதிக்கு நாற்பது வயது இருக்கும்.

ஹுமாயூன்: சேனாதிபதி, நான் உடனே சித்தூரை நோக்கிப் புறப்பட வேண்டும்.

சேனாதிபதி: (ஆச்சரியத்தோடு) பாதுஷா! என்ன சொன்னீர்கள்?

ஹுமாயூன்: ஆமாம், நான் புறப்பட வேண்டும். உடனே முப்பது ஆயிரம் குதிரை வீரர்களை ஆயத்தம் செய்.

சேனாதிபதி: இன்னும் சில மணி நேரத்தில் இங்கே நமக்குப் பெரிய வெற்றி கிடைக்கப்போகிறது. அதை விட்டுவிட்டா?

ஹுமாயூன்: அந்த வெற்றியைப்பற்றியெல்லாம் இப்பொழுது எனக்குக் கவலை இல்லை. நீ அதைக் கவனித்துக் கொள். நான் போயாக வேண்டும்.

சேனாதிபதி: நமது குதிரைப்படைதானே இப்பொழுது வெற்றிக்குக் காரணமாக இருக்கிறது? அதைச் சித்தூருக்கு அனுப்பிவிட்டால் கைக்குக் கிடைத்த வெற்றி......

[ஹுமாயூன் சமிக்ஞை செய்ய மெதுவாக ஆசனத்தில் உட்காருகிறான்.]

ஹுமாயூன்: சேனாதிபதி, உனக்கு வெற்றிதான் பெரிதாகத் தெரிகிறது. நான் இப்பொழுதே புறப்படாவிட்டால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாது.

சேனாதிபதி: பிரபு, தாங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லையே?

ஹுமாயூன்: என் உதவியை நாடி ராணி கருணாவதி கடிதம் அனுப்பியிருக்கிறாள். அவளிடம் கங்கணப் பரிசைப் பெறுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

சேனாதிபதி: கங்கணப் பரிசா? அதென்ன வேடிக்கை?

[லேசாகச் சிரிக்கிறான்.]

ஹுமாயூன்: அது வேடிக்கை அல்ல. உனக்கு இந்தத் தேசத்து வழக்கம் தெரியாது. இதை 'ரக்ஷாபந்தனம்' என்று சொல்லுகிறார்கள். ஒரு பெண்மணியிடமிருந்து இதை ஏற்றுக்கொண்டவன் யாராலும் சரி, அவளுக்குச் சகோதரனாகி விடுகிறான். ஆபத்துக் காலத்தில் அவன் உதவிக்கு வர வேண்டும்.

சேனாதிபதி: பாதுஷா, எனக்கு இந்த வழக்கமெல்லாம் தேவையில்லை. நீங்கள் இப்பொழுது நினைக்கிறபடி செய்தால் நமது ராஜ்யத்திற்கே ஆபத்து வந்து விடும்.

ஹுமாயூன்: இந்த ராஜ்யம் எனக்குப் பரம்பரைச் சொத்தல்லவே? போனால் பரவாயில்லை.

சேனாதிபதி: நீங்கள் கொஞ்சம் நிதானமாக யோசிக்க வேண்டுமென்று வேண்டுகிறேன். இந்தப் போரிலே தோல்வி யென்றால் பிறகு நமக்குத் தஞ்சம் புகக்கூட இந்தியாவில் இடம் இராது.

ஹுமாயூன்: சேனாதிபதி, வீணாகக் காலதாமதம் செய்து கொண்டிருக்க வேண்டாம். நான் சித்தூருக்குப் போகாமல் இருக்க முடியாது. அதனால் எனக்கு என்ன தோல்வி ஏற்பட்டாலும் சரி.

[முன்பே முடிவு செய்துவிட்டது போலப் பேச்சு உறுதியோடு வருகிறது.]

சேனாதிபதி: பாதுஷா, நான் தங்களுடைய ஊழியன்; தாங்கள் இட்ட பணியைச் செய்வதுதான் எனது

வேலை. ஆனால் ஒரு பெண்ணுக்காகத் தாங்கள் ராஜ்யத்தை இழந்து விடுவதை நான் விரும்ப வில்லை.

ஹுமாயூன்: (அதட்டிய குரலில்) என்ன சொன்னாய்? பெண்ணுக்காகவா? அவளிடம் ஆசை என்று நினைக்கிறாய்?

சேனாதிபதி: இந்த நெருக்கடியான சமயத்தில் அதைச் சுட்டிக் காண்பிக்காமல் இருக்க முடியவில்லை... மன்னிக்க வேண்டும்.

[பணிகிறான்.]

ஹுமாயூன்: சேனாதிபதி, நீ இவ்வளவு பெரிய முட்டாள் என்று நான் இதுவரை அறியவில்லை. கருணாவதியை நான் பார்த்ததுகூடக் கிடையாது. அவள் தன் தோழி மூலம் எனக்குக் கங்கணம் அனுப்பினாள். என் தந்தை தன் கணவனுக்குச் செய்த தீங்கையும் கருதாமல் அவள் என்னைத் தன் சகோதரனாகவும், ஆபத்தில் உதவும் வீரனாகவும் கோரினாள். நான் உடனே ஏற்றுக்கொண்டேன். என்மீது அவள் கொண்டிருக்கிற நம்பிக்கைக்குப் பாத்திரமாக வேண்டாமா?

சேனாதிபதி: அதே சமயத்தில் உங்கள் நிலைமையையும் யோசித்துப் பார்க்க வேண்டும். வங்காளத்துப் போரிலே முதல் முறை தோல்வி அடைந்தோம். இப்பொழுது நமது படை எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு வந்ததால் வெற்றி கிடைக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இம்முறை தோற்றால் இந்தியாவில் உங்களுக்கு ராஜ்யம் கிடை யாது. தங்கள் மனைவி ஹமீதா பேகம் டெல்லியிலே

தனித்திருக்கிறாள். அவளைக் காப்பாற்றக்கூட முடியாமல் போய்விடும்.

ஹுமாயூன்: (யோசனையோடு) ஹமீதாவைப் பற்றித் தான் சிறிது கவலையாக இருக்கிறது. அவளைச் சிந்தூருக்கு அருகில் நான் முகாமிடும் இடத்திற்கு அழைத்து வர உடனே ஏற்பாடு செய். அவள் கர்ப்பவதியாக இருக்கிறாள் என்பது உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். ஒரு வேளை இங்கே நீ தோல்வி அடைய நேரிட்டாலும் ஹமீதா என்னுடன் இருப்பதுதான் நல்லது.

சேனாதிபதி: பாதுஷா, இவ்வளவு பிரயத்தனம் செய்து கிடைத்த வெற்றியை உதறித் தள்ளலாமா? தங்கள் மனைவியின் கர்ப்பத்திலுள்ள உங்கள் குழந்தை இந்தத் தேசத்திற்கு ஏக சக்கரவர்த்தியாக விளங்க வேண்டாமா?

ஹுமாயூன்: எனக்கு இப்பொழுது ராஜ்யம் பெரிதாகத் தோன்றவில்லை. நான் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வேண்டும். தேசத்தை இழந்தால் மறுபடியும் முயன்று அதை மீட்கலாம். ஆனால் வாக்கை இழந்து விட்டால், மறுபடியும் அதைப் பெற முடியாது.

சேனாதிபதி: கங்கணத்தைப் பெற்றதால் ஆபத்தில் உதவ வேண்டுமென்று நீங்கள் புறப்படுகிறீர்கள். ஆனால் உலகம் இதை வேறு விதமாகத்தான் நினைக்கும்.

ஹுமாயூன்: சேனாதிபதி, நீ கூறுகிற காரணங்களையெல்லாம் நான் நன்றாக அறிவேன். அவற்றையெல்லாம் தீர ஆலோசித்துத்தான் இந்த முடிவுக்கு

வந்திருக்கிறேன். இனி நான் அதை மாற்றப் போவதில்லை.

சேனாதிபதி: பாதுஷா, தங்கள் ஆணை.

ஹுமாயூன்: இங்கே வெற்றி கிடைத்தால் அது உன்னுடைய திறமையால் கிடைத்ததாகவே இருக்கும். அதை மனத்தில் வைத்துப் போரை நடத்து. தோல்வி யென்றால் எனக்கு உடனே தெரிவி. ஹமீதாவைப் பத்திரமாக எந்த ராஜ்யத்திலாவது ஒப்படைக்க வேண்டும் அல்லவா?

சேனாதிபதி: (மிடுக்கோடும் உறுதியோடும்) என் உயிர் உள்ள வரை அந்த நிலைமை ஏற்படாமல் நான் பாதுகாக்க முயல்வேன்.

ஹுமாயூன்: அதுதான் உண்மையான வீரனுக்கு அழகு. உன்மேல் எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் நான் முன்னெச்சரிக்கையோடு இருப்பது நல்லது. சேனாதிபதி, உடனே சென்று குதிரைப் படையை அனுப்பு. நான் புறப்பட இப்பொழுதே தயார்.

சேனாதிபதி: பாதுஷா, தங்கள் ஆணைப்படியே செய்கிறேன்.

[வணங்கிப் புறப்படுகிறான். ஹுமாயூன் யோசனையோடு உடமாடுகிறான்.]

### காட்சி நான்கு

இரவு 12 மணி இருக்கும். சித்தூர்க் கோட்டையின் அரசவையில் கருணாவதியும் பிரோமி இளவரசனும் உரையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பாக்ஜி: கருணாவதி தேவி, இந்த இரண்டு நாட்களாக உங்களுடைய வீர பராக்கிரமத்தாலேயே நமது

கோட்டைக்குள் பகைவன் நுழையாதபடி தடுத்து விட்டீர்கள்.

கருணாவதி: நான் ஒருத்தி என்ன செய்துவிட முடியும்? எல்லாம் நம் வீரர்களின் தியாகத்தால்தான் முடிந்தது.

பாக்ஜி: ஐந்நூறு வீரர்களை வைத்துக்கொண்டு மதிலில் ஏற்பட்ட பிளவைப் பாதுகாப்பதென்றால் சாமானியமான காரியமாகுமா அது?

கருணாவதி: தியோலி இளவரசே, என்னைப் புகழ்ந்தது இருக்கட்டும். நாளைக்கு என்ன செய்யலாம்? சொல்லுங்கள்.

பாக்ஜி: கோட்டைக்குள்ளே இப்பொழுது நூற்றைம்பது வீரர்கள் தாம் இருக்கிறார்கள். அவர்களிலும் பாதிப்பேர் காயமடைந்தவர்கள். இருந்தாலும் அவர்கள் சண்டையிடத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

கருணாவதி: இன்னும் ஒரு நாளைக்கு மதிலைக் காக்க முடியுமா?

பாக்ஜி: சாதாரணமாக இந்த வீரர்கள் பகதூரின் பெரிய சேனைக்கு முன்னால் ஒரு மணி நேரந்தான் நிற்க முடியும். உங்களுடைய தலைமையிலே வேண்டுமானால் நான்கு மணி நேரம் தாக்குப் பிடிக்கலாம்.

கருணாவதி: இன்னும் ஒரு நாளைக்குச் சமாளிக்க முடியுமானால் எனது எண்ணம் நிச்சயமாய் நிறைவேறிவிடும்.

பாக்ஜி: ஹுமாயூன் அதற்குள் வந்துவிடுவான் என்று நம்புகிறீர்களா?

[அவன் குரலில் ஐயம் தொனிக்கிறது.]

கருணாவதி: ஆம். அதில் உங்களுக்கு ஐயம் வேண்டாம்.

பாக்ஜி: தேவி உங்கள் நம்பிக்கையைக் குலைக்க எனக்கு விருப்பம் இல்லை. ஆனால் நாளைக்கு, மாலை வேளை வரையில் கூட நாம் சமாளிக்க முடியுமா?

கருணாவதி: ஒன்றிரண்டு நாட்களுக்கு முன்னால் [illegible] கடிதம் அனுப்ப முடியாமல் போய்விட்டது. ஆனால் என்னுடைய நம்பிக்கை உண்மையாவதையும் நான் காண முடியவில்லை. இளவரசே, இனி அதை எண்ணுவதில் பயன் ஏது? நாளைக்கு நீங்கள் தலைமை பூண்டு போர் செய்ய வேண்டும். உமது கடமையைச் செய்ய வேண்டிய சமயம் வந்து விட்டது.

பாக்ஜி: அதற்குத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன்.

கருணாவதி: நாளைக்கு நம் வீரர்கள் குங்கும உடை தரித்துக் கோட்டை வாசலைத் திறந்துகொண்டு எதிரிகளின் மேல் பாயவேண்டும். பெண்களெல்லாம் தீப்பாயத் தயாராய் இருக்கிறார்கள்.

பாக்ஜி: கருணாவதி தேவி, கடைசி மூச்சு உள்ள வரை பகைவர்களின் தலைகள் ஆயிரம் ஆயிரமாய் நம் கோட்டைக்கு முன்னால் உருளச் செய்வேன். கடைசி வரையில் உங்களுக்கும் சித்தூருக்கும் சேவை செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததை எண்ணி உள்ளம் பூரிக்கிறேன்.

[எழுந்து வணங்கிப் பெருமிதத்தோடு செல்கிறான்.]

கருணவதி: இளவரசே, உமக்கு எனது மனமார்ந்த நன்றி. நாளைக்கு அந்தப் பகதூர் கோட்டைக்குள் நுழைவானானால் இங்கு ஓர் உயிர்ப்பிராணியையும் பார்க்க மாட்டான்.

### காட்சி ஐந்து

மாலை நேரம். குதிரைப் படை தங்கியிருக்கும் முகாம். ஹூமாயூன் ஒரு கூடாரத்தில் அமர்ந்திருக்கிறான். அவன் முகத்தில் களையில்லை. அந்தச் சமயத்தில் சேனாதிபதி உடம்பில் பல கட்டுகளுடன் மெதுவாக உள்ளே நுழைந்து வணங்குகிறான்.

ஹூமாயூன்: யார், சேனாதிபதியா? இங்கே எப்படி வந்தாய்?

சேனாதிபதி: அங்கேயே என் உயிர் போகவில்லையே என்றுதான் வருந்துகிறேன்.

ஹூமாயூன்: நேற்றுவரை நடந்ததெல்லாம் எனக்குத் தெரிந்தது. கடைசியாக நீ கொண்டுவரும் சேதி என்ன?

சேனாதிபதி: ஒன்றும் சொல்லக் கூடியதாயில்லை. எல்லாம் தோல்விதான். நமது குதிரைப் படை மட்டும் அங்கேயே இருந்திருந்தால்.......!

[சோர்வால் ஆசனத்தில் சாய்கிறான்.]

ஹூமாயூன்: அது இருக்கட்டும், சேனாதிபதி, எனக்கு ராஜ்யம் போனதுபற்றி வருத்தமே இல்லை.

சேனாதிபதி: உங்கள் ராஜ்யத்தைப் பாதுகாக்கத் திறமையில்லாத நான் என்ன சேனாதிபதி? என்னை இப்பொழுதே சிரச்சேதம் செய்துவிடுங்கள்.

ஹுமாயூன்: சேனாதிபதி, உன்மேல் தவறென்றும் இல்லை. உண்மையில் நீ யுத்த களத்திலேயே உயிர் விட்டிருப்பாய். உன் உடம்பில் உள்ள காயங்களே அதற்குச் சாட்சி கூறுகின்றன.

சேனாதிபதி: அந்தக் காயங்களிலிருந்து அதிகமாக ரத்தம் பெருகி ஓடியதால் என் உடம்பு தளர்ந்து விட்டது. அப்படியே மூர்ச்சையாய் விழுந்துவிட்டேன். என்னை அங்கேயே சாகவிடாமல் சில வீரர்கள் தூக்கிக்கொண்டு வந்துவிட்டார்கள்.

ஹுமாயூன்: நல்ல காரியம் செய்தார்கள். உன்னுடைய சேவை எனக்கு இன்னும் வேண்டுமல்லவா?

சேனாதிபதி: இங்கே நடந்த விவரம் ஒன்றும் தெரியவில்லையே?

ஹுமாயூன்: அதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது. பகதூரை நம் வீரர்கள் விரட்டியடித்து விட்டார்கள். இப்பொழுது விக்ரமஜித்துதான் சித்தூருக்குப் பழையபடி ராணாவாக இருக்கிறார்.

சேனாதிபதி: பிறகு இதிலென்ன வருத்தம்? இதற்காகத் தானே உங்கள் ராஜ்யத்தையும் உதறித் தள்ளி விட்டு வந்தீர்கள்?

ஹுமாயூன்: நான் ஒரு நாளுக்கு முன்னதாகவே வந்திருக்க வேண்டும். வந்து சேருவதற்குள் நிலைமை மிஞ்சிவிட்டதால் ராணி கர்ணாவதிபாய் தீப் பாய்ந்துவிட்டாள்.

சேனாதிபதி: ராணியை நீங்கள் பார்க்கவில்லையா?

ஹுமாயூன்: (விசனத்தோடு) அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையில்லை எனக்கு. கங்கணத்தைப்

பெற்ற நான் என்னுடைய வாக்கைக் காப்பாற்றி னேன் என்று அவளுக்குக் காண்பிக்க முடிய வில்லையே என்றுதான் வருந்துகிறேன்.

சேனாபதி: ராணிபாய் முன்பே உங்களுக்குக் கடிதம் அனுப்பியிருக்க வேண்டும்.

ஹுமாயூன்: (நடந்துகொண்டே) அதுதான் எனக்கு விளங்கவில்லை. ஏன் இவ்வளவு நெருக்கடி வரும் வரை என் உதவியை நாடவில்லை என்பது மர்மமாக இருக்கிறது: கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவேன் என்ற நம்பிக்கை கடைசி வரையில் உண்டாகவில்லை போலிருக்கிறது.

சேனாபதி: இதற்காகவா நீங்கள் ராஜ்யத்தை இழந் தீர்கள்?

ஹுமாயூன்: (உறுதியோடு) அது போனால் போகிறது. இந்த உடம்பிலே உயிரும், இந்தக் கையிலே வாளும் இருக்கிறவரையில் இந்த ராஜ்யம் நினைத்தால் வரும். ஆனால் என் சகோதரி கருணாவதியின் உயிரை மீட்க முடியுமா? அவளுடைய ஆன்மா வாவது நான் கங்கணப் பரிசுக்குத் துரோகம் செய்ய வில்லையென்று அறிந்துகொண்டால் எனக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகும்.

திரை.